[illegible]
[illegible]

T.D.R.C. 3311
RRNo 176-3-93.

[illegible]
M93
117134

உ

ஸ்ரீதண்டபாணிதுணை.

# மனோரஞ்சிதநாடகம்.

இஃது

பழனிஸ்தலம்

மு-சந்தனமாசாரியார்

அவர்கள் சுவீகாரபுத்திரரும்

—(o)—

சிவசுப்ரம்ஹண்யகிருஷ்ணசாமி

பஜனைமடாதிபத்தியம்

வே-மௌனகுருருத்திரமூர்த்தி

ஆசாரியாரவர்கள்

சகோதரருமாகிய

—(o)—

வே-முத்தனாசாரியார்

அவர்களாலியற்றப்பட்டு,

ஆதிபுரி.

இரத்தினவேலுமுதலியாரது

வாணீவிலாசஅச்சுக்கூடத்தில்.

பதிப்பிக்கப்பட்டது.

MADRAS.

1893.

காப்பிரைட் ரிஜிஸ்டர்ட்

O--, 8 MHA4, M
M93

OFFICE OF BOOKS 23 SEP. 93 MADRAS.



உ

நடேசன்றுணை.

# குறிப்புகளினட்டவணை.

—()(*)()—

1. வேஷதாரிகள் * இவ்வடையாளத்திற்குப் பின்னால்வருஞ் சொற்களானது எந்தவேஷதாரியைச் சுட்டிக்காட்டுகின்றனவோ அவரிடங்கவனமாகச் சற்றுநிதானித்துச்சமயோசிதம்போல சம்பாஷித்தல்வேண்டும்.

2. முனிவர் வேஷதாரி ▣ இவ்வடையாளத்திற்குப்பின்னாற் சுட்டிக்காட்டுகின்ற தர்மசந்தானமஹாராஜாவேஷதாரியிடம் மனோரஞ்சிதபுஷ்பங் கொடுத்தல்வேண்டும்.

3. வேஷதாரிகள் ¶ இவ்வடையாளத்திற்குப் பின்னாலெந்தவேஷதாரிகளைச்சுட்டிக்காட்டப்படுகின்றனவோ அவர்களிடத்திற்படமும் நிருபமுங்கொடுத்தல்வேண்டும் அல்லது அவ்வசனங்களின் சாராம்ஸம்போல் நடந்துகொள்ளல்வேண்டும்.

4. பௌரோஹித வேஷதாரி *|* இவ்வடையாளமிட்டவிடத்திற்பஞ்சாங்கம் பார்க்கும்பாவனை காட்டல்வேண்டும்.

5. சேவக வேஷதாரி ‡‡ இவ்வடையாளமிட்டவிடத்திற் பௌரோஹிதவேஷதாரி கேட்குஞ்சகலசாமான்களுங்கொண்டுவந்து கொடுத்தல்வேண்டும்.

6. மனோரஞ்சிதப்பெண் வேஷதாரி §இவ்வடையாளமிட்டவிடத்திற் பௌரோஹித வேஷதாரிசொற்படி நடந்துகொள்ளல்வேண்டும்.

7. மதனசுந்தரமகாராஜாவேஷதாரி ὑ இவ்வடையாளமிட்டவிடத்திற் பௌரோஹித வேஷதாரிசொற்படி மனோரஞ்சிதப்பெண்வேஷதாரிக்குத் திருமாங்கல்யஞ்சூட்டல்வேண்டும்.

8 பௌரோகிதவேஷதாரி கல்யாணமஹோற்சவத்தி லெவ்வளவு விமரிசையான சீர்வரிசை நடத்தல்வேண்டுமோ அப்படிச்செய்துகொள்ளல்வேண்டும்.

9 $ இவ்வடையாளமிட்டவிடத்தில் மனோரஞ்சிதமென்னும் பெண்வேஷதாரி மதனசுந்தரமகாராஜா வேஷதாரியின்கை பிடித்தல்வேண்டும்.

10 இந்நாடகமானது மிகவிரிவாமென்றதையுத்தேசித்துச் சிலவிடங்களிற் கதையைச்சுருக்கப்பட்டிருப்பதால்வேஷதாரிகள்தங்களுடையயூகதிடசாமர்த்தியத்தாற்சபையோரஞ்சிக்கும்படியாயெந்தெந்தவிடங்களில்விஸ்தரித்தப்பாஷித்தல்வேண்டுமோ அப்படிச்செய்துகொள்ளல்வேண்டும் அன்றியுமிது நாடகமாதலின் சமயோஜிதம்போலசரித்தையெழுதப்பட்டிருப்பதினாலிதிலேதேனுமிலக்கிய விலக்கணவழுக்களிருப்பினும் பெரியோர்களெனையிகழாது புகழ்வீர்களெனவேண்டுகின்றனன்.

இங்ஙனம்.

வே-முத்தனாசாரி.

பழனிஸ்தலம்.



உ

ஸ்ரீ தண்டபாணி துணை.

# விளம்பரம்.

—(o)(*)(o)—

இதனாலன்பர்களியாவருக்கு மறிவிப்பதியாதெனில் (ஜாவளி) இந்துஸ்தான், த்யாகராஜக்ருதி, தில்லானா, நாடகத்தரு கீர்த்தனமுதலியவர்ணமெட்டுக்களால் யானியற்றிய சபாலுக்கு தர்மமாவென்னும் (மனோரஞ்சிதநாடக) மென்னுமிப்புத்தகத்தைச்சட்டு 1867 ஹு. ஜூலை 25 வது ஆக்டு 20 வதுபிரிவு 6 வது விதிப்படி மஹா கனம்பொருந்திய கெவர்ன்மெண்டில் ரிஜிஸ்டர்செய்து (ஆல்ரைட்ரிஜர்வெட்) என்னுஞ் சுதந்திரம்பெற்றிருக்கிறேனாதலின், இதனையெவ்வச்சுக்கூடத்தவர்களும் மற்றவர்களுமெனதனுமதியின்றி யெவ்விதமேனும் வேறுபாஷையில் மொழிபெயர்த்தேனுமச்சிடப்படாது மீறியச்சிடுவோர்களேற் கோர்ட்டார்மூலமாய் மேல்நடத்தப்படுமெனக் கண்டிப்பாயறிவிக்கலாயிற்று.

இந்தப்புஸ்தகந் தேவையானவர் சென்னைபெத்துநாய்க்கன்பேட்டை நாராயணமுதலி (52) வதுகதவிலக்கமுள்ள வீட்டில் ஸ்தாபித்திருக்கும் வாணீவிலாசவச்சுக்கூடத்தலைவர் ஆ. இரத்தினவேலுமுதலியாரவர்களிடத்திலும் பழனியிலெங்கள் சிவசுப்ரமண்யக்கிருஷ்ணசாமி பஜனைமடத்திலும் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

(இனிமேலச்சிடப்படும் புஸ்தகங்களாவன)

பழனிக்குறவஞ்சிநாடகம்
புஷ்பவிலாஸநாடகம்
மோகனசௌந்தரநாடகம்
தமிழறியும்பெருமாள்நாடகம்
கீதாசஜாவளித்திரட்டு
பழனியாண்டவர் பவனிக்கொம்மி
விக்டோரியாமஹாராணியவர்கள் ஒயிற்கொம்மி
வள்ளியம்மன்கோலாட்டப்பாட்டு
பிரபஞ்சபூர்வோத்ர சாரசங்கிரகம்
பழனியாண்டவர்விறலிவிடுதூது

இங்ஙனம்
வே-முத்தனாச்சாரியார்
பழனிஸ்தலம்.

உ

முருகன்றுணை.

# சாற்றுக்கவிகள்

கோயமுத்தூர் ஜில்லா

அவிநாசிக்ஷேத்திரத்தில் வசிக்கும்

நடராஜர்திருப்பணிதருமம்

ஸ்ரீமது

## சிவஞானதேசிகர்

அவர்களியற்றியது.

——()——

பதினறடியாசிரியவிருத்தம்

திகழ்கிரணசந்திராதித்தர் முறைபிசகினுந்
 திரைகடலிநீர்சுவறினுந்
நிலையளவுநீதிதவறுச் சுந்தராபுரிச்
 செழுமல்சுந்தரபாண்டியன்
செய்தமாதவவரபலத்தினிற் கடவுளது
 திருவருளினுதித்த
செல்விவித்துவதிட மநோரஞ்சிதத்தினது
 திவ்வியசரித்திரத்தைச்
சகலஜெகஸ்ருஷ்டிப்ரதாபபஞ்சப்ரம்ஹ
 சந்ததிபின்மேன்மைபெற்ற
சந்தனமகீபதி சுவீகாரபுத்ரனதி
 சம்பத்குபேரயோகன்
சந்ததமுவித்வஜன சங்கநிறைதென்பழனி
 தன்னின்மெஞ்ஞானவடிவாய்த்
தழைத்தசண்முக தண்டபாணிசெஞ்சரணமலர்
 தன்னைமறவாதநேமன்
மகிமைபெறுசெந்தமிழ்நூல் முத்தையன்சொன்ன
 மதுரரசநாடகத்தை
மங்களமிகும்பெரும்பூரில் வளர்பாஞ்சால
 வனிதைம்டலெழுதுநேசன்



வாய்ஜாலதாஷ்டீக பொன்னையபலக்குரிசில்
 மகிழவரோதயகுமாரன்
வாணாசலிர்குளிசீனை மறுத்துமென்மேனிதி
 வழங்குகாருணவதாரன்
சகாவ்னவசனதிட சாமர்த்தியவாருசீக
 துரைபன்புசோகதிவ்ய
சுந்தரவிநோதாதிபுரிபிறுரைரத்னவேற்
 பிரான்றலாலுக்ஷமிசெய்த
தூய்மையுளசெல்லை வர்ணவிலாசமென்னுநற்
 குலஸ்திரதீற்பதிகதாத்
தொல்லுலகமீதுசற்கீர்த்தி மென்மேலுந்
 துலங்கிடப்பெற்றனனரோ

———

பழனிஸ்தலத்தில்வசிக்கும்

வெள்ளைச்சாஹேபென்றுபெயர்

விளங்கிய

## முகம்மதுபதியு தீன்சாஹேப்

அவர்களாலியற்றியது.

———

(பதினறடியாசிரியவிருத்தம்.)

விண்மருவியொளிகதிர்த்தேர்தவிழவோங்கியுயர்
 வீறுதிருமதில்கள் கோட்டை
மேடைமாளிகைகூட கோபுரம்விமானம்
 விளங்கின்றதென்பழனிவாழ்
விற்பனகுமாரதண்டாயுதக்கடவுளிரு
 மெலலடிவணங்குநேமன்
வித்வவிஸ்வப்ரம்ஹ குலதிலகமெண்டிசையும்
 மேன்புகழ்படைத்தசுகுணன்
கண்ணெனுமிலக்கணவிலக்கியச் சூத்திரக்
 கடல்மடைதிறந்த வெள்ளங்
கலைவலோரவருஞ் சபாசெனும்படியமிர்த
 கவிமாரிபொழியுமேகங்
காவியபுராணஷட்சாஸ்திரமனைத்தின்
 கருத்தைப்பிரிக்கறபூமி

கலைவாணி நடனமிட்டன வரதுகரலங்
　　களித்திருக்கின்றபீடங்
தண்டாளமணிமாலி காபரணபுயவீர
　　தீரஷ்டகலாகலன்
சந்ததங்காயத்ரி மந்த்ர சந்த்யாவந்தன
　　சன்மார்க்கபுனிதசீலன்
தனமாதுசெறிமாந்தை யம்பதிதழைக்கவரு
　　தீனகீர்ணவதாரன்
சம்பத்குபோசந்தனவேள்சுவீகார
　　தனயபாஞ்சாலதேகன்
செண்டிணைகிகர்த்ததன மங்கையர்கண்மடலெழுது
　　திவ்யமன்மதவசீரன்
செந்தமிழ்வல்லன்முத்தையன் சொல்லுமனோரஞ்
　　சிதத்தினது நாடகத்தைச்
செல்வமோங்கும்பரம் பூரில்வளராறுமுக
　　செம்மல்மகிழ்கூர்ந்து சென்னைச்
சித்ரவாணிவிலாச வச்சிலிட்டெங்குநற்
　　சீர்த்திநிலை நாட்டினனரோ.

சாற்றுக்கவிகள்
முற்றிற்று.

—(*)—



உ
கணேசன்றுணை.

# மனோரஞ்சித நாடகம்.

காப்பு.

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.)

சந்திரனைநிகர்த்தமுக மாதுமனோரஞ்சிதத்தின்
　　சரிதைதன்னைச்
சுந்தரஞ்சேர்செந்தமிழி னன்மதுரநாடகமாய்ச்
　　சொல்லுதற்குப்
பந்தவினைதனைத்தவிர்த்துச் சாயுஜ்யபதமருளும்
　　பரமனீன்ற
கந்தமிகுந்தந்திமுகத் தெந்தையிருபொற்சரணங்
　　காப்பதாமே.

(சூஸ்த்ராவதாரி சொல்லுதல்.)

## சபைவணக்கம்.

ஸ்லோகம்.

சபாகல்பதரும்வந்தே வேதசாகோபஜீவிதம்
சாஸ்த்ரபுஷ்பசமாயுக்தம் வித்வத்ப்ரமரசோபிதம்

வசனம்.

நான்குவேதம், ஆறுசாஸ்திரம், பதினெண்புராணம், இருபத்தெட்டாகமம், முப்பத்திரண்டுதருமம், அறுபத்திநான்கு கலைக்ஞானம், தொண்ணூற்றாறுதத்துவம், மனுவிக்ஞானமுதலிய சர்வசாஸ்த்ரங்களுங் கற்றுணர்ந்த மஹா மேன்மைதங்கிய இம்மஹோன்னத சபையின்கண்ணுளதமிழ்க்கரசராக வீற்றிருக்கும் தவம் ஞானம் கல்வி அறிவு ஒழுக்கங்களுக்குரிய ஆன்றோரனைவர்க்கும் வந்தனம்.

சராசரம்படைத்த பிரமபனளித்த புராதனமான தராதலத்திருக்குந்தாயகமொத்தநேயர்களே! ஜவிதவிலக்கணங்களையு முணர்ந்து (சிங்காரம் வீரியம் பெருநகை கருணை இரௌத்திரம்

குற்சைசார்ந்தம்அற்புதம்பய)மெனுநவரசவலங்காரங்களோடுசெய்யுட்புனையவல்ல கவிவாணர்கட்குமுன் யானடாத்தப்போகின்ற சரிதையானது (பால்-தயிர்-நெய்-தேன்-கன்ன) லெனுமைங்கடலையுங்கடைந்து அமுதெடுத்தளித்ததுபோல (எழுத்து-சொல்-பொருள்-யாப்பு-அணி) என்னு மைந்திலக்கணமாகிய கடலைக் கடைந்து மனோரஞ்சிதமென்னு மங்கையினது திவ்யசரிதையை நடாத்தப்போகின்றமையால் இது பொருட்சோர்வு முதலிய குற்றங்களானிறைந்த புன்சொல்லாகினும் ப்ரமர மென்னும் வண்டினங்களானவைபுஷ்பங்களிலுற்ற மதுவையெவ்வாறுக்ருகித்துக்கொள்கின்றனவோ அதுபோலஇன்னாடகமோர்கற்பகவிருக்ஷமாகவும் யானவ்விருக்ஷத்திலுற்பவித்த புஷ்பமாகவும் என்வசனசாதுர்யங்களானவைமதுரமாகவும்பாவித்துஇவ்வரங்கசபையின்முன் நெறிநின்றறியா அறிவிற்சிறியேன் பலகலைகற்றுவெல்லத்துணிந்தோர்போல சிலகலைகற்றுச்சொல்லத் துணிந்ததுதனைப்பிள்ளைச் சொல்லினுள்ளப் பிழைபோலெள்ளத்துணியாதென் வெள்ளைச் சொல்லினுள்ளப்பொருளைக் கொள்ளக்கடவீர்களென ப்ரார்த்திக்கின்றனன்.

## கடவுளைப்போற்றவேண்டிய ஞாயங்கேட்குதல்.

—(*)—

வெண்பா.

அகரமுதலவெழுத்தெல்லாமாதி
பகவன்முதற்றேயுலகு

என்னுங்குறள் வெண்பாவினால் அகரம்எழுத்துக்களுக்கெல்லாமுதலாதல்போல ஆதிபகவான் உலகத்திற்கு முதலாமென்னுங் கருத்தைத் திருவள்ளுவநாயனார் வெளியிட்டருளியபடி புகையைக்கண்டு நெருப்புண்டெனவறியு மனுமான ப்ரமாணத்தால் உலகத்தோற்றத்தைக்கண்டு அதற்காதியாகிய கடவுளொருவருண்டென்று கொள்ளல்வேண்டும்.

யாதெனில் சூரியனலன்றிமலர்கின்றவைமலரவும் உருகின்றவையுருகவும் இருகின்றவையிருகவுங்கூடுமோ கூடாதே அது



போல அகிலலோகங்களுக்குந் தாமேகாரணமாகி தமக்கொருகாரணமில்லாதுவிளங்கியகடவுளாலன்றிஎல்லாவுயிர்களும்அபிவிர்த்திப்பதற் குபயுக்தமாகமழைபெய்யும்பருவத்திற்பெய்யவும்வெயில்காயும் பருவத்திற்காயவும் காற்றுவீசும்பருவத்தில் வீசவும் பொழுதுவிடியும் பருவத்தில்விடியவும் அஸ்தமிக்கும்பருவத்திலஸ்தமிக்கவுங்கூடுமோ கூடாதாகையாற் கடவுளிருக்கின்றாரென்பதுதிண்ணம்.

அன்றியும் அப்பேர்க்கொத்த காரணக்கடவுளானவர் ப்ரபஞ்சத்தில் நால்வகையோனி எழுவகைத்தோற்றம் எண்பத்துநான்குலக்ஷம் யோனிபேதங்களாயுள்ள சரீரங்களைப்படைத்தனர். அவற்றில்.

(நால்வகையோனியாவன.)

(சராயுசம்-அண்டசம்-சுவேதசம்-உற்பிச) மென்னான்காம் இவற்றிற்பையிற் கட்டுப்பட்டுப் பிறப்பதுசராயுசமும்-முட்டையிற்கட்டுப்பட்டுப் பிறப்பதுஅண்டசமும்-வியர்வையிடமாகப்பிறப்பது சுவேதசமும்-பூமியிடமாகப்பிறப்பது உற்பிசமுமாம்.

(எழுவகைத்தோற்றமாவன)

தேவர்-மக்கள்-விலங்கு-புள்-ஊர்வன - நீர்வாழ்வன தாபரமென வேழாம். இவற்றில்.

(எண்பத்துநான்குலக்ஷம் யோனிபேதங்களாவன)

தேவர்பேதம் பதினாறுலக்ஷமும், மக்கள்பேதமொன்பதுலக்ஷமும், விலங்குபேதம்பத்துலக்ஷமும், புட்பேதம்பத்துலக்ஷமும், ஊர்வனபேதம் பதினொருலக்ஷமும், நீர்வாழ்வனபேதம்பத்துலக்ஷமும், தாபரபேதம் பதினெட்டுலக்ஷமுமென, வெண்பத்துநான்குலக்ஷம் யோனிபேதங்களேயாம்.

(இவற்றிற்குவிபரமாவன.)

(தேவ,காந்தர்வ,சித்த,சாத்ய,கின்னர,கிம்புருட,வித்யாதர,யக்ஷ ராக்ஷத, பூத,ப்ரேத,பைசாச,சாகினி, டாகினி, வேதாள,தியான) தேவசரீரங்களும் (மனுமாந்தாதி சக்ரவர்த்தி ப்ராம்மண க்ஷத்திரிய வைஸ்ய சூத்ரர்) முதலியநரசரீரங்களும்(காமதேனு சிம்ஹ) முதலானமிருகசரீரங்களும் (அன்னம்கருடன்) முதலானபக்ஷிசரீரங்

களும் (சேடன்எறும்பு) முதலியஊர்வனசரீரங்களும் (மகரமச்சகூர்ம) முதலாகிய நீர்வாழ்வன சரீரங்களும் (கற்பகவிருக்ஷம்பாரிஜாத) முதலியதாபர சரீரங்களுமாம்.

இவைகளில்ஆண்பெண் இரண்டுஜாதியாய் ஜீவாத்மாக்கள் பிரதிபலித்து வாழையடிவாழையா யுற்பவித்து வருவதுமன்றிப் பூர்வத்திலித்தேவர் முதலியவெண்பத்து நான்குலக்ஷம்பேதமாயுள்ள சரீரங்களும்நசித்துப்போனதா யனேகசாஸ்திரங்களிற்கண்டிருக்கின்றோமன்றியுமிப்படியே சத்யவர்த்தமான காலத்திலுமிருக்கின்ற (மாதாபிதா) முதலானசகலசரீரங்களும் நசிப்பதுப்பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கின்றோம். இனிப்பிறக்கப் போகின்ற சகலசரீரங்களுமிப்படியே நசிக்குமென்பதற்கையமில்லை. இப்பவுதிகமான சகலசரீரங்களுமனித்யமே. ஆதலின்நீர்மேற் குமிழிபோன்றவிச்சடல முள்ளபோதே நம்பகவனைப்பூஜித்து மோக்ஷசாதனத்திற்கு வேண்டியசித்தியைப் பெறல்வேண்டு மென்பது சித்தாந்தம்.

(இதற்குத்ருஷ்டாந்தமாவன.)

வெண்பா.

மலர்மிசையேகினான் மாணடிசேர்ந்தார்
நிலமிசைநீடுவாழ்வார்

(இதன்கருத்தாவது) கடவுளடியைச் சேர்பவர்கள் மோக்ஷத்தில்வாழ்வார்களெனத் திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றார்.

ஆகையாலெவற்றினு முக்யமாகிய மானிடதேகங்கிடைப்பதரிது அப்படிக்கிடைத்தபோதிலும் பாபபுண்யங்களைப் பகுத்தறிந்துநித்யாநித்ய வஸ்துவிவேகமுண்டாய் உயிர்கள் முமுக்ஷித்துவமென்னு மோக்ஷப்ராப்தியாகும்படி யறிவைவிளக்குந் தன்மையையுடையதாகிய வோர்கல்விப்பொருளை யொருவன்சம்பாதிப்பதுமிகவுமரிது அப்பேர்க்கொத்த கல்விப்பொருளாவது.

விருத்தம்.

தெள்ளமுதமனையகல்விப் பொருள்படித்திடிற்
றேசமெல்லாந்துதிக்குஞ்





ஜெயஸ்தம்பமான்புகழ் நிலைநிற்குமிவையலாற்
செம்பொன்மிரு செல்வமதுபோல்
வெள்ளமதுகொள்மெனும் பயமில்லைகனலினால்
வெம்பவருசலனமில்லை
வேந்தர்கள்பறித்திடக் கூடாதுசோதரர்
விரும்பினும் பங்குறாது
கள்வராற்றிருடவும் முடியாதுவரவரக்
கனமலாற்குறைவுறாது
கருணைஞானந்தழையுமாகையாலுனையிதய
கமலத்தில்வைப்பதெழிதாம்

---

என்றுஆன்றோர்களாற் கூறப்பட்டிருக்கின்றது.

அதாவது செல்வப்பொருள்போல வெள்ளங்கொண்டுபோகாததும் நெருப்பில்வேகாததும் கள்ளர்களபகரிக்காததும் காவல்செய்யவேண்டாததும் அரசர்களால்வவ்வப்படாததும் தாயத்தாரற்பங்கிட்டுக்கொள்ள முடியாததும் விரும்பினவர்கட்கெல்லாந்தடையின்றி வழங்கினாலுமென்மேலும்வளர்வதன்றிக்குறைவுபடாததும் அஞ்ஞானமாகிய பிணிக்குமருந்தாயுமிருப்பதினால் அதனைச்செல்வப்பொருளினுஞ் சிறந்ததாகக்கருதி (இளமையிற்கல்) என்று அவ்வை வாக்கியத்தினுங் கூறப்பட்டிருக்கின்றது ஆதலின்ஈசனைப்ரத்தியக்ஷமாகத் தரிசிக்கக்கூடாவிடினுஞ்செல்வப்பொருளினுஞ்சிறந்தகல்விபொருளைக் கொண்டேனும்அக்கடவுளினுபயபதாம்புயமலரைப்பூஜித்துப்பரகதிக்காளோவோமாக.

இப்போதுமஹாசிறப்புற்றோங்கிய கைலாசகிரியில்அரசிருக்கைமண்டபத்தில் ப்ரம்ஹாதிமுப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரமுனிவர்களும் கின்னரர் கிம்புருடர் கருடர் காந்தர்வர் சித்தர் வித்தியாதரர் முதலிய சர்வத்ரதேவர்களும் வணங்கிச்சூழும்பார்வதி சமேதரும் சுத்தசாக்ஷாத்காருண்யக்கருணைப்ரவாகப் பிழம்புமாகிய சிவபெருமானது ப்ரதமபுத்ரரும் வல்லபைக்கினிய மித்ரருமாகிய விசாலமானகபோலங்களையுடையமலைபோன்றகஜமுகக்கடவுளைஸ்மரிக்கப்போகின்றனன்.

——[0]——

# சூஸ்த்ரதாருக்கும்விதூஷகனுக்கும்

## தர்க்கம்.

(சூஸ்த்ராவதாரி-வசனம்) யானோஇப்பொழுது சர்வஜனங்களுஞ்சூழ்ந்திராநின்ற இவ்வரங்கசபையினிடத்திற்சிவபெருமான் புதல்வனாகிய கணநாதனை ஸ்மரிக்கப்போகுந் தருணத்தில்யாரோவொருவனவலக்ஷணத்தோடிங்குப்ராப்தமாயிருக்கின்றான். அவனையாரென்று விசாரிக்கின்றேன். அடாநீயார்? ஆஆ என்ன ஆச்சர்யமாயிருக்கிறது. யாரென்றுகேட்கவொன்றும்புகலாது மௌனஞ்சாதிக்கின்றான். நல்லதுஇன்னுஞ் சமீபத்திற்போய்விசாரிக்கின்றேன். அடாநீயார்?

(விதூஷகன்-வசனம்.) வாழைப்பழத்தையுரித்துக் கொடுத்துத்தின்கச் சொல்லியாரும் அப்பொழு தென்னையுமக்கின்னானென்று தெரியும்.

(சூஸ்-வம்.) ஆ ஆ இவன்றுவார்த்தையைக் கேட்டமாத்திரத்திலத்யந்த சந்தோஷமுண்டாயிற்று. அடாவுனதுநாமதேயம் யாது.

(விது-வம்.) உமதுநாமதேயம்யாது.

(சூஸ்-வம்.) அடா! எனதுநாமதேயம் நாடகாலங்கார சூஸ்த்ராவதாரி என்று சொல்லப்படுவேன்.

(விது-வம்.)சூஸ்த்ரமென்றால் நூலுக்குப்பெயர். சூஸ்த்ராவதாரியென்றால் நெய்பவர்களென்றருத்தமாம். ஆதலின் உமது வாக்யத்தால் தேவாங்கசெட்டியாமென்று வெளியாகின்றது. எனதுபெண்சாதிக்குப் பட்டுச்சேலையொன்று நெய்துக்கொடும் பார்ப்போம்.

(சூஸ்-வம்.)சே துஷ்டா! என்னவார்த்தை பாஷிக்கின்றனை நல்லது வுனதுநாமதேயத்தைச்சொல்வாயாக.

(விது-வம்.)எனதுநாமதேயம் விதூஷகனென்று சொல்லப்படுவேன்.

(சூஸ்-வம்.)விதூஷகனென்றால் யாது.



(விது-வம்.)யானிப்பேர்க்கொத்த வரங்கசபையைக் கண்டவுடன் அத்யந்தசந்தோஷத்துடன்வந்து சபையை யிரஞ்சிக்கச் செய்யக் கூடியவனாதலால், யான்பிறந்தன்றே யெனது பேரனைவத்தபெயர்.

(சூஸ்-வம்) நல்லது, இப்பேர்க்கொத்த வரங்கசபையைக் கண்டவுடன்அத்யந்தசந்தோஷத்தோடுவரக்கூடியவனெனப் புகன்றனையே யதன்விர்த்தாந்தம் யாது.

(விது-வம்.) ஹேசூஸ்த்ராவதாரியாரும்.

ஸ்லோகம்.

ககனேகாகரத்னனி - க்ரஹரத்னனிமூஷிகா
சயனேமட்குணரத்னனி - சபாரத்னனிவிதூஷஹா

அதாவது காகங்களானவை ஆகாயத்திற்கழகு, பெருச்சாளிகளானவை வீட்டிற்கழகு, மூட்டைப்பூச்சிகளானவை நித்திரைக்கழகு, இப்போர்க்கொத்த வரங்கசபைக்கியானதானழகு யானில்லாவிடிலொன்றுஞ் சோபிக்கப்படமாட்டா.

(சூஸ்-வம்.) சே துஷ்டா! என்னவார்த்தை சம்பாஷிக்கின்றனை, ஸ்லோகங்களைக்கூட்டிப்புரட்டுதற்குக்கற்றுக்கொண்டாயா வென்ன?

ஸ்லோகம்.

ககனேநவரத்னனி - க்ரஹரத்னனிபாலஹா
சயனேஸ்ரீரத்னனி - சபாரத்நானிபண்டிதஹா

அதாவது சூரியன் சந்திரன் முதலிய நவக்ரஹங்கள் ஆகாயத்திற்கழகு, பாலர்கள்வீட்டிற்கழகு, பெண்கள் சயனத்திற்கழகு, இவ்வரங்கசபைக்கென்னைப்போலொத்த வித்வாம்ஸானழகென்று ஸ்மிருதிகளாற் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படியிருக்க மித்ரபேதமாக ஸ்லோகத்தைப் புரட்டிப்பொய்யானதாத்பர்யத்தைச் சொலலத்தொடங்கினாயல்லவா துஷ்டா இப்பேர்க்கொத்த கெட்டநடத்தையை விட்டுவிடுவாயாக.

(விது-வம்.) ஹே சூஸ்த்ராவதாரி தமதுத்திரவின்படிநடக்கச் சித்தமாயிருக்கின்றேன். நல்லது இப்போதிவ்விடத்திற் கெஞ்சாக்குடுக்கைகளைப்போற்றெருங்குகின்றனவே அவையாவை.

(சூஸ்-வம்.) அடா அவைகளைத்தான் க்ளோப்பென்றுசொல்லப்படும்.

(விதூ-வம்.) இன்னுங்கோணல்மாணலாகத்தொங்குகின்றனவே அவையாவை.

(சூஸ்-வம்.) அடா அவைகளைத்தான் வால்ஷெட்-க்ளோப்-க்ரீன்க்ளோப்-சட்டிக்ளோப்-மூன்லேடி-லஸ்டரென்று சொல்லப்படும்.

(விதூ-வம்.) நல்லது அதனுள்வெள்ளை வெள்ளையாயொழுகுகின்றனவே அவையாவை.

(சூஸ்-வம்.) அடா அவைகளைத்தான் மெழுகுவர்த்திகளென்று சொல்லப்படும்.

(விதூ-வம்.) மிழகுவறுத் தாற் குழம்புக்காகாதாவென்ன?

(சூஸ்-வம்.) என்னடாதுஷ்டா (தட்டிக்கேழ்க்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்ரசண்டன்) என்பதுபோலே பாஷிக்கின்றனை.

(விதூ-வம்.) வெரிவெல் சூஸ்த்ராவதார் நீரிப்போதிவ்விடத்திற் ப்ராப்தமான காரணம்யாது, இவிடத்திற் சூழ்ந்திருக்கும் சபையாது, இப்போதென்னவிசேஷங்கள் நடக்கப்போகின்றன.

(சூஸ்-வம்.) அடா மஹாசிறப்புற்று நீர்வளமிகுந்து செந்கதிர்செழிக்கப்பெற்ற சுந்தராபுரியென்னும் பட்டணத்திற்கிறைவனாகிய சுந்தரபாண்டிய மஹாராஜாவின் புதல்வி மனோரஞ்சிதமென்னு மங்கையினது திவ்யசரிதையை நடாத்துவதற்காகச் சிவபெருமானது புதல்வனாகிய கணநாதனைஸ்மரிக்கப் போகின்றனன் அதற்காக இச்சபை சூழப்பட்டிருக்கின்றது.

(விதூ-வம்.) ஆ ஆ வெகுசந்தோஷமுண்டாயிற்று.

(சூஸ்-வம்.) நீயுமென்னுடன் கூடவரவேண்டும்.

(விதூ-வம்.) அப்படியே வருகின்றேன்.

——(0)——



(சூஸ்த்ராவதாரி சொல்லுதல்.)

## கணேசஸ்தோத்ரம்.

கருத்தினில் வளர்நோக்கு மேகாம் பரியே
என்னும்கீர்த்தனையின் வர்னமெட்டு
இராகம்-பியாகு-தாளம்-ஆதி

பல்லவி.

சுந்தரகுஞ்சரமுகனே துணைவருவாய்சரணம்

அநுபல்லவி.

சுந்தமலர்த்தாரா திருமந்திரகெம்பீரா தனி
காருங்கனிதிருத்தயை கூருஞ்சரணம் (சுந்)

சரணங்கள்.

சந்திரசேகரா தர்மருணாகரா-தேவா
தஞ்சமெனநானேயுனை யஞ்சலிசெய்தேனே நல
சமய மிது வுமையா ளருள் குமரா சரணம் (சுந்)
ஞானவினோதனே நளினபொற்பாதனே தேவா
நம்புமகன்மீது மிகு வம்பு செய்வதேது கண
நாதா மனு நீதா மறை வேதா சரணம் (சுந்)
தேவர்சகாயனே தேன்கனிவாயனே தேவா
சித்தமிரங்காதா வலு சித்தமென்னவாதா-வி
சித்ரகவி முத்தை பண்பூ சித்த குருவே (சுந்)

ஸ்லோகம்.

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரசன்னவதனம் த்யாயே சர்வவிக்னோப சாந்தயே......*(க)
அகஜானனபத்மார்க்கம் கஜானன அகர்நிசம்
அனேகதந்தம் பக்தானும் ஏகதந்தமுபாஸ்மஹே.........*(உ)

விருத்தம்.

சீதகங்கையு லாவுசெஞ்சடை நாதனாருள் பாலகா
போதகங்களர் மாமுகம்பெறு பூதவீரக னாதிபா
வேதசுந்தர கீதமந்த்ரவி னோதசண்முக சோதரா
ஆதியந்தமி லாதபுங்கவ நீதஞானகுரு பாகரா

(சூஸ்த்ராவதாரி-வசனம்.) சதுர்ப்புஜபூதரா! சந்த்ரஜடாதரா! சாமிசண்முகசகோதரா! சரசவல்லபை மனோகரா! சர்வஜீவதயாபரா! ஹேலம்போதரா! புடைபரவு கடலுலகு-வருதுங்க-மூஷிகவாகனதுரங்க- அத்விதாந்தரங்க - அகளங்க - வெகுதுங்க-வடையொடுபடர்ந்த- மதுரித- அதிரச பாயாசவர்க்கபோஜனு! நித்யானந்தமுக்திராசனு! தாசரிர்தயாசனு!ஜனகாதிவந்திததடகரடகடவிகட-ஜெயகும்பகெம்பீரதாரா - பக்தோபகாரா!திரிநேத்ரா! நிடகனுக்காத்ரா! இப்பழனிஸ்தலக்ஷேத்ர - நிகழ்சூஸ்த்ராவதாரிஸ்தோத்ரம் அனுமாத்ரம்அருள்செய்வாயெனதையனே! மெய்யனே! பாசாங்குசக்கையனே! நினதடியாரினெண்ணம்-ஈடேறும்வண்ணம்- க்ருபைசெய்வாயாக-தேவாவந்தனம்புரிகின்றேன்.

(கணேசன்-வசனம்) கல்யாண் தாம்யாவர்

(சூஸ்-வம்) யானின்னாடகத்தை நடாத்துகின்றசூஸ்த்ராவதாரி.

(கணே-வம்.) ஹேபாலகா! ஸ்ரீமன்மஹாகைலையங்கிரியிலசருளிமுப்பத்துமுக்கோடி தேவர்களும் - நாற்பத்தெண்ணாயிரம் ரிஷீஸ்வராளும் (நந்தி-ப்ருங்கி-அமரர்-சித்தர்-அசுரர்-தைத்யர்கருடர்-காந்தர்வர்-இயக்கர்-வித்யாதரர்-பூதர்-பைசாசர்-அந்தரர்முனிவர்-உரகர்- ஆகாயவாசிகள்-போகபூமியர்) முதலியசகலதெய்வகணங்களும் புடைசூழும்படியாயெனதுமாதாவாகிய பர்வதராஜபுத்ரியினது வாமபாகத்தில்வீற்றிருக்குந் தருணத்தில், இங்ஙனம்ஸ்லோகபூர்வகமாகஸ்மரித்தனையே,யத்ஸ்லோகத்தைக்கேட்டகமகிழ்ந்திங்ஙனம் ப்ராப்தமாகினோம்,தமக்குயாதுசங்கடம்நேரிட்டது கோரியவரத்தைக்கேள் தந்தருள்வோமாக.

(சூஸ்-வம்.) ஹேதேவா! நின்றிருவருளுற்ற - மகிமையைப்பெற்ற-வித்யாவிநோத-நித்யசங்கீதவிலாசக் கம்பெனி மெம்பர்கள் - இன்றிரா ஏழுமணிமுதல் மூன்றுமணிவரையிலும் (மனோரஞ்சித)மென்னுமங்கையினதுதிவ்யசரிதையைநடாத்தப்போகின்றமையால் இன்னாடகத்திற்கும் இன்னாடகபால்யர்களுக்கும்யாதோருவிக்னமும் நேரிடாமல் அன்புடனேக்கியருடனேத்தேச்சிநிர்விக்னமாக முடியும்வண்ணம் க்ருபாகடாக்ஷவீக்ஷண்யம்பாலித்தருளவேண்டுந் தேவா.



(கணே-வம்.) ஹேபாலகா! தாம்நடாத்தும் நாடகத்திற்கு யாதோரிடையூறின்றி சம்பூர்ணமாய் முடிவுறும்படிநமதாசீர்வாதமளித்திருக்கின்றோம்- இன்னும்ப்ரம்ஹபத்னியாகியவாணியைகோக்கிஸ்மரிப்பாயாகிலவளும் பூர்ணாசீர்வாதமளிப்பள்.யாம்நமதுஸ்வயஸ்தானமாகிய கைலையங்கிரிக்கேக விடையளிப்பாயாக.

(சூஸ்-வம்.) தேவாவந்தனம் புரிகின்றேன்.

(கணே-வம்.) கல்யாண்பாலகா.

## விதூஷகன் கணேசனை

### விகடப்ரசங்கஞ்செய்தல்.

(விதூஷகன்-வசனம்.) தேவாவந்தனம் புரிகின்றேன்.

(கணேசன்-வசனம்.) கல்யாண்-தாம்யாவர்.

(விதூ-வம்.) யானின்னாடகத்தை யிரஞ்சிக்கச்செய்யும் விதூஷகன்.

(கணே-வம்.) தமக்குயாதிச்சை.

(விதூ-வம்.) ஹேதேவா! தமது க்ருபாகடாக்ஷ வீக்ஷண்யத்தாலெனக்குச்சகலஐஸ்வர்யங்களு மிருக்கின்றன - ஆகினுமோர்குறைநேரிட்டிருக்கின்றது அதற்காகத்தம்மிடம்வரலாயிற்று.

(கணே-வம்.) அதுயாது.

(விதூ-வம்.) எனதில்லாளசிபுடைக்குமுறமில்லா தவஸ்தைப் படுகின்றனளாதலின் தமதங்கத்திலுற்ற செவியென்னுமுறத்தைக் கொடுத்தருள ப்ரார்த்திக்கின்றனன்.

(கணே-வம்.) சேதுஷ்டாநீயென்றும்விதூஷகனுக்கடவை

(சூஸ்த்ராவதாரிசொல்லுதல்)

## சரஸ்வதிஸ்தோத்ரம்.

பருவாமேறு-பராமேனு.

என்கிறஜாவளியின்வர்ணமெட்டு

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

சரஸ்வதியேசரணம்.

அநுபல்லவி.

சுரர்முனிவரர்துதி சாதஞான (சரஸ்)

சரணங்கள்.

சந்ததமுமெளியேன் சிந்தைதனிலிருந்து
செந்தமிழ்பாடவரந் தந்தருள்ஞான (சரஸ்)
கஞ்சதளாசனி கம்லவிலோசனி
அஞ்சலுடனேயெனை யாளும்ஞான (சரஸ்)
பத்தியுடனேதின முத்தையன்பணிந்திடும்
அத்துவிதப்பொருளா யமர்ந்தஞான (சரஸ்)

ஸ்லோகம்.

சரஸ்வதி நமஸ்துப்யம் வரதேகாம ரூபணி
வித்யாரம்பம் கருஷ்யாமி சித்தர்ப்பவதுமேஸதா. (௧)
பத்மபத்ர விசாலாக்ஷி பத்மகேசரவர்ணினி
நித்யம்பத்மலயாதேவி சாமாம்பாதுசரஸ்வதி. (௨)

——(*)——

விருத்தம்.

வேதமங்கள் கீதசுந்தர மாதெனும்பரி பூரணி
போதமந்த்ரவி நோதசம்ப்ரம பூவையிங்கித காரணி
தாதனின்புக ழோதிடும்படி தானுகந்தரு ணாரணி
பாதபங்கய சேவைதந்திடு பாதண்டமிழ் வாணியே.

(சூஸ்த்ராவதாரிவசனம்.) ஹேவாணி!வேதபுஸ்தகபாணி!நித்யவருட்கல்யாணி!திவ்யபரிமள புஷ்பவேணி!ம்துரிதவசனகேணி!பத்மாசனி ! சாபவிமோசனி ! பாபநாசனி!கமலவிலோசனி ஞானகாயத்ரி! சாவித்திரி ! குங்குமதனவிசித்ரி ! ரத்னாபரணி! சந்த்ரமுகாரவிந்தகிரணி!தூயசெஞ்சரணி ! க்ருபாநேத்ரிஇப்பழனிஸ்தலக்ஷேத்ர நிகழ்சூஸ்த்ராவதாரி ஸ்தோத்ரம்அனுமாத்ரம் அருள்செய்வாயெனதன்னமே!சொர்னமே! நினதடியாரினெண்ணம் ஈடேறும்வண்ணம் க்ருபைசெய்வாயாக. தேவி!வந்தனம்புரிகின்றேன்.



(சரஸ்வதி-வசனம்.) கல்யாண்தாம்யாவர்?

(சூஸ்-வம்.) யானின்னாடகத்தை நடாத்துகின்ற சூஸ்த்ராவதாரி.

(சரஸ்-வம்.) ஹேபாலகா ! யாம்ப்ரம்ஹலோகத்தில் (இரம்பை - ஊர்வசி-மேனகை - திலோர்த்தமை) யென்னும்தேவமாதர்களுடன் வீணைமீட்டிக்கொண்டிருக்குந் தருணத்தில், இங்ஙனம் ஸ்லோகபூர்வகமாகஸ்மரித்தனையே ! யத்ஸ்லோகத்தைக்கேட்டகமகிழ்ந்திங்ஙனம்ப்ராப்தமாகினோம். ஹேபாலகா!தமக்குயாதிச்சை,கோரியவரத்தைக்கேள் தந்தருள்வோமாக.

(சூஸ்-வம்.) ஹேதேவி ! நின்றிருவருளுற்ற- மகிமையைப்பெற்ற-வித்யாவிநோத - நித்யசங்கீதவிலாசக்கம்பெனி மெம்பர்கள் இன்றுராா ஏழுமணிமுதல் மூன்றுமணிவரையிலும் (மநோரஞ்சித) மென்னுமங்கையினது திவ்யசரிதையைநடாத்தப்போகின்றமையால், இன்னாடகத்திற்கும் இன்னாடகபால்யர்களுக்கும் யாதொருவிக்னமும் நேரிடாமல்- அன்புடனோக்கி - அருட்டினைத்தீதக்கி-நிர்விக்னமாகமுடியும் வண்ணம்க்ருபாகடாக்ஷவீக்ஷண்யம்பாலித்தருளல்வேண்டுந் தேவி.

(சரஸ்-வம்.) ஹேபக்தா ! தாம்நடாத்தும்நாடகத்திற்கு,யாதோரிடையூறின்றி சம்பூர்ணமாய் முடிவுறும்படி நமதாசிர்வாதமளித்திருக்கின்றோம். நம்ஸ்வயஸ்தானமாகியப்ரம்ஹலோகத்திற்கேகவிடையளிப்பாயாக.

(சூஸ்-வம்.) தேவிவந்தனம்புரிகின்றேன்.

(சரஸ்-வம்.) கல்யாண்பக்தா.

——()——

## விதூஷகன்-சரஸ்வதியை

### விகடப்ரசங்கஞ்செய்தல்.

——(o)——

(விதூஷகன்-வசனம்) தேவிவந்தனம்புரிகின்றேன்.

(சரஸ்வதி-வசனம்.) கல்யாண்-தாம்யாவர்?

(விதூ-வம்.) யானின்னாடகத்தை யிரஞ்சிக்கச்செய்யும் விதூஷகன்.

(சரஸ்-வம்.) தமக்குயாதிச்சை?

(விதூ-வம்.) ஹேதேவி! தமதுக்ருபாகடாக்ஷவீக்ஷண்யத்தாலெனக்குச் சகலஐஸ்வரியங்களு மிருக்கின்றன, ஆகிலுமோர்குறை நேரிட்டிருக்கின்றது, அதற்காகத்தம்மிடம் வரலாயிற்று

(சரஸ்-வம்.) அதுயாது?

(விதூ-வம்.) எனதில்லாள் ளின்னம்பவைக்க அதிப்பையில்லா த்வஸ்தைப் படுகின்றாளாதலின், தமதுகரத்திலுற்றதம்பூரெண்னுமகப்பையைக் கொடுத்தருள ப்ரார்த்திக்கின்றனன்.

(சரஸ்-வ-ம்.) சே மூர்க்கா! நீயென்றும் விதூஷகனாகக்கடவை.

—*—

(கூஸ்த்-வம்.) ராஜாதிராஜன் ராஜகெம்பீரன் ராஜமார்த்தாண்டன் ராஜகோலாகலன் ராஜவிற்பன்னன் - ராஜசம்பன்னன் ராஜசம்போகன் ராஜவெர்ரியரான் சுந்தராபுரிக்கிறைவனாகியசுந்தரபாண்டியமகாராஜா கொலுவுக்கு வருகின்றார் எச்சரிக்கை பராக்கு.

—o]*[o—

உ

கண்ணபிரான்றுணை.

# மனோரஞ்சிதநாடகம்.

—(*)—

சுந்தரபாண்டியமஹாராஜன்

முதலாவது சபை.

விருத்தம்.

அந்தணர்மறைகள்பாட வரிவையாநடனமாடச்
செந்தமிழ்வலர்கொண்டாடச் சிஷ்டர்கள்புகழ்பேச
மந்திரிமார்கள்கூட மருவலர்திகில்கொண்டோடச்
சுந்தரபாண்டியராஜன் சொகுசுடன்கொலுவில்வந்தான்.

மகுடேஸ்வரனென்-வளர்சத்யவரிச்சந்த்ர
மஹாராஜன்கொலுவில்வந்தான்
என்கிறஅரிச்சந்த்ரநாடகத்தருவின்வர்ணமெட்டு



இராகம்-பியாகடை-தாளம்-சாபு

பல்லவி.

மகுடாதிபனெனெ-வளர்சுந்தரபாண்டிய
மஹாராஜன் கொலுவில்வந்தான்

அநுபல்லவி.

நிகழும்ரத்தினமுடி சிரமீதினிற்றுலங்க
திருமகளெனும்பொருட் செல்வியருளிலங்க (மகு)

சரணங்கள்.

செம்பொற்சரிகையொளிர் சித்ரக்குடைகள்நீடச்
சேவகரிருபுறந் திவ்யசாமரம்போடப்
பம்பரதனமாதர் பரதநடனமாடப்
பைந்தமிழ்க்கவிவாணர் பக்ஷமுடன்கொண்டாட (மகு)
மகிழ்வுடன்மறையவர் மந்த்ராக்ஷதைகள்வீச
மந்த்ரிமார்கள் கட்டியர் மகிழ்ந்தெச்சரிக்கைபேசச்
சகலமேளதாளங்கள் ஜலதியையுமேசச்
சம்ப்ரமமுடன்சுப சமுககணவுலாச (மகு)

—[0]—

(சு. ராஜன்-கடவுளைப்போற்றல்.)

விருத்தம்.

தேவர்கள்முனிவரென்றுந் தேடியபாதாபோற்றி
மூவரிலொருவனாகமூலா த்தமெய்ப்பொருளேபோற்றி
காவலாகயிலைமேவுங் கருணையங்கடலேபோற்றி
ஆலவாயென்னையாளுமையனே போற்றிபோற்றி.

(மந்திரி-இறைவனைப்போற்றல்.)

விருத்தம்.

அடியவர்துயரைப்போக்கி யாதுலர்கலியைநீக்கி
நெடியசாகரஞ்சூழ்ந்த நேமியில்யாரும்போற்ற
முடிகொடைமுதற்றசாங்க முறைமையாடுநீதியோங்கும்
படியரசாக்ஷிசெய்யும் பாண்டியராஜேபோற்றி

(மந்திரிவசனம்.) மஹாராஜ்வந்தனம் புரிகின்றேன்

(சு-ராஜன்வசனம்.) கல்யாண ப்ரதான்.

—[*]—

சு-ராஜன்-தேசவிசாரணை.

விருத்தம்.

சுந்தரபாண்டியராஜன் சுகமுடன்கொலுவில்வந்து
மந்திரியிடத்திலிப்பூ மண்டலந்தன்னிலுள்ள
அந்தணர்முதலாய்நால்வர் ணுச்சிரமத் தாரெல்லாருஞ்
சந்ததநடாத்துஞ்செய்கை சகலமுங் கேழ்க்கலுற்றான்

—[*]—

(சு-ராஜன்-வம்.) ஹேப்ரதான் ஸ்ரேஷ்டா! நமதுராஜ்யத்திலுள-ப்ராம்ஹ-க்ஷத்திரிய-வைஸ்ய-சூத்ரரென்னும்நான்குவர்ணாச்ரமத் தார்களும்-எவ்வாறு நடந்துவருகின்றார்கள்? அதனையொருவாறுபாஷித்தல் வேண்டும்.

(மந்-வம்.) மஹாராஜ்பாருங்கள் முதலாவதுவர்ணாச்ரமத்தாராகிய ப்ராம்ஹணாள் ப்ராதகாலத்திலெழுந்து- நதிக்குச்சென்று ஸ்நாநாதி-காயத்ரி-ஜெப-ஹோம-தற்பண-நியம- த்ரிகாலசந்த்யாவந்தனமுதலானவைகளுங் குறைவின்றி நடாத்திவருவதுந்தவிர க்கலர்காலங்களில் வேதபாராயணமுஞ்செய்து வருகின்றார்கள் கோவே.

(சு-ராஜன்-வம்.) ஆஹா ப்ரதான்-அத்யந்தசந்தோஷமுண்டாயிற்று - நல்லது-இரண்டாவது வர்ணாச்ரமத்தாராகிய- க்ஷத்ரியாளெவ்வாறு நடந்துவருகின்றார்கள்.

(மந்-வம்.) மஹாராஜ்பாருங்கள் க்ஷத்திரியாள் ப்ராதகாலத்திற்றுயில்விட்டெழுந்து - ஸ்நாநபாநநியமநிஷ்டை முடித்துக்கொண்டு தேவாலயதெரிசனஞ் செய்தபின் களவர்க்கபோஜனமருந்தி- கொலுச்சபைக்குச்சென்று மந்த்ரிமார்களினாலோசனைக்குறிப்புதனறிந்தும்-வித்வஜனர்முதலானோர்க்கும் அவரவர்க்கும் அவரவர்கட்குத் தக்கபடிபரிசளித்தும் - துஷ்டர்களாகியசத்ருருக்களை வென்று ஜெயஸ்தம்பம்நாட்டி யுலகத்தைப்பாதுகாத்துவருவதுமான சகலகிரிகைகளும் நடாத்திவருவதுமன்றியில் - நமக்குள்ளகப்பங்களுஞ் சரிவரக்கட்டி வருகின்றார்கள்மன்னா.

(சு-ராஜன்-வம்.) ஹேதுணைவா! நல்லது-மூன்றாவதுவர்ணாச்ரமத்தாராகிய வைஸ்யாளெவ்வாறுநடந்துவருகின்றார்கள்.



(மந்-வம்.) மஹாராஜ்பாருங்கள்-வைஸ்யாள்-காலையில் ஸ்நாநபாநநியமநிஷ்டை முடித்துக்கொண்டு - அமுதுண்டு-தங்களங்காடிகளுக்குச்சென்று - இராசுமுள்முனை தவறாமல் சரக்குகள் விற்பனைசெய்து - கொண்டமுதலுக்குச் சிறிதுலாபஞ்சம்பாதித்தும்-வரவுக்குத்தக்க செலவுசெய்தும் - துஷ்டர்களிடுகொடுக்கினுங்கடன்கொடாது நல்லோர்கட்கு வாய்நாணயமாய்க்கடன் கொடுத்துக்கணக்கேட்டில் தாக்கல்செய்துவருவதும்-கப்பல்முதலானவர்த்தகஞ்செய்து வருவதுமானசகலவிஷயங்களுங் குறைவின்றி நடாத்திவருகின்றார்களரசே.

(சு-ராஜன்-வம்.) ஹேப்ராணநேயா! நான்காவதுவர்ணாச்ரமத்தாராகிய- சூத்ராளெவ்வாறு நடந்துவருகின்றார்கள்.

(மந்-வம்.) மஹாராஜ்பாருங்கள்-சூத்ராள்—வைகறையிற்றுயில்விட்டெழுந்து ஸ்நாநபாநஞ்செய்து நித்யகர்மானுஷ்டானமுடித்துக்கொண்டு அன்னமருந்தி சுகஜீவியாய் வாழ்ந்துவருவதுமன்றி - நீர்வளம் - நிலவளமறிந்து - உழுதுபயிரிட்டு விளைந்தபின் அறுக்கும் பருவமறிந்தறுத்து கதிர்களைப்போரிட்டு - தாம்படித்துப் பதர்தூற்றியபின் - தொழிலாளிகள்-யாசகர்முதலானோர் செலவுபோக மீதத்தில்நமக்குரிய மேல்வாரத்தையாதோராடங்கமின்றிக்கொடுத்து வருவதுமானசகலபணிகளுங்குறைவின்றி நடாத்திவருகின்றார்களிறையே.

(சு-ராஜன்-வம்.) ஹேப்ரியநண்பா! நல்லது-நமதுராஜ்யத்திற்காலாகாலந்தவறாமல் மழைபெய்கின்றனவா?

(மந்-வம்.) மஹாராஜபாருங்கள்.

விருத்தம்.

வேதமோதியவேதியர்க்கோர்மழை
நீதமன்னர் நெறியினுக்கோர்மழை
காதல்மங்கையர்கற் பினுக்கோர்மழை
மாதமும்மழை-வருஷித்துவருகின்றது வேந்தே.

(சு-ராஜன்-வம்.) ஹேநண்பா! நமதுதேவாலயங்களிற் சதாகாலமும்-அபிஷேகநைவேத்ய பூஜாவிதம் நடந்தேறிவருகின்றனவா.

(மந்-வம்) மஹாராஜாருங்கள்- சிவாலயம்- விஷ்ணுவாலயம் -தெய்வதாலயங்கள் முதலியசர்வாலயங்களிலும்- தினசரியாமுகாலமுஞ் சோடசாபிஷேகநைவேத்யமுதலான பூஜாவிரதங்கள் நடந்தேறிவருகின்றன. ப்ரபே!

(சு-ராஜன்-வம்.) ஆஆ மஹாசந்துஷ்டியடைந்தேன் ப்ரதான் நல்லது நமது தர்மசத்திரத்தில் ஏழைபரதேசிகளுக்கன்னதானம்நடந்து வருகின்றனவா?

(மந்-வம்) மஹாராஜ்பாருங்கள் - சதாகாலமும் யாதொரு குறைவின்றி யேராளமாயன்னதானம் நடந்தேறி வருகின்றது ராஜே.

(சு-ராஜன்-வம்.) ஹேப்ரதான்! நமதுபாக்யமேபாக்யம்.

(மந்-வம்) சந்தேகமென்னமஹாராஜ்.

———(*)———

(சு-ராஜன்-தரு,

என்னென்னவிதமாகச் சொன்னபோதிலுமதை

ஏன்மறக்கிறாய்மனமே.

என்கிறகீதாமிர்தசாரத்தின்வர்ணமெட்டு

இராகம்-காம்போதி-தாளம்-சாபு

பல்லவி

மதிவதனசிங்கார-வல்லிநடனஞ்செய்ய

வாராதென்னசொல்வீர் மந்த்ரி

அநுபல்லவி.

இதுவரைதாமதமா யிருந்ததில்லையேமாது

இஷ்டநாயகரோடு இருக்கின்றாளோவிப்போது (மதிவ)

சரணங்கள்.

அன்னத்தினைப்பழிக்கு மற்புதநடையினாள்

ஆதிசேஷனுஞ்சொல வரியபொற்றுடையினாள்

மின்னலினைநிகர்த்த மெல்லியவிடையினாள்

விரைகமழ்ச்செழுமலர் மேவியசடையினாள் (மதிவ)

———[*]———



(சு-ராஜன்-வம்) ஹேப்ரதான்பாரும்! நாமெப்பொழுதிச்சிம்ஹாதனத்திற்குவந்தோமோ-அப்பொழுதேநமது சேவைக்கெதிர்பார்த்திருந்து நம்மனோரம்யப்ரகாரம் நடனம்புரியும்வல்லலங்கார ஸ்ரீயாகிய சிங்காரவல்லி யென்னுந்தாசி இன்றிதுகாலபரியந்தம் வாராதிருக்குங்காரணம் யாது?

(மந்-வம்) மஹாராஜ்பாருங்கள்- ஏதேனுந்தேக ஸ்ரமையாயிருக்கக்கூடும் - இல்லாவிடிலிதுவரை தாமதித்திருக்கக்காரணமொன்றுமில்லை ப்ரபு.

(சு-ராஜன்-வம்) ப்ரதான்ஸ்ரேஷ்டா! நல்லது நமதுசேவகனைவிடுத்து அதிசீக்கிரமழைத்துவரும்படி செய்தல்வேண்டும்.

(மந்-வம்.) மஹாராஜ் ஆக் ஞாபனையின்படி செய்கின்றேன்* யாரடா இவிடத்திற் சேவகன்.

(சேவகன்-வசனம்.) மஹாராஜ் இதோ ஆஜரிருக்கின்றேன்.

(மந்-வம்.) அடா சேவகா நமதுநடனமாதாகிய சிங்காரவல்லியை யதிசீக்கிரமழைத்து வருவாயாக.

(சேவ-வம்.) மஹாராஜ் அப்படியேயழைத்துவருகின்றேன்.

———]*[———

சிங்காரவல்லிவருதல்.

விருத்தம்.

கடகருடகம்பாட்யற் செங்கையினிற் பளபளென்னக்
குடமுலைதன்னவன்னக் கோதையர்க்கரசியென்ன
மடமயில்போன்ற திவ்யமங்கைசிங்காரவல்லி
தடதடவெனராஜேந்த்ரன் சபைதனிற்றோன்றினாளே

———[o]———

காணவேணும்லக்ஷங்கண்கள்-சீதாதேவிதன்

காலுக்குநிகரோபெண்கள்

என்றஇராமநாடகத்தருவின்வர்ணமெட்டு

இராகம்-சுருட்டி-தாளம்-சாபு

பல்லவி.

சிங்காரவல்லிவந்தாளே-சுந்தரபாண்டியன்

றெரிசனங்கண்டுவந்தாளே.

அநுபல்லவி.

இங்காருமிவளுக்கு இணைசொல்லமுடியாது
என்றனைவரும்புக ழினியசற்குணமாது (சிங்)

சரணங்கள்.

செண்டுமுலைகுலுங்கவே—கலகலெனத்
தண்டை சிலம்பலங்கவே
அண்டர்முனிவர்தவம் விண்டுமனதில்மையல்
கொண்டுருட்ருந்தெய்வப் பெண்டெனப்புகல்தையல் (சிங்)

ரத்னப்பணிகள்மின்னவே—சரிகைப்பட்டு
வஸ்த்ரம்பளபளென்னவே
சித்ரமுடியில்மலர் திவ்யவாசனைவீச
தத்திமிதிமியென நிர்த்தமிடுமுல்லாச (சிங்)

—*—

(சிங் வ-ம்.) யாரடா இவ்விடத்திற் சேவகன்.

(சேவ வ-ம்.) ஹேமாதே! யான்தானுனதன்பிற் கிசைந்த நண்பன்.

(சிங் வ-ம்.) சேதுஷ்டா என்னவார்த்தை பாஷிக்கின்றனை அடா மஹாராஜ என்னடா செய்கின்றார்.

(சேவ வ-ம்.) மாதே சபாமண்டபத்தில் வீற்றிருக்கின்றார்.

(சிங் வ-ம்.) அடா சேவகா இன்னுமவிடத்தில் யாரடா விருக்கின்றார்கள்.

(சேவ வ-ம்.) மாதே மந்த்ரி ப்ரதானிகள் முதலிய சர்வத்ராளு மிறைவனைப் புடைசூழ்ந்திருக்கின்றார்கள்.

(சிங் வ-ம்.) அடா சேவகா நல்லது யான் வந்திருப்பதாகத் தெரிவி சீக்கிரம்.

(சேவ வ-ம்.) மாதே யான் வந்திருப்பதாகத் தெரிவியென்றால் நீயார்.

(சிங் வ-ம்.) என்னடா துஷ்டா எப்பொழும் நடனம்புரிய வருகின்ற சிங்காரவல்லியென்னுந் தாசியென்றுனக்குத் தெரியாதா வென்ன?



(சேவ வ-ம்.) ஆ ஆ ஷபாஸ் நீதானா நன்றாயிருக்கின்றது மாதே பார் (வரவரமாமி கழுதைபோலானா) ளென்பதுபோல வுன்னைக் கண்டவுடன் கண்மாலை சூழ்ந்துபோயிற்று. ஆதலி னுன்னை யின்னாளென்றறிந்துகொள்ளச் சக்தியற்றவனாகினேன் நல்லது நீ யிவ்விடத்திலிரு யான் சென்று நீ வந்திருப்பதா யரச னுக் கறிக்கைசெய்து வருகின்றேன்.

(சிங் வ-ம்.) நல்லது அப்படியே போய்வா.

(சேவ வ-ம்.) தாசி வந்திருக்கின்றாள் மஹாராஜ.

(சு. ராஜன். வ-ம்.) அப்படியா நல்லது விட்டுவிடுவாயாக.

(சேவ வ-ம். மாதே வரும்படியா யிறைவனுத்திரவாகி யிருக்கின்றது போய்வா.

(சிங் வ-ம்.) அப்படியே போய்வருகின்றேன்.

—*—

(சிங்காரவல்லி ராஜனைக்காணுதல்.)

(சிங் வ-ம்.) மஹாராஜ வந்தனம் புரிகின்றேன்.

(சு. ராஜன் வ-ம்.) கல்யாணதாசி, ஹேதாசி நீயென்றும் அதி விரைவில் நமது நடனசபைக்குவரக் கூடியவ ளின்றிதுநேரபர் யந்தங் காலகரணமாகிவந்தகாரணம் யாது.

(சிங் வ-ம்.) மஹாராஜ்பாருங்கள் நேற்றபத்தினம் வெகுநேர பர்யந்தம் வீணைவாசித்துக்கொண்டிருந்த த்ரேகஸ்ரமத்தா லின் றிதுவரை காலகரணமாகிவிட்டது அதனை க்ஷமித்தல்வேண்டும் ப்ரபு.

(சு. ராஜன் வ-ம்.) நல்லது சற்று விநோதமான நடனம்பு ரிந்தெனது மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவாயாக.

(சிங் வ-ம்.) அப்படியே செய்கின்றேன் மஹாராஜ்.

—*—

(சிங்காரவல்லி ஜாவளி.)

தாஸி போதனுவிண்டிவோரா-அலா
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.
இராகம்-கமாஸ்-தாளம்-சாபு.

பல்லவி.

இந்தவேளைவந்தென்னைச் சேராயோ சாமி
இந்தவேளைவந்தென்னைச் சேராயோ

அநுபல்லவி.

சுந்தரபாண்டியராஜ துரையேமிகமகிழ்வா(இந்)

சரணங்கள்.

மாரன்கன்னல்வில்லெடுத்தான் கணைதொடுத்தான்
வீரமுடன்தமியாள் மீறிவிதோவிடுத்தான்(இந்)
மந்தமாருதஞ்சீறுதே மயல்மீறுதே
சந்தனம்புனுகத்தர் சவ்வாதுங்காறுதே(இந்)
இன்னமென்னுடன்வாதமா இதுநீதமா
சென்னியில்முடிதிகழ் திவ்யவதனசோமா(இந்)
முத்தையன்புகழூர்த்யாகா சுகவைபோகா
சுத்தகளபபுய சுந்தரபாண்டியயோகா(இந்)

---

(சு. ராஜன். வ-ம்.) பேஷ்பேஷ் நன்றாயிருக்கின்றது நல்லது னனது செவியின்புற வொருபதம்பாடுவாயாக.

(சிங் வ-ம்.) அப்ப்டியே பாடுகின்றேன் மஹாராஜ.

—*—

(சிங்காரவல்லி பதம்.)

ஆதிமூலமே யென்னையாளாயோ-வுனக்
கபயமென்றே னென்முறை கேளாயோ
என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.
இராகம்-எதுக்குலகாம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

மன்னவுன்மனதிரங் காதேனோ—மதன்
வாட்டுங்கணைக்கெதிரி-கான்தானோ



அநுபல்லவி.

பொன்னுபாணந்திகழ் புயவீரா அன்பா
போற்றுஞ்சுந்தரபாண்டிய வொய்யாரா ஐயோ(மன்னு)
காமிநான்படுந்துயர் பாராயோ காமக்
கவலைதனையிப்போது தீராயோ ஐயோ(மன்னு)
செண்டுமுலையிரண்டுந் தடிக்குதடா வொளிர்
திங்களனலில்மனந் துடிக்குதடா ஐயோ(மன்னு)
மதனஜலம்பெருகிக் கடல்போலே தினம்
வடியுதடாவென்செய்வேன் மென்மேலே ஐயோ(மன்னு)
சந்தனகளபங்கள் நீறுதடா குயில்
சந்தமுடன்சங்கீதங் கூறுதடா ஐயோ(மன்னு)
மல்லிகைமலரணை வாடுதடா கையின்
வளைகடகம்கழுவி யோடுதடா ஐயோ(மன்னு)
முத்தையன்றினம்புகழ் குணபூமா ரத்ன
முடியிலகுங்கமல முகசோமா ஐயோ(மன்னு)

---

(சு. ராஜன் வ-ம்.) ஹேதாசி! நீ காமரச லீலாவிநோதமான பதம் பாடியதிலென் மனமதிகத்ருப்தியடைந்தது * ஹேப்ரதான் பார்த்தீரா நமது சிங்காரவல்லி வெகு விநோதமாய் நடித்தனள் சரசசல்லாபவுல்லாச லீலாவிநோதப் பதம்படித்தனள். நல்லது அவளுக்கு வேண்டிய திரவியங் கொடுத்தனுப்பல் வேண்டும்.

(மந் வ-ம்.) அப்படியே செய்கின்றேன் மஹாராஜ் * அடா சேவகா நமது பொக்கிஷஸ்தானபதியிடஞ்சென்று தாசிக்கிவேண்டிய வெகுமதி கொடுத்தனுப்பும்படி செய்வாயாக.

(சேவ வ-ம.) அப்படியே செய்கின்றேன் மஹாராஜ.

(சிங் வ-ம்) யான்போய் வருகின்றேன் விடையளித்தல்வேண்டும்மஹாராஜ்.

(சு. ராஜன் வ-ம்) அப்படியே போய்வா.

(சிங் வ-ம்.) மஹாராஜ் வந்தனம் புரிகின்றேன்.

(சு, ராஜன் வ-ம்.) கல்யாண்தாசி.

(சிங் வ-ம்.) ப்ரபு வந்தனம் புரிகின்றேன்.

(மந் வ-ம்) கல்யாண்தாசி போய்வா.

---

(சு. ராஜன் தரு.)

சாஹிக்கிச்சித்ரமன பீதமப்யாரே

மனோபைராகினமோர்யாரே

என்ற-ஹிந்துஸ்தானி-இந்தரசபாவின்-வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

வையகத்திலென்னைப்போல் மைந்தனில்லாக்கொடிய
மாபாவியாருமுண்டோ மந்திரியே
தூயதவவேடர்க்குத் தொண்டுசெய்யாதமஹா
துஷ்டனாயிருந்தேனோ மந்திரியே
ஏழைபரதேசியைத் தாழவுரைத்திட்டேனோ
ஏதொன்றுமறிகிலேன் மந்திரியே
அந்தணர்புலவோரை நிந்தனைசெய்தேனோ
யார்இட்டசாபமிதோ மந்திரியே
செய்தவப்பலனிதோ திருவுளச்செயல்தானோ
தெரிந்துசொல்வாயெந்தன் மந்திரியே

——[*]——

(சு-ராஜன்-வம்.) ஹேப்ரதான்ஸ்ரேஷ்டாபாரும்? நாமிந்த வம்சத்தாறு தேசத்தாசர்களுக்கும் ப்ரதானவரசனாயிருந்து (மன்னவர்க்கழகு- செங்கோன்முறைமை) யென்பதுபோல எவ்வளவோமஹா கௌரவத்துடன் செங்கோன்மை வழுவாதுராஜ்யபரிபாலனஞ் செய்துவருகின்றோம். அன்றியும் (ஆலயந்தொழுவது-சாலவுநன்று)என்பதுபோல தேவதார்பூஜாவிரதங்களையும் யாதொருகுறைவின்றி யனுஷ்டித்து வருகின்றோம் - ஹேதுணைவா! இன்னும்பாரும் (அரசனெவ்வழி யவ்வழி குடிக) ளென்பதுபோல் நமதுராஜ்யத்திலுள சகல்வர்ணஜாதியார்களும் நமதாக்கினை கடவாமல் நடந்து வருகின்றார்களி இவ்விதமிருக்க-ஹேப்ரதான்.



வெண்பா.

மக்கண்மெய்தீண்ட லுடற்கின்பமற்றவர்
சொற்கேட்டலின்பஞ் செவிக்கு.

என்பதுபோல நமக்கொருபுத்திரனிருந்து அவனதுசெழுமைபொருந்திய மேனியைநமது கரங்களில்வாரியெடுத்து மார்போடணைத்து முத்தமிடவும், அதனால் நமது தேகம் புளகாங்கிதமுறவும் - ஹேப்ரதான்ஸ்ரேஷ்டாபாரும்! மதுவொழுகும் அவனது செம்பவளவாயினால் மொழியுமினியவசனசாதுர்யங்களைக்கேட்டு நமதுசெவியான தின்புறவும்-நமக்குப்பின்நம்மாசாக்ஷிக்கிடையூறின்றி நம்மைப்போலவனுஞ் செங்கோனடாத்திவரவும்- ஸ்ரீமத்சாக்ஷாத் காருண்யகருணை ப்ரவாகப்பிழம்பாகியகடவுள் நமக்கொருபுத்ரசந்தானங் கொடுக்கப்பெறலாகாதா. மஹாகொடியபாபிஷ்டனாகியும் - துரதிஷ்டத்தை யுடையவனாயுமிருக்கின்றேன். ஹேநேயா! இன்னும்பாரும் (பிள்ளைகளில்லாதில்லரமன்று) என்பதுபோல நமதாண்மனையானது ஒருவிதமானவிகாரருபத்தை யுடையதாகவிருப்பது மன்றி-யானோ ரௌரவாதிநரகத்திற்கும் ஆளாயிருக்கிறேன், ப்ரதானென்செய்கின்றது.

——[*]——

(மந்திரி-ஜாவளி.)

மருபாரிதாளலேனூரா

என்றஜாவளியின் வர்ணமெட்டு

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

துரைமன்னா தூயனேயா

சரணங்கள்.

சந்ததியில்லையென்று சிந்தைதனினினைந்து
நொந்துருகினால்வருமோ (துரை)
அவனன்றியோரணுவு மசையாதென்பார்பெரியோர்
இவன்செயலல்லவோவேனும் (துரை)
பரமனமதுமுகம் பார்த்தருள்புரிகுவார்
இரமங்கொள் வதினாலென்ன (துரை)

---

(மங்-வம்.) மஹாராஜ் ! பாருங்கள்- நாமெவ்விதமுயற்சிசெய்யினும் (அவனன்றியோ ரணுவுமசையா) தென்பதுபோலகடவுளது க்ருபையல்லவோவேண்டும்- நம்மாலென்னாகப்போகின்றது ஆகிலும்பாருங்கள்.

வெண்பா.

தெய்வத்தாலாகாதெனினு முயற்சிதன்
மெய்வருத்தக்கூலி தரும்.

என்பதுபோல முன்னம் சூர்யகுலதிலகனான தசரதமஹாராஜாவானவன் தனது குருவாகிய வஸிஷ்டமஹா முனிவரது ஆக்ஞாபனையின்படி புத்ரகாமேஷ்டியாகஞ் செய்து (ஸ்ரீராமர் லக்ஷ்மணர், பரதர், சத்ருக்க) ரென்னும் ரத்னத்தை யொத்த நான்கு புத்ரர்களைப் பெற்றாரல்லவா மஹாராஜ்பாருங்கள்.

வெண்பா.

பழியஞ்சிப்பாத்தூ ணுடைத்தாயின்வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.

என்பதுபோல பாபத்திற்குப்பயந்து பொருள்களைத் தான தர்மஞ்செய்துவந்தா லவனது சந்ததியானது எப்போதுந் தழைத்தோங்கி வருமென்று அனேக ஸ்ம்ருதிகள் முறையிடுகின்றன. ஹேமஹாராஜ் இன்னும் பாருங்கள் தர்மத்தின் மகிமையானதெத் தன்மையெனில்.

ஸ்லோகம்.

ஸர்வரீதிபகஸ்ச்சந்த்ரஹா ப்ரபாதோத்தீபகோரவிஹி
த்ரைலேக்யதீபகோதர்மஸ் ஸுபுத்ரஹாகுலதீபஹா

அதாவது. சந்த்ரனானவன் ராக்காலத்தை ப்ரகாசிக்கின்றான், சூர்யனானவன் பகற்காலத்தை ப்ரகாசிக்கின்றான், சத்புத்ரனானவன் குலத்தை ப்ரகாசிக்கின்றான், தர்மமானது பூமி அந்தரம் ஸ்வர்க்கமென்னுந் த்ரிலோகங்களையும் ப்ரகாசிக்கின்றதென்றனேக மனுஸ்ம்ருதிகளிற் கூறப்பட்டிருக்கின்றது. அப்பேர்க்கொத்த தர்மத்தின்மகிமையை ஆயிரம் பானமகுடங்களை யுடைய வாதிசேஷனுஞ் சொல்லுதற்கரிதெனி லெனதோர் நாவினாலெவ்வாறு சொல்லப்போகின்றேன் மஹாராஜ். ஆதலின் இன்றுமுதல் நமது தர்மசத்திரத்தில் வேண்டிய தானதர்மங்களைச்



செய்துவரும் பக்ஷத்தில் கடவுள் நமக்குப் புத்ரசந்தானங்கொடுப்பரென்பதற்குத் தடையாதிருக்கின்றது. அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டுவதில்லை மஹாராஜ்.

(சு-ராஜன். வ-ம்) ஹேப்ரதான் ஸ்ரேஷ்டா நமது தர்மசத்திரத்திற் சதாகாலமுந் தர்மஞ்செய்யா திருக்கின்றோமாவென்ன.

(மங் வ-ம்.) மஹாராஜ் பாருங்கள் (ஆதுலர்க்குச்சாலை ஓதுவார்க்குணவு- அறுசமயத்தார்க்குண்டி- பசுவுக்குவாயுறை- சிறைச்சோறு- ஐயம்- தின்பண்டநல்கல்- அறவைச்சோறு - மகப்பெறுவித்தல் - மகவுவளர்த்தல் - மகப்பால்வார்த்தல் - அறவைப்பிணஞ்சுடுதல்- அறவைத்தூரியம்- சுண்ணம் - நோய்மருந்து-வண்ணார்-நாவிதர்-கண்ணாடி-காதோலை-கண்மருந்து-தலைக்கெண்ணெய்- பெண்போகம்- பிறர்துயர்காத்தல்- தண்ணீர்ப்பந்தல்- மடம் தடம்-சோலை- ஆவுரிஞ்சுதறி- விலங்கிற்குணவு- ஏறுவிடுத்தல்-விலைகொடுத்துயிர்காத்தல்-கன்னிகாதான)மென்னுமுப்பத்திரண்டு தர்மமேற்பட்டிருப்பதிலிப்போது அன்னதானமட்டும்நடந்தேறிவருகின்றதாதலின் மேற்கூறியபடி யின்றுமுதலேழை பரதேசிகள்முதலிய சர்வத்ராளுக்கும்நடத்திவைத்தல்வேண்டுமஹாராஜ்!

——[o]——

சின்னநானரா-நேசின்னதானரா

என்றஜாவளியின்வர்ணமெட்டு

இராகம்-இந்துஸ்தானிகாபி-தாளம்-ருபகம்.

பல்லவி.

நல்லயோசனை-சொன்னீர்-நல்லயோசனை

அநுபல்லவி.

வல்லவர்களும்மைப்போல வில்லையேயென்மந்திரியே (நல்)

சரணம்.

ஏழைபரதேசிகட்கு இன்றுமுதற்சத்திரத்திற்
குறைவிலாமலன்னதான தர்மஞ்செய்யவேயிப்போது (நல்)

——[*]——

(சு-ராஸ்-வம்.) ஹேப்ரதான் நல்லயோசனை சொன்னீர் (ம
ந்திரிக்கழகு வரும்பொருளுரைத்த) லென்பதுதமக்கேதகுமன்
றிமற்றொருவருக்குந்தகா- மஹாசந்துஷ்டியடைந்தேன் - நல்லது
யாணிந்தச்சிம்ஹாதனத்திற்குவந்துகாலகரணமாகிவிட்டமையால்
யானந்தப்புரஞ்சென்றுவருகின்றேன் - நீர்நமதுசேவகனை விடுத்
துத் தோட்டிகளை யழைத்துவரும்படிசெய்து- நமதுதர்மசத்திர
த்தி லின்றுமுதல் நடக்கப்போகின்ற தானதர்மங்களைப்பற்றி நம
து நகரத்திலுள யாவத்ராளுக்கும் பரிஷ்காரமாய்த் தெரியும்பொ
ருட்டுப் பறையறைவிக்கச் செய்வீராக.

(மந்-வம்.) அப்படியே செய்கின்றேன் போய்வாருங்கள் ம
ஹராஜ் ✽ அடாசேவகா நமதாமனைத் தோட்டிகளையதிசீக்கிரம
ழைத்துவருவாயாக.

(சேவ-வம்.) அப்படியே யழைத்துவருகின்றேன் மஹாராஜ்
✽ யாரடா - இவிடத்திற்றோட்டிகள்.

(தோட்டிகள்-வசனம்) இதோ ஆஜரிருக்கின்றோம் ப்ரபு.

(சேவ-வம்.) அடாதோட்டிகாள் உங்களைமந்திரியழைத்து
வரும்படி யுத்திரவுசெய்திருக்கின்றார் வாருங்கள் போவோம்.

(மந்-வம்.) கல்யாண்தோட்டிகாள் - அடாதோட்டிகாள், இ
ன்றுமுதல் நமது மஹாராஜாவினது தர்மசத்திரத்தில் விசேஷ
மானதானதர்மங்கள் செய்யப்போகின்றமையால் இன்னகரின்க
ண்ணுள (சிவயோகி-தவயோகி- கோசாகி-பைராகி-அந்தணர்-பு
லவர்-ஏழை-பரதேசிகள்) முதலியசர்வத்ராளும் வந்துசேரும்ப
டிபறைபறைவீர்களாக.

(தோட்-வ-ம்.) அப்படியே செய்கின்றோம் ப்ரபு.

——(✽)——

(தோட்டிகள் பறையறைதல்)

இதனாலின்னகரின் கண்ணுள (சிவயோகி, தவயோகி, கோ
சாகி, பைராகி, அந்தணர், புலவர், ஏழை, பரதேசிகள் (முதலி
யசர்வத்ராளுக்கு மறிவிப்பதி யாதெனில, இன்னகரத்தைப் பரி
பாலனஞ்செய்யும் (ராஜாதிராஜன் - ராஜமார்த்தாண்டன் - ராஜ
கெம்பீரன்-ராஜகோலாகலன்-ராஜவிற்பன்னன்-ராஜசம்பன்னன்
ராஜசம்போசன் ராஜவொய்யார) னென (சுந்தரபாண்டியமஹா



ராஜா) வானவர் இன்றுமுதலாமனைத் தர்மசத்திரத்தில் விசே
ஷமானதானதர்மங்கள் செய்யப்போகின்றமையால் ஒவ்வொரு
வர்களுந் தங்களுக்கு வேண்டியவைகளைப் பெற்றுக்கொள்ள
லாம். ப்ரீதியுடையவர்கள் வருவீர்களென வறிவிக்கலாயிற்று.

---

(பரதேசிகள்வருதல்.)

விருத்தம்.

இறைவனுத்திரவின்வண்ண மிலகுமன்னகரமெல்லாம்
பறையடித்திடவேயேழை பரதேசிமற்றுமுள்ளோர்
குறையதுதவிர்க்கதென்று கூவியேயொன்றுசேர்ந்து
அறஞ்செயுஞ்சத்திரத்திற் கன்புடன்றோன்றினரே.

சன்னதிகண்டுகொண்டேன் கண்டவுடனே
சௌபாக்யம்பெற்றுக்கொண்டேன்
என்றகவிக்குஞ்சரமையர் கீர்த்தனையின்வர்ணமெட்டு,
இராகம்-மோகனம்-தாளம்-சாபு.

பல்லவி.

பரதேசிகள்வந்தாரே ஐயமெடுக்கும்
பரதேசிகள்வந்தாரே.

அநுபல்லவி.

பரதேசிகள்வந்தா ரரகரசிவாவென்று
பரமன்திருநாமத்தைப் பக்தியுடன்புகன்று (பர)

சரணம்.

நீறுநெற்றியிலிலங்க ருத்ராக்ஷங்கள்
நிறைந்துகண்டத்திற்றுலங்க.
சோறுபோடுங்களையா துரையேயெங்களிறைவி
தடிக்கிறதுடிக்கிதென் றடிக்கொருதரங்கூவி (பர)

(கோசாகி வ-ம்.) தாம் கர்ஞமஹாராஜ.
(பைராகி வ-ம்.) பீக்தாலோமஹாராஜ்
(பரதேசி வ-ம்.) ப்ரபு தர்மஞ்செய்யவேண்டும்.

(மந் வ-ம்.) அடா சேவகா இப்பரதேசிகளை நமது சத்திரங்காரியஸ்தனிடம் அழைத்துக்கொண்டு போயவாளுக்கு வேண்டியவைகளைக் கொடுத்தனுப்பும்படி செய்வாயாக.

(சேவ வ-ம்.) அப்படியே செய்கின்றேன் ப்ரபு ஃ ஹேபரதேசிகாளென்னுடன் வாருங்கள்.

(பர வ-ம்.) அப்படியே வருகின்றோமையா.

---

விருத்தம்.

துஷ்டரையடக்கும்வீர சுந்தரபாண்டியராஜன்
இஷ்டஞ்சயோகவின்ப வேந்திழையாகவந்த
வட்டமென்முலையாள் சந்த்ர வதனியும்பிள்ளையில்லாக்
கஷ்டகரல்த்தையுன்னிக் கருகுவாளுருகுவாளே.

---

(சந்த்ரவதனி புலம்பற்றது)
கௌசிகன் கோபத்தைக் கண்டாயோ சந்த்ரமதியே
என்றஅரிச்சந்த்ரநாடகத் தருவின்வர்ணமெட்டு
இராகம்-பிலஹரி- தாளம்-சாபு.
கண்ணிகள்.

மைந்தர்களில்லாத மாபாவியானேனே தெய்வமே - என்போல்
மங்கையர்களென்னைமலடியென்பார்களே தெய்வமே-தெய்வமே
பெரியோரைவைதேனோ பிழைஎன்னசெய்தேனோ தெய்வமே-[கெட்ட
பேர்பெறத்தலையினிற் பிரமனெழுதினானோ தெய்வமே- தெய்வ[மே
தானதவஞ்செய்யாச்சண்டாளியானேனோ தெய்வமே-என்னைத்
தவிக்கவிட்டிருப்பது தர்மமோசொல்லையோ தெய்வமே-தெய்[வமே
ஏழைபரதேசிகட் கிடையூறுசெய்தேனோ தெய்வமே-நக
செகுமேசும்படி யென்னைப்படைத்தாயோ தெய்வமே-தெய்வ[மே
என்னகுறைசெய்தேனோ எவர்செய்தசதியிதோ தெய்வமே-நா
னேதொன்றுமறிகிலேனென்செய்குவேனையோதெய்வமே- தெய்[வமே

---



(சந்த்ரவதனி வ-ம்.) ஆஆ தெய்வமே என்னைப்போலுற்ற மாதர்களேசும்படியான அபகீர்த்திக் காளாக்கி வைத்தனையே யென்செய்வேன் கடவுளே.

---

விருத்தம்.

மைந்தர்களில்லையென்று மயங்கிடுமனைவியான
சந்திரவதனியுள்ளச் சஞ்சலநீக்கவென்று
சுந்தரபாண்டியராஜன் றூயமாளிகைக்குட்சென்று
விந்தையீதென்னவென்று விரைவுடன்வினவினானே.

---

(சு ராஜன் ஜாவளி.)
எந்துகு வலசிதினே
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு
இராகம்-கமாஸ்-தாளம்-சாபு
பல்லவி.

என்னகாரணஞ் சொல்லடி என் னொயில்மா
மயிலே குயிலே என்னகாரணஞ் சொல்லடி

அநுபல்லவி.

அன்னமேசெழுந்தேனே யழகுமடமானேநீ
யயர்ந்தவிதமறிகிலேன்
என் னொயில்மா, மயிலே குயிலே(என்)

சரணங்கள்.

மதிதனைவென்றவுன் வதனமிகக்கறுத்து
வாடியிருப்பதறியேன்
என் னொயில்மா மயிலே குயிலே(என்)
வண்டினைநிகருந்தன் கெண்டைவிழிகளில்நீர்
வடியும்விதமறிகிலேன்
என் னொயில்மா மயிலே குயிலே(என்)
ப்ராணநாயகாவென்று பிரியமுடன்சொல்வாயும்
பேசாதிருப்பதறியேன்
என் னொயில்மா மயிலே குயிலே(என்)

மாதேயிதென்ன விபரீதமாயிருக்கின்ற
வகையொன்றுமறிகிலேனடி
என் னுயிர்மா டியிலே குயிலே (என்)

(சு-ராஜன் வ-ம்.) ஹேப்ராணநாயகி பார்! எப்பொழுதுஞ் செந்தாமரைக் கமலம்போன்ற நின்வதனமானது இப்பொழுது வாடியிருக்கவும் கெண்டைவிழிகளிரண்டுஞ் சிவந்து நீர் தாரை தாரையாய்ச்சொரியவும். ப்ராணநாதாவென் றன்போடழைக் கும் பவளம்போன்ற நின்மதுரிதவாயானது கலுத்திருக்கவும் கார்மேகம்போன்ற நின் கூந்தலானது மண்ணிற் புறண்டுருள வும். ஹேப்ராணநாயகி நீயுமிருந்த சோபத்தை யடைந்தவளாயிருக்குங் காரணம்யாது? ஈதென்ன விபரீதம்.

(சந்த்ரவதனி ஜாவளி.)

கிஷ்ணுகம்பிகாஜு கிராஜனயன

என்ற ஜாவளியின் வர்னமெட்டு

இராகம் - காம்போதி - தாளம்- ஆதி

பல்லவி.

என்மனத்துயர்க ளென்னசொல்வேனாதர்

அநுபல்லவி.

ஜன்மமோமுன்செய்த தன்மமோவறியேன் (என்)

சரணங்கள்.

பாலர்களில்லாத பாவியாகினேனே
காலமோவீதென்ன கோலமோவறியேன் (என்)
தேசமெங்கும்போற்றச் செங்கோலோச்சிவந்தும்
ராசன்செய்தசதி மோசமென்னசொல்வேன் (என்)
என்னைப்போலமாத ரேளனஞ்செய்வாரே
சென்னியிலயனு முன்னம்வரைந்தானோ (என்)

(சந்-வம்.) ஹேப்ராணநாதபாருங்கள்தாமிவ்வைம்பத்தாறு தேசத்தரசர்களுக்கும் ப்ரதானவரசராயிருந்து ராஜ்யபரிபாலனஞ்செய்துகொண்டுவருவதில்தமக்குப்பின்னம்அரசாக்ஷிக்கிடை யூவின்றித்தம்மைப்போற் பரிபாலனஞ்செய்தவரவு அதனுல மனதாசக்திதழைத்தோங்கவும் கடவுளெனக்கொருபுத்ரசந்தானங்கொடுக்கப்பெறலாகாத பாபிஷ்டியாயிருப்பதுமன்றி என்னைப்போலொத்த மாதர்கள நகைக்கஇடமுண்டாயிற்றே யென்ற வருத்தமேயல்லது வேறில்லை ப்ராணநாத.

——(-)——

(சு-ராஜன்-தரு.)

ராத்ரமாகினு-வர்ணிமப-கா-

என்றக்ருத்தியின் வர்னமெட்டு

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி-

பல்லவி.

நான்புகல்சங்கதி-கேளடிபெண்ணே

அநுபல்லவி.

என்மயல்குறுமென இன்மயிலே (நான்)

சரணங்கள்.

கயல்விழிமடமானே கவலைப்படுவதேன்
அயனெழுதியவெழுத் தழிந்திடுமோ (நான்)

(சு-ராஜன்-வம்.) ஹேப்ராணநாயகியார்?

ஸ்லோகம்.

ஹரிணபிஹரேணபி-ப்ரம்ஹணபிசுரேரபி
லலாடலிகிதாரேக-பரிமார்ஷ்டும்நஸக்யதே

அதாவது விஷ்ணுவினாலாயினும் சிவனாலாயினும் ப்ரம்மாவினாலாயினும் - மற்றதேவதைகளாலாயினுந் தலையிலெழுதிய வெழுத்தையழிக்க முடியாதென்று ஸ்ம்ருதிகள்முறையிடுகின்றன ஹேநாயகியார் (அவனன்றி யோரணுவுமசையா) தென்பதுபோல-தெய்வச்செயலல்லாதுநம்மாலென்னாகப்போகின்றது.இப்படிதானே முடியும் நீயேனதற்காகக்கவலைப்படுகின்றனை.

(சந் வ-ம்.) ஹேப்ராணநாத! கடவுளிப்படி யபகீர்த்திக்காளாய் வைத்திருக்கயிற் கவலைப்படாதிருக்க முடியுமா வென்ன.

(சு ராஜன். வ-ம்.) ஹேநாயகி! நீயொன்றுக்கும் யோஜிக்கவேண்டுவதில்லை யாதுமதற்காக வேண்டிய தானதர்மங்கள் செய்துவருகின்றேன் பெண்ணே.

{ சுந்தரபாண்டிய மஹாராஜன் இரண்டாவது சபை. }

(சு ராஜன் வ-ம்.) யாரடா இவிடத்திற் சேவகன்.

(சேவ வ-ம்.) மஹாராஜ் வந்தனம் புரிகின்றேன்.

(சு ராஜன் வ-ம்.) கல்யாண்சேவகா அடாசேவகா இன்னு மநமது ப்ரதானேன் வரவில்லே.

(சேவ வ-ம்.) இன்னுமிவண் வராதிருக்குங்காரண மின்னதென்றறிந்திலேன் மஹாராஜ்.

(சு ராஜன் வ-ம்.) சீக்கிரமழைத்துக்கொண்டுவருவாயாக.

(சேவ வ-ம்.) அப்படியே யழைத்துவருகின்றேன்மஹாராஜ்.

(மந் வ-ம்.) மஹாராஜ் வந்தனம் புரிகின்றேன்.

(சு ராஜன் வ-ம்.) கல்யாண்ப்ரதான் ஹேப்ரதான் ஸ்ரேஷ்டா யானெப்பொழுது. மிச்சிம்ஹாதனத்திற்கு வருதற்கு முன்னமே தாம்வந்திருந்தெனக்காக வெதிர்பார்த்துக்கொண் டிருக்கக்கூடியவ ரின்றிதுவரை காலகாணமாகி வந்தகாரணம்யாது.

(மந் வ-ம்.) மஹாராஜ் பாருங்கள் யானின்று ப்ராதகாலத்தி லெழுந்து நமது நந்தன வனத்திற்குச்சென்று மல்லிகை, முல்லே, இருவாக்ஷி, சண்பகம், பாரிஜாதமுதலிய புஷ்பஜாதிகளுக்கு நீர் பாய்ச்சும்படி செய்துவிட்டு நதிக்கிச்சென்று நித்யகர்மானுஷ்டான முடித்துக்கொண்டு இல்லத்திலமுதுண்டு வழக்கப்படி நமது தர்மச்சத்திரத்தி லேழைபரதேசிகள் முதலியவர்கட்கு வேண்டிய தானதர்மங்களளித்துவிட் டிவண்வருதற்குக் கிஞ்சிற்று காலகாணமாகிவிட்டது. அதனை க்ஷமித்தல்வேண்டும் ப்ரபு.

(சு ராஜன் வ-ம்.) ஹேப்ரதான நமது தர்மசத்திரத்திற் றினசரிகாலமுந் தானதர்மங்கள் சரிவர நடந்துவருகின்றனவா.

(மந் வ-ம்) ஆம் ப்ரபு.

(சு ராஜன் வ-ம்) அதைப்பற்றி யத்யந்த சந்தோஷத்தை யடைந்தேன் ப்ரதான்.

(மந் வ-ம்.) மஹாராஜ் சந்தோஷமடைதற்குத் தடையாதிருக்கின்றது பாருங்கள் நாம் புத்ரசந்தான மில்லாதிருந்ததைப்



பற்றி வேண்டிய தானதர்மங்கள் நடாத்திக்கொண்டு வருவதி லிப்போது தமது பட்டபுதேவியார்க்குக் கர்ப்பமுண்டாகி யிருக்கின்றதல்லவா தர்மத்தின் மகிமையைத் தேவர்களாலு மற்ற மூவர்களாலுஞ் சொல்லுதற் கரிதெனில் நாமெவ்வாறுரைக்கப் போகின்றோம் ப்ரபு.

(சு ராஜன் வ-ம்.) ஹேப்ரதான் பாரும் தமது கருத்தின்படி வேண்டிய தானதர்மங்கள் செய்துவருவதிற் கடவுள் திருவருள்விலாசத்தா லெனதுநாயகிக்குக் கர்ப்பமுண்டாகியிப்போது பூர்ணகர்ப்பமா யிருக்கின்றாள் ஆணலாணோ பெண்ணோ வெனுஞ் சந்தேகத்தையுடையவனா யிருக்கின்றேன் ப்ரதான்.

(மந் வ-ம.) மஹாராஜ்பாருங்கள் (மரம்வைத்தவன் தண்ணீருற்றுவ) னென்பதுபோல நமக்குச் சந்தானங்கொடுத்த கடவுள் நமதிஷ்ட காம்யத்தை நிறைவேற்றாமற் போகின்றானாவெனு தாமதைப்பற்றிக் கவலைப்படவேண்டுவதில்லை ப்ரபு.

——[o]——

(சகிமாது வருதல்.)

விருத்தம்.

——(*)——

சகலவைபோகத்தோடு தலைவனுங்கொலுவிற்றர்மப்
புகழினைவிரித்துமென்மேற் புகன்றிடும்போதுமிக்க
மகிழ்வுடன்சகியும்ராஜ மனைவிக்கிப்பெண்குழந்தை
சுகமுடன்பிறந்தசேதி சொல்லவேசபைக்குவந்தாள்.

——[*]——

மருபாரிதாளலேனுரா
என்றஜாவளியின் வர்னமெட்டு
இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி

பல்லவி.

சகிமாது விநோவந்தாளே

சரணம்.

இல்லவள்தனக்கொரு செல்விபிறந்தாளென்று
சொல்லவிறைவனிடத்தில் (சகி)

(சமிமாத்ரு வ-ம்.) யாரடா இவ்விடத்திற் சேவகன்

(சேவ வ-ம்.) மாதே யேனழைக்கின்றாய்.

(சமி வ-ம்.) அடா சேவகா இமஹராஜனென்னசெய்கிறார்.

(சேவ வ-ம்.) மாதே சிம்ஹாசனத்தில் வீற்றிருக்கின்றார்.

(சமி வ-ம்.) அடா சேவகா ராஜபத்னிக் கேவல்செய்யுஞ் சகிவந்திருப்பதாகத் தெரிவிப்பாயாக.

(சேவ வ-ம்.) நல்லது அப்படியே தெரிவிக்கின்றேன். * மஹாராஜ் ராஜபத்னியார்க் கேவல்செய்யுஞ் சகி வந்திருக்கின்றாள் பாபு.

(சு ராஜன் வ-ம்.) அப்படியானால் விட்டுவிடுவாயாக.

(சேவ வ-ம்.) மாதே வரும்படி யுத்திரவாகியிருக்கின்றது போயவா.

(சமி வ-ம்.) மஹாராஜ் வந்தனம் புரிகின்றேன்.

(சு ராஜன் வ-ம்.) கல்யாணசகி தோழி நீ யெப்பொழுது மிந்தக் கொலுச்சபாமண்டபத்திற்கு வந்ததில்லையே யின்றநூதனமாய் வந்தகாரணம்யாது. என்னவிசேஷம்

(சமி வ-ம்.) மஹாராஜ் பாருங்கள் மஹாராஜபத்னியார்க்கின்று பெண்குழந்தை ஜெனனமாயிற்று அதனை யறிவிக்கும்பொருட்டாக விங்கு வரலாயிற்று பாபு.

(சு ராஜன் வ-ம்.) ஆஆ ப்ரதான் பாரும் நாமெவ்வளவோ ஆசைகொண்டிருந்தும் வியர்த்தமாய்ப் போய்விட்டதே, ஆண்குழந்தை யுற்பவித்தால் ராஜ்யத்திற்கேதுவாயிருக்குமென் றத்யந்த சந்தோஷத்தை யடைந்திருந்தோமே. கடவுளிப்படிச்செய்துவிட்டாரே ஆஆ எதெல்லாம் விபரீதமாயிருக்கின்றதே ப்ரதான் இனி யென்ன செய்யப் போகின்றோம்.

(மந் வ-ம்.) மஹாராஜ் பாருங்கள் தெய்வச்செயலெப்படியோ அப்படித்தானே முடியும். அதைப்பற்றிக் கவலைப்படுவதிலென்ன பிரயோசனம். இனிமே லக்குழந்தையைத்தான் ஆண்குழந்தையாய்ப் பாவித்துக் கொள்ளல்வேண்டும். எதுவும் தெய்வச்செயலின் படியால் முடியப்போகின்றனவா பாபு.

(சு ராஜன் வ-ம்.) தோழி யானிதோ வருகின்றேன் நீமுன் செல்வாயாக.



(சமி வ-ம்) மஹாராஜ் அப்படியே செல்கின்றேன்.

(சு ராஜன் வ-ம்.) ஹேப்ரதான் ஸ்ரேஷ்டா! நாமினிமேற்கவலைப்படுவதிலென்ன ஆண்குழந்தையாகப் போய்விடுமோ இல்லை நல்லது நமது நேத்ரங் குளிர்ச்சியடையும்படி யெனது கண்மணியாகிய குழந்தையைப் பார்த்துவருவோம்.

(மந் வ-ம்.) அப்படியே போய்வருவோமஹாராஜ்

---

## { தர்மசந்தான மஹாராஜன் முதலாவது சபை. }

### விருத்தம்.

செந்திருவனிதையென்னுஞ் செல்விசந்ததமடிக்குஞ்
சந்தமாபுரியையாளுந் தர்மசந்தானராஜன்
இந்திராதியர்கொண்டாட வின்பமாய்க்கொலுச்சபைக்கு
வந்துசெங்கோன்மைநீதி மகிழ்வுடனடத்தினானே.

---*---

சாமிகாநாதோமாட்லாடாதெந்துரா
என்றஜாவளியின் வர்னமெட்டு
இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி
பல்லவி

தர்மசந்தான ராஜன் கொலுவில்வந்தானே

சரணங்கள்.

சந்திரக்குடைநீட தையலர்கடமாட
அந்தணர்மறைகள்பாட (தர்ம)
மாதர்சாமரம்வீச வாணர்கள்புகழ்பேச
நீதசமுகவுல்லாச (தர்ம)
மத்தளம்டிடில்தம்பூர் வாத்யமெங்குமுழங்க
நித்யமங்களமலழங்க (தர்ம)

———[*]———

(த-ராஜன் கடவுளைப் போற்றல்)

### விருத்தம்.

உம்பர்களிறைஞ்சுஞான வுமையவள்பாகாபோற்றி
தும்பிமாமுகனையீன்ற தூயசங்கரனேபோற்றி

அம்பலந்தன்னில்முன் னின்ருடியபாதாபோற்றி
நம்பினவென்னையாளும் நாதனேபோற்றிபோற்றி.

---

(த ராஜன் வ-ம்.) கோன்ரேசேவக்.

(சேவகன் வ-ம்.) ஜீமஹாராஜ்.

(த ராஜன் வ-ம்.) ப்ரதான்கா.

(சேவ வ-ம்.) அம்குமாலும் கைமஹாரீஜ்.

(த ராஜன் வ-ம்.) ஜல்திபுலாலேக்ராவ.

(சேவ வ-ம்.) அச்சா மஹாராஜ்.

(மந் வ-ம்.) மஹாராஜ் வந்தனம் புரிகின்றேன்.

(த ராஜன் வ-ம்.) கல்யாண ப்ரதான் ஸ்ரேஷ்டா! ஹேநீ பாயர்னேப்பொழுது மிச்சிம்மாதனத்திற்கு வருதற்கு முன்னமே தாம் வந்திருந்தெனக்காக வெதிர்பார்த்துக்கொண்டிருக்கக் கூடியவ நின்றிதுவரை காலகாணமாகிவந்த காரணம்யாது.

(மந் வ-ம்.) மஹாராஜ் பாருங்கள் யானின்று ப்ராதகாலத் திலெழுந்து நமது நந்தனவனத்திற்குச்சென்று அங்குற்ற மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, சண்பகம், பாரிஜாதமுதலிய புஷ்பஜாதிகளுக்கு நீர்பாய்ச்சும்படி வேலைக்காரர்கட் கெச்சரித்துவரஞ்சிற்று காலகாணமாகிவிட்டது அக்குற்றத்தை க்ஷமித்தல் வேண்டும் ப்ரபு.

(த ராஜன் வ-ம.) ஹேவசன சாதுர்யத்தையுடைய நேயா! நமது ராஜ்யத்திலுள்ள நான்குவர்ணாச்ரமத்தார்களுந் தங்கட்குரிய கிரியைகளைக் குறைவின்றி நடாத்திவருகின்றார்களா.

மந் வ-ம்.) மஹாராஜ் பாருங்கள்.

வெண்பா.

வானோக்கிவாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கிவாழுங் குடி.

என்பதுபோலநமதாக்கினை கடவாமலவரவர்கட்குரியவது தொழிலையுங் குறைவின்றி நடாத்திவருகின்றார்கள் ப்ரபு.

(த ராஜன் வ-ம்.) ஹேப்ரதான் ஸ்ரேஷ்டா! நல்லது நமது ராஜ்யத்தில் மழைதவருமற் பெய்துவருகின்றனவா.





(மந் வ-ம்.) மஹாராஜ் மாதாமாதந்தவருமல் மும்மாரி பொழிந்துவருகின்றது ப்ரபு ஹேஅரசே பாருங்கள்.

வெண்பா.

ஏரினுழாஅருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக்கால்

என்பதுபோல காலாகாலங்களில் மழைபெய்யாதிருக்கும் பக்ஷத்தில் குடிகளெவ்வாறுழுது வெள்ளாமையிட்டு ஜீவனஞ் செய்வார்கள்நமக்கெவ்விதமேல்வாரஞ் செலுத்துவார்கள் ப்ரபு.

(த-ராஜன்-வம்.) ஹேப்ரதான அதைப்பற்றி மஹாசந்துஷ்டியடைந்தேன் - நல்லது நமதுதேவாலயங்களில் நாடோறுந்தவருமற் பூஜாநைவேத்யங்கள் நடந்தேறிவருகின்றனவா.

(மந்-வம்.) தினந்தோறுந்தவராமலாறுகாலப்பூஜாநைவேத்யங்கள் நடந்தேறிவருகின்றன மஹாராஜ்.

(த-ராஜன்-வம்.) ஷபாஸ்ப்ரதான் ஸ்ரேஷ்டவல்லவா! நல்லது பாரும். யான்சரியான்ரூபரேகா சௌந்தர்யகுணாதி சயங்களையுடையவளாயும் கற்பினைவழுவாதவளாயு மிருக்கின்றபெண்ணைத்தேடி விவாகஞ்செய்து கொள்ளவேண்டுமென்றுத்தேசித் திதுகாலபர்யந்தமனேக தேசங்களில் விசாரித்து மெங்குமகப்படாதிருக்கின்றதே, யினியென்செய்வேன்,ஹேப்ரியநண்பா பாரும்நாமோசொற்ப்ராஜ்யத்தைப் பரிபாலனஞ்செய்துகொண்டு- மஹாகௌரவம்பொருந்திய சுந்தரபாண்டியமஹாராஜாவுக்குக் கப்பஞ்செலுத்திக்கொண்டு மரியாதையாயிருக்கின்றோம், அப்படியிருக்க - எனக்குமனையாளில்லாத குறைவானது மிகுந்த அபகீர்த்திக்கிடமுண்டாகின்றதேயென்றஎண்ணமானது சதாகாலமும்வாதித்துக்கொண்டிருக்கின்றது ப்ரதான.

(மந்-வம்.) மஹாராஜ்பாருங்கள்(ரிஷிபிண்டம் ராத்தங்கா)தென்பதுபோல நமக்கொரு வஸ்துக்கிடைக்கக் கூடியதாயிருக்கும் பக்ஷத்தில் - நம்மைப்படைத்த ப்ரம்ஹதேவனூற்றடுத்தபோதிலும் கிற்கப்படமாட்டா - கிடைக்கக்கூடாதிருக்கும் பொருள்கட்குநாமெவ்வித முயற்சிசெய்தபோதிலுஞ் சித்திக்கப்படமாட்டா

ஆதலின்நாமதைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை முன்னின்று முடித்துவைக்கக் கடவுளொருவரிருக்கின்றார் ப்ரபு.

——[*]——

(சஞ்சீவிமுனிவர்வசனம்.) ஆஆ இன்னகரத்தை யரசாக்ஷி செய்யுந் தர்மசந்தானமஹாராஜாவானவன் மிகுந்ததேஜசுடையவனென்றும் தெய்வபக்திவிசுவாசமுள்ளவனென்றும் அண்டினபேரையாதரிக்குந் தயாளனென்றும் கேள்விப்பட்டிருக்கின்றோமே நல்லதுநாமவ்வரசனிடஞ்சென்று அவனது க்ஷேமலாபங்களைத் தெரிந்துவருவோமிப்போது.

——*——

(சஞ்சீவிமுனிவர் வருதல்.)

விருத்தம்.

சிவபிரான்யுகளதிவ்யசேவடிதனை யென்றென்றுங்
கவனமாய்ப்பத்தியோடுக் கைகுவித்திறைஞ்சுமெந்தப்
புவனமெண்டிசையோர் போற்றும்புண்யசாம்ப்ராஜ்யயோக
தவப்லதிடசிரேஷ்ட சஞ்சீவிமுனிவந்தாரே.

——()——

மகுடேஸ்வரனென வளர்சத்யவரிச்சந்த்ர
மஹாராஜன்கொலுவில்வந்தான்,
என்றஅரிச்சந்த்ரநாடகத் தருவர்னமெட்டு.
இராகம்-பியாகடை-தாளம்சாபு.

பல்லவி.

சடைமுடியுடனருந்-தவம்புரிகாருண்யச்
சஞ்சீவிமுனிவர்வந்தார்.

அநுபல்லவி.

இடைதனில்மரவுரி யெழிலுடனேதுலங்க
இருகரத்திலுத்ராக்ஷ மிலங்கிமிகக்குலுங்க (சடை)

சரணங்கள்.

செவிதனிற்குண்டலஞ் செகஜ்ஜோதிபோல்மின்னத்
திகழும்படிகமணி திண்டோளினிற்றுன்னத்



துவிதபொன்னடியிற்பா துகைசடசடவென்னத்
தூயசிவோகஞான தூரந்தரீகரென்னச் (ச)

(சஞ்-வம்) யாரடாஇவிடத்திற் சேவகன்?

(சேவ-வம்) தேவாவந்தனம்புரிகின்றேன்.

(சஞ்-வம்.) கல்யாண்சேவகா அடாசேவகாஇறைவனென்னடா செய்கின்றான்.

(சேவ-வம்.) தேவாசிம்ஹாசனத்தில் வீற்றிருக்கின்றார்

(சஞ்-வம்.) ஹேசேவகா சண்பகவனத்தில் வாசஞ்செய்யும் சஞ்சீவிமுனிவர்வந்திருப்பதாகச் சீக்கிரமாசனுக்கறிக்கை செய்வாயாக.

(சேவ-வம்.) அப்படியேசெய்கின்றேன்தேவா * மஹாராஜ் வந்தனம் புரிகின்றேன்.

[த-ராஜன்வம்] கல்யாண்சேவகா – அடாசேவகா என்னடா விசேஷம்.

(சேவ-வம்) மஹாராஜ்யாரோவொரு தவஸ்ரேஷ்டர் சண்பகவனத்தில் வாசஞ்செய்யுஞ் சஞ்சீவிமுனிவர் வந்திருப்பதாகத் தமக்கறிவிக்கும்படி யாக்ஞாபித்தார ப்ரபு.

(த-ராஜன் வ-ம்.) ஹேப்ரதான் யாரோவொரு முனிவர்நம்மைத் தேடிக்கொண்டுவந்து வெளிப்புறத்தில் நிற்கின்றாராம். நாம் சென்றெதிர்நோக்கி யழைத்துவருவோம் வாரும்.

(மந்-வம்.) அப்படியே போவோம்மஹாராஜ.

(த-ராஜன் வ-ம்.) தேவாவந்தனம் புரிகின்றேன்.

(சஞ் வ-ம்.) கல்யாண் கோபே.

(மந்-வம்.) தேவா வந்தனம்புரிகின்றேன்.

(சஞ் வ-ம்.) கல்யாண்ப்ரதான்.

(த-ராஜன வ-ம்.) ஹேதேவா இவ்வாசனத்தில் வீற்றிருத்தல்வேண்டும்.

(சஞ் வ-ம்.) ஹே அரசே யானிதோவ்யாக்ரமாசனங் கொண்டு வந்திருக்கின்றேன் நீசிம்ஹாசனத்தில் வீற்றிருப்பாயாக.

(த-ராஜன்-வம்.) ஹே முனிநாதா. தாமிவ்வடியேனையோர்

பொருட்டாயென்னியிவண் ப்ராப்தமானகாரணம்யாது.

(சஞ்-வம்) ஹே அரசேபார் யான்சிலகாலமாக ஸ்தலயாத்
திரைசெய்துகொண்டு வருவதில் பற்பலவிடங்களிலுமுனது புக
ழைப்பற்றி மென்மேலுங்கேழ்விப்பட்டிருக்கின்றேன் ஆதலால்
யானிவண்வந்ததிலுனது ஞாபகமுண்டாகி யுன்னைக்கண்டு க்ஷே
மலாபங்களை விசாரித்துப்போகலாமென்றிங்கு வரலாயிற்று வே
றுவிசேஷமில்லை கோவே.

(த-ராஜன்-வம்,) ஹேதேவர்தாமிப்போதெந்தெந்த ஸ்தலங்
களில் யாத்திரைசெய்துவருகின்றீர்கள்.

(சஞ்-வம்.) ஹேவேந்தே யான் காசிமுதற் கன்யாகுமரி வ
ரையாத்திரைசெய்து வருகின்றேன்மன்னா.

(த-ராஜன்-வம்.) ஹேமுனிநாதா பாருங்கள்தாமிவண் ப்ரா
ப்தமானதுமுத விச்சித்ரமண்டபத்தி லொருவிதமான திவ்ய
பரிமளவாசனையானது பரவிக்கொண்டிருக்கின்றதே யதன்கா
ரணம்யாது.

(சஞ்-வம்.) ஹேமன்னாபார் என்னிடத்தி லொருவிதமான
புஷ்பமிருக்கின்றது அதுதானிவ்விதபரிமளத்தைத் தருகின்றது
வேறொன்றுமில்லை.

(த-ராஜன்-வம்.) தேவா அப்புஷ்பத்தை யெடுங்கள் பார்க்
கலாம்.

(சஞ்-வம்.) இதோபார் கோவே.

(த-ராஜன்-வம்) ஆ ஆ ஹேப்ரதான்பார்த்தீரா நாமென்று
ங்கண்டறியாத விநோதமல்லாயிருக்கின்றது.

(மந்-வம்.) வெகுவிநோதமான புஷ்பமாயும் இவ்வவாசனை
யுடையதாயு மிருக்கின்றது ப்ரபு இப்பேற்கொத்த புஷ்பத்
தை யானிதுவரை பார்த்ததுமில்லை கேட்டதுமில்லையே.

(த-ராஜன்-வம்) ஹேதேவா இப்புஷ்பமெவ்விடத்திலுற்பத்
தியாகின்றது.

(சஞ்-வம்.) ஹேஇறைவாபார் சுந்தராபுரிக் கிறைவனாகிய
சுந்தரபாண்டியமஹாராஜாவானவன் நீடித்தகாலபுத்ரசந்ததி
யில்லாததினால் வேண்டியதான்தர்மங்களைச்செய்து அதனாலொரு
புத்ரியைப்பெற்றான் அப்பெண்ணானவளிப்போது பதினாறுவய



துடையபாலகுமாரியாயிருக்கின்றாள். ஹேமன்னாபார் அவளழ
கிற்கு இந்த்ராணி-சரஸ்வதி- பார்வதி-லக்ஷ்மி-ரதிதேவி முதலா
னவர்களையு மிணைசொல்லத்தகாதெனில் வேறேவிசேஷித்துச்
சொல்லவேண்டுவதே திருக்கின்றது அப்பேர்க்கொத்த மாதான
வள்தன்னைப்போலொத்த ரூபலாவண்யமுடையநாயகன் கிடைத்
தாற்றிருமணஞ்செய்து கொள்கின்றதென்றும் இல்லாவிடிற்றன
துதந்தைக் காண்சந்ததியில்லாத்தினா லவ்வரசுக்குத்தானே யிள
வரசுபட்டங்கட்டிக்கொண்டு ராஜ்யபரிபாலனஞ்செய்துவருகின்
றதென்றும் ப்ரதிக்கினைசெய்துகொண்டு தனதுநகரத்திற்கருகா
ண்மையிலோர் விச்சித்ரமான நந்தவனமேற்படுத்தி அதனுள்
ளோர் சிங்காரமண்டபம்கட்டிவித்து அதைச்சுற்றிலுமனேகவி
தமான விருக்ஷஜாதிகளும் புஷ்பச்செடிகளும் வைத்துப்பயிர்
செய்து அதற்குவேண்டிய காவல்களமைத்திருக்கின்று ளன்றியு
மோர் பெரியதடாகமுமேற்படுத்தியிருக்கின்றாள். ஹேமகுடாதி
பாபார்! அம்மாதானவள் அனுதினமுந்தனது சேடியர்களோ
டு நந்தவனத்திற்குச்சென்று தடாகத்தில்நீராடி அங்குற்றசிங்கா
ரமண்டபத்திற்குவந்து பக்ஷணபோஜனஞ்செய்துவிட்டு சற்று
நேரம்வேடிக்கையாய் விளையாடிக்கொண்டிருந்து அப்பாற்றன
தாண்மனைக்குப்போவது வழக்கமாயிருக்கின்றதுஹேஅரசேஅப்
பெண்ணினது நந்தவனத்திலிருக்கும் புஷ்பந்தானிது.

(த-ராஜன்-வம்.) ஹேதேவா அப்பெண்ணினது நாமதேய
ம்யாது.

(சஞ்-வம்.) அவள்நாமதேயம் (மனோரஞ்சித) மென்றுசொ
ல்லப்படுவார்கள் கோவே.

(த-ராஜன்-வம்.) இப்புஷ்பத்தின் பெபர்யாது.

(சஞ்-வம்.) இதையு (மனோரஞ்சித)மென்றுதான் சொல்ல
ப்படுவார்கள்.

(த-ராஜன்-வம்.) ஆனாலவள் பிறக்கும்போதே யிப்புஷ்பமு
ங்கூடப்பிறந்திருக்கக் கூடுமோ.

(சஞ்-வம்.) ஹே அரசேயப்படியல்ல பார் இதற்குச்சிலவ
ருஷங்களுக்குமுன் அமராவதிக்கரசனாகிய தெய்வேந்த்ரமஹா
ராஜாவுக்குப் புஷ்பங்களெடுத்துக்கொண்டு போகவந்தகாந்தர்வ
ர்கள் பூலோகமெங்குந் தேடியலைந்தும் புஷ்பங்களகப்படாமல்

அந்த (மனோரஞ்சித)த்தினது நந்தவனத்திற்கு வந்ததிலங்குமட்டும் வேண்டிய புஷ்பங்களிருந்ததினாலத்யந்த சந்தோஷமடைந்து தங்களுக்குவேண்டிய புஷ்பங்களெடுத்துக்கொண்டு இனிமேலிப்பூலோகத்திலந்த (மனோரஞ்சிதமென்னுமங்கையினது காயமழிந்துவிட்டபோதினும் அவளது நாமதேயம் அழியாதிருக்கும்படி செய்யவேணுமென்றெண்ணித்தங்களிறைவனாகிய தெய்வேந்திரனது நந்தவனத்திலிருந்த மனோரஞ்சிதமென்னும் புஷ்பச்செடிகளைக் கொண்டுவந்தவளுடைய நந்தவனத்திற் பயிர்செய்துவைத்துப் போயிருக்கின்றார்களாதலாலிப்புஷ்பம் பூலோகத்திற்காணலாயிற்று இல்லாவிடிற்காணமுடியாது மன்னா.

(த-ராஜன்-வம்.) ஹேதவஸ்ரேஷ்டரே அந்த நந்தவனத்திற்குக் காவல்களமைத்திருப்பதாகச் சொன்னீர்களே யப்படியிருக்கத்தமக்கிந்த ப்புஷ்பங்கிடைத்தகாரணம்யாது.

(சஞ்-வம்.) ஹேக்ரீடாதிபபார் என்னைப்போலுற்ற சிவவேடத்தாரைத் தடையன்றி விட்டுவிடுவார்வாகள் மற்றெவ்விதபுயபலதீரர்களாயிருந்தபோதினுமுள்ளே ப்ரவேசிக்கத்தகாது கோவே.

(த-ராஜன்-வம்.)ஹேநாதா தாமிவிடத்திற்கு ப்ராப்தமாகிக் காலகாணமாகி விட்டதாகையாற் றயவுகூர்ந்தடியேன் க்ரஹத்திற்போஜனமெடுத்துக்கொள்ளல்வேண்டுந் தேவா.

(சஞ்-வம்.) ஹேவேந்தேபார் யானெப்பொழுதும் போஜனமெடுத்துக்கொள்கின்ற வழக்கமில்லை நல்லதுனக்குப் புத்ரர்களெத்தனைபெயர்களிருக்கின்றார்கள்.

(த-ராஜன்-வம்.) எனக்கின்னும் விவாகமில்லைதேவா.

(சஞ்-வம்) உனது கீர்த்திப்ரதாபத்திற் கின்னும் விவாகமில்லாதிருப்பது சரியல்லவே ஹேவேந்தேயதன்காரணம்யாது.

(த-ராஜன்-வ-ம்.) ஹேநாதாபாருங்கள் எனக்குச் சரியான ரூபலாவண்யமுடைய பெண்களகப்படாததினால் விவாகஞ்செய்துகொள்ளச் சாத்யப்படாதிருக்கின்றது நாதா.

(சஞ் வ-ம்.) ஹேபூபா பார் அந்தமனோரஞ்சிதமானவள்வெகுரூபலாவண்யமாயிருக்கின்றாளே, யவளையேன்விவாகஞ்செய்துகொள்ளக்கூடாது.



(த-ராஜன்-வம்.) ஹேகருணைக்கடலே பாருங்கள் அவளது விர்த்தாந்தங்கள்தாமிப்போது சொல்லத்தான்தெரியவந்தது அன்றியும் யானவளுடைய தந்தைக்குக்கப்பங்கட்டக்கூடியவந்தஸ்திலிருக்கின்றேனே, அப்படியிருக்க என்னையோர்பொருட்டாயெண்ணியவர்கள் பெண்கொடுக்கப் போகின்றார்களாதேவா.

(சஞ்-வம்.) ஹேமகுடாதிபபார் அவளது தந்தையினபிப்ராயம்வேண்டுவதவஸ்யமில்லைஉன்னையவள் பார்க்கும்பக்ஷத்தில் விவாகஞ்செய்துகொள்வாளென்பதற்கு யாதுந்தடையில்லைநீயொன்றும்யோஜியாமலிப்பொழுதேயொருபத்திரிகையுமுனது படத்தையுமந்தச்சுந்தரபாண்டிய மஹாராஜாவுக் கனுப்புவாயாக

(த-ராஜன்-வம்.) அப்படியேசெய்கின்றேன் தேவா.

(சஞ்-வம்.) ஹேமன்ன யானிவண்வந்து காலகாணமாகிவிட்டதாகையாலெனது ஸ்வயஸ்தானமாகிய சண்பகவனத்திற்கேக விடையளிப்பாயாக.

(த-ராஜன்வம்.) தேவாபோய்வாருங்கள் வந்தனம் புரிகின்றேன்.

(சஞ் வ-ம்.) கல்யாண் வேந்தே.

(மந் வ-ம்.) நாதாவந்தனம்புரிகின்றேன்.

(சஞ் வ-ம்.) கல்யாண் ப்ரதான்.

——(-)——

(த ராஜன் தரு.)

கரமேஹ யோஜிமோரா நம்தஜிகதாறு

என்ற ஹிந்துஸ்தானியின் வர்னமெட்டு

இராகம். இந்துஸ்தானி - காபி - தாளம் - சாபு.

பல்லவி.

இனிநமக்கொருகுறை யில்லையென்மந்த்ரி

அநுபல்லவி

முனிவர்சொன்னசங்கதி தனையறிதந்த்ரி (இனி)

சரணங்கள்.

சேதிதெரிந்துமனத் தெளிவுமுண்டாச்சு
காதலிமிலையென்ற கவிநீங்கிப்போச்சு
முனிவர்சொன்னசங்கதி தனையறிதந்த்ரி(இனி)
என்படமொன்றந்த வேந்தலினிடத்தில்
அன்புடன்கடிதத்தோ டனுப்புமிகுவ்ணத்தில்
முனிவர்சொன்னசங்கதி தனையறிதந்த்ரி(இனி)

———(*)———

(தாராஜன் வ-ம்.) ஹேப்ரதான் ஸ்ரேஷ்டாபாரும் எனக்கு மனைவி கிடைக்கவில்லை யென்றெண்ணியிருந்த மனக்கவலையைச் சஞ்சீவி முனிவர்வந்து நிவர்த்தித்தாரல்லவா. அவர்வாக்கொருக்காலும் பழுதாகமாட்டாதாகையா லிப்பொழுதே யெனது படத்துடனொரு பத்திரிகை யெழுதித் தூதர்கள்வசமாய்ச் சுந்தரபாண்டிய மஹாராஜாவுக் கனுப்பிவையும் யான்சயனத்திற்குச் செல்கின்றேன்.

(மந் வ-ம்.) மஹாராஜ் அப்படியே செய்கின்மேன் போய் வாருங்கள் * அடா சேவகா நமது தூதர்களை யழைத்துக்கொண்டுவா சீக்கிரம்.

(சே வ-ம்.) அப்படியே யழைத்துவருகின்றேன் ப்ரபு.

———[*]———

(தூதர்கள்வருந் தரு.)

குருக்கள்வந்தாரே பூசைசெய்யக் குருக்கள்

என்ற அரிச்சந்த்ரநாடகத்தருவின் வர்னமெட்டு

இராகம் நாதநாமக்கிரியை தாளம் சாபு.

பல்லவி.

தூதர்கள்வந்தாரே சபையிலே
தூதர்கள்வந்தாரே.

அநுபல்லவி.

தூதர்கள்வந்தாரே நூதனமாகிய
சேதிகள்கொண்டிரு காதவழிசெல்லுந் (தூ)



இருகிடுமீசைகள் கருகருவென்னவே
உருவுங்கத்திகள்கொண்டு விரைவுடனேயிரண்டு (தூ)

———*———

(தூதர்கள்வசனம்.) ப்ரபுவந்தனம்புரிகின்றோம்.

(மந்-வம்.) கல்யாணதூதர்கள் ஹேவீரர்காள் ○ இதோவிந்தப்படத்தையும் பத்திரிகையையுங் கொண்டுபோய்ச் சுந்தராபுரிக்கிறைவனாகிய சுந்தரபாண்டியமஹாராஜா விடங்கொடுத்துவருவீர்களாக

(தூத-வம்.) அப்படியேசெய்கின்றோம் ப்ரபு.

## சுந்தரபாண்டிய மஹாராஜன் மூன்றுவது சபை.

(சு-ராஜன்-வம்.) யாரடா இவிடத்திற் சேவகன்

(சேவ-வம்.) மஹாராஜ் வந்தனம்புரிகின்றேன்

(சு-ராஜன்-வம்.) கல்யாண்சேவகா அடாசேவகா நமதுப்ரதானேனின்னம் வரவில்லை.

(சேவ-வம்.) அதன்காரணந் தெரியவில்லை மஹாராஜ்

(சு-ராஜன்-வம்.) சீக்கிரமழைத்து வருவாயாக

(சேவ-வம்.) அப்படியேசெய்கின்றேன் மஹாராஜ்

(மந்-வம்.) மஹாராஜ்வந்தனம் புரிகின்றேன்

(சு-ராஜன்-வம்.)கல்யாண்ப்ரதான். ஹே துணைவா! தாமிதுவரை யெங்குபோயிருந்தீர்.

(மந் வ-ம்) மஹாராஜ் பாருங்கள் தமது குமாரத்தியாகிய மனோரஞ்சிதத்தினது நந்தவனத்திற் சிலநாளாகப்புஷ்பங்கள் களவுபோகிறதென்று காவற்காரர்கள் வந்தறிவித்துக்கொண்டமையா லப்படிச்செய்யுஞ் சோரர்களைக்கண்டுபிடிக்கும்படியானமுயற்சிசெய்து வரப்போயிருந்ததினா லிதுவரைகாலகரணமாகி விட்டதுப்ரபு.

(சு-ராஜன்-வம்) ஹேப்ரதான்பாரும் எனதுசெல்வக் குமாரத்தியாகிய மனோரஞ்சிதத்திற்கிப்போது பதினாறுவயதாயிருக்கின்றது ஹேநண்பாபாரும் யானவட்குச் சீக்கிரம் விவாகஞ்செய் * துவைத்து கண்குளிரப்பார்க்கவேண்டுமென் றுபேக்ஷித்தனேக ராஜர்களுடைய படங்களெல்லாந்தருவித்துக் காண்பிவித்ததில்

ஒன்றுந் தன்மனதிற்குச் சமாதானப்படாமல் வந்தபடங்களனைத்தையும் நிந்தனைசெய்துவிட்டனள் இனியென்செய்கின்றது பிரதான்.

(மந்-வம்.) பிரபுபாருங்களிதற்கு முன்னமே தனக்குச்சரியான ரூபலாவண்யமுடைய நாயகன் கிடைத்தாலன்றி மற்றொருவரையும் விவாகஞ்செய்து கொள்கிறதில்லையென்று பிரதிக்ஞைசெய்து கொண்டிருக்கின்றது தமக்குத்தெரிந்திருக்கின்றதேயப்படியிருக்கச் சமாதானமில்லாத படங்களைத்தருவித்துக்காட்டினாலவைகளை யேற்றுக்கொள்ளப் போகின்றனளா மஹாராஜ்.

(சு-ராஜன்-வம்.) ஹேப்ரதான் இப்போதாவது நமது புத்திரியினெண்ண மெப்படியிருக்கின்றதென்று அழைத்துத் தெரிகுவோமாவென்ன.

(மந்-வம்.) அப்படியேசெய்யுங்கள் மஹாராஜ்.

(சு-ராஜன்-வம்.) அடாசேவகா நமதரண்மனைக்குச் சென்றெனது கண்மணியான மனோரஞ்சிதத்தைசீக்கிரமழைத்து வருவாயாக.

சேவ-வம்.) அப்படியே யழைத்து வருகின்றேன் பிரபு.

(மனோரஞ்சிதம்வருதல்.)

விருத்தம்.

சுந்தரபாண்டியராஜன் சொகுசுடன் கொலுச்சபைக்கு
வந்துசேவகனை விட்டுமகள்மனோரஞ்சிதத்தின்
சிந்தையைபறியவென்று சீக்கிரமழைக்கச்சொல்லச்
சந்திரமுகத்தைக் காட்டிச்சபைதனிற்றோன்றினளே

——[]——

சாரசாக்ஷவாலபெட்டு-வோ.

என்றஜாவளியின் வர்னமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

வந்தாளேமனோரஞ்சிதம்
மகிழ்வுடனே யிப்போது



அநுபல்லவி.

செந்தாமரைபோல்முகந்-தெளிவுடனேயிலங்கப்
பந்தானமுலையாண்டும்-பருத்துமிகக்குலுங்க (வந்)

சாலவேபணி-கள்மின்னச்-சந்த்ரகாந்தியுடைதுன்னச்
சோலையில்நடஞ்செய்வன்னத்-தோகைமயிலிவளென்ன (வந்)

சொகுசுமிருஞ்சுகந்த-தூயமாமலர்கள்சூடித்
தகைமையுடனே பெற்றதந்தையின் சபையைநாடி (வந்)

——[*]——

(மனோரஞ்சிதம்-வசனம்.) பிதாவந்தனம் புரிகின்றேன்

(சு-ராஜன்-வம்.) கல்யாண்புத்ரி

——(*)——

(மனோரஞ்சிதந்தரு.)

இன்னந்தயவில்லையோ-இதுவுனக்குமலையோ

என்றகீதாமிர்தசாரத்தின் வர்னமெட்டு

இராகம்-பிலஹரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னையழைத்துவரச்சொன்னதென்ன பிதாவே

அநுபல்லவி

அன்னையிடத்தில்விளை யாடுஞ்சமயத்திலே (என்)

(மனோ-வம்.) ஹேபிதாபாருங்கள் எனதுமாதாவாகிய சந்த்ரவதனியிடத்தில் யான்விளையாடிக் கொண்டிருக்குந் தருணத்திலென்னை யழைத்துவரும்படி யாக்ஞாபித்தருளிய காரணம்யாது

——(*)——

(சு-ராஜன்-ஜாவளி.)

சின்னதானரா-நே-சின்னதானரா

என்றஜாவளியின்வர்னமெட்டு.

இராகம்-இந்துஸ்தானிகாபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சொல்லக்கேளம்மா-நான்-சொல்லக்கேளம்மா.

அநுபல்லவி.

நல்லபுருஷர்களெந்த — நாட்டிலுங்கிடையாதினிநான் (சொ)

சரணங்கள்

பற்பலதேசத்தரசர் — படமெல்லாம்வந்ததைநீயே
யற்பமாக வெண்ணிமிக் வவமதிப்புச் செய்திருபோனான் (சொ)

சுகுணபோஜராஜனது — சுந்தரம்போலெங்குமில்லை
மகிழ்வுடனேங்கியவனை மணமதுசெய்துகொள்ளவேநான் (சொ)

——(*)——

(சு-ராஜன்-வம்.) ஹேஎனது கண்மணியாகிய புதல்விபார் இப்பொழுதுனக்குப் பதினாறு வயதாகியும் இன்னும் விவாகஞ் செய்துவைபாதிருப்பேனாகி லென்னைப்போலொத்த ராஜர்களந கைப்பர்களன்றியும் உனக்குச்சீக்கிரந் திருமணஞ்செய்துவைத் துக் கண்குளிரப்பார்த்தானந்த முடையவேண்டுமென்றெண்ணி யனேக தேசத்தரசர்களுடைய படங்களெல்லாந் தருவித்துக்கா ண்பிவித்து முனக்கொன்றுஞ் சமாதானப்பட்டாம. லேளனஞ்செ ய்கின்றனை நல்லது ஸ்ரீ இதோவிப்படத்திலேப்பார் இன்பமாபு ரியையாளுஞ் (சுகுணபோஜமஹாராஜ) னென்பவனிவன்தானிவ் வன்நல்லசுந்தரமுள்ளவனாகியும் நமக்குசமானமான ராஜாங்கத் தையுடையவனாகியும் புத்திசாலியாயுமிருக்கின்றான் ஆகையாலிவ னுக்குன்னைத் திருமணஞ்செய்து வைக்கக் கருதியிருக்கின்றேன் உன்னிஷ்ட மெவ்வாறுளது தெரிவிப்பாயாக.

——(0)——

(மனோரஞ்சிதம்-ஜாவளி.)

மாரபூரதேசெலி

என்றஜாவளியின் வர்னமெட்டு.

இராகம்-இந்துஸ்தானிகாபி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னவார்த்தை சொல்கிறீர்

அநுபல்லவி.

முன்னந்தெரிந்திருந்து — மின்னமென்னிடத்தில் (என்





சரணங்கள்.

சுந்தரநாயகன் — வந்தாலொழியமற்ற
எந்தராஜர்களையுஞ் — சிந்தையில்நினையேன் (என்)
சுகுணபோஜனைமணஞ் — சூட்டிக்கொள்ளச்சொல்வது
தகுதியல்லவென்து — தந்தையிப்பொழுது (என்)

——[*]——

(மனோ-வம்.) ஹேபிதாபாருங்கள் என்னைப்போலொத்தரு பலாவண்யமுடைய நாயகனையன்றிமற்றொருவரையும் விவாகஞ் செய்துகொள்கின்றதில்லை யென்றுயான் ப்ரதிக்னைசெய்து கொ ண்டிருப்பது தமக்குத்தெரிந்திருந்துஞ் சட்டித்தலையனாகிய(சுகு ணபோஜனை) விவாகஞ்செய்துகொள்ளச் சொல்வது தகுதியன் று அப்படிச்செய்விப்பீராகிலுடனே தமதுபாதாரவிந்தத்திலே யே ப்ராணத்யாகஞ்செய்து கொள்வேன்பிதா வீண்பழியேற்றுக் கொள்ளல்வேண்டாம்.

(சு-ராஜன்-தரு.)

சப்பரியாஜாரேமுராரிமைகைசகரோ

என்றஹிந்துஸ்தானியின் வர்னமெட்டு.

இராகம்-தேசங்குகாபி-தாளம்-ஆதி.

பல்லவி.

இன்னமுன்மனதிரங்-காதென்னகண்மணியே

அநுபல்லவி.

சொன்னதெல்லாந்தோற்றலையே
யென்னைமனந்தேற்றலையே (இன்ன)

சரணங்கள்.

அழகுபுருஷனுனக் — காவதென்னசொல்வாயம்மா
பழிசெய்குவேனென்று — மொழிகிறாயேநீசும்மா (இன்)

——(0)——

(சு-ராஜன்-வம்.) ஹேபந்தனைபார் யானெத்தனை விதமானபு த்திமதிசொல்லியுங் கேளாமலெனமனதை வருத்தப்படுத்துகின் றனை சுந்தரநாயகனையன்றி வேறுநாயகனைவிவாகஞ்செய்து வை த்தாற்ப்ராணத்யாகஞ் செய்துகொள்வதாகச் சொல்கின்றனையே இனியென்செய்வேன்சுதாய்.

(மனோ-வம்.) ஹேபிதா எனக்குவிசேஷமாய்ச் சொல்லவேண்டுவதில்லை.

(சு-ராஜன்-வம்.) ஹேப்ரதான் எனதுபுத்ரியின்குணநிசயங்களெப்படியிருக்கின்றது பார்த்திரா.

(மங்-வம்.) மஹாராஜ்யாருங்கள்(கைநிறைந்தபொன்னைப்பார்க்கிலுங் கண்ணிறைந்தகணவனேபெரி) தென்பது பெண்களுக்குவழக்கமா யேற்பட்டிருக்கின்றதே அப்படியிருக்கநாம்வருத்தப்பட்டுக்கொள்வதிலென்ன ப்ரயோசனம் ப்ரபு.

(சு-ராஜன்-வம்.) ஹேசுதாய்! நல்லது நீயந்தப்புரஞ் செல்வாயாக.

(மனோ-வம்.) பிதா அப்படியே போய்வருகின்றேன்

===()===

(தூதர்கள்-சு-ராஜனைக்காணுதல்.)

(தூத-வம்.) யாரையாசேவகர்?

(சேவ-வம்.) ஏனழைக்கின்றீர்கள்.

(தூத-வம்.) இறைவனென்னசெய்கின்றார்?

(சேவ-வம்.) சிம்ஹாதனத்தில்வீற்றிருக்கின்றார்.

(தூத-வம்.) ஐயா சந்தமாபுரிக்கரசனாகிய (தர்மசந்தானமஹாராஜா) விடமிருந்து தூதர்கள்வந்திருப்பதாக இறைவனுக்கறிக்கை செய்தல்வேண்டும்.

(சேவ-வம்.) நல்லது அப்படியே செய்கின்றேன் * மஹாராஜ் சந்தமாபுரிக்கிறைவனாகிய தர்மசந்தானமகாராஜாவிடமிருந்து தூதர்கள்வந்திருக்கிறார்கள் ப்ரபு

(சு-ராஜன்-வம்) ஆஆ நமக்குக்கப்பங் கொண்டுவந்திருக்கின்றார்களோ நல்லது விட்டுவிடுவாயாக.

(சேவ-வம்) தூதர்கள் வரும்படி யுத்திரவாகி யிருக்கின்றது போய்வாருங்கள்.

(தூத-வம்) மஹாராஜ்வந்தனம்புரிகின்றோம்

(சு-ராஜன்-வம்.) கல்யாண்தூதர்காள் ஹேதூதர்காள் என்னவிசேஷமாய் வரலானீர்கள்.



(தூத-வம்.) மஹாராஜ் ¶ இந்தப்படத்தையும் பத்திரிகையையுமெங்களிறைவன் தம்மிடஞ்சேர்ப்பித்து வரும்படியாக்ஞாபித்தாரதற்காக வரலானோம் ப்ரபு.

(சு-ராஜன்-வம்) ஆஆ அப்படியா நல்லது போய்வாருங்கள்

(தூத-வம்) மஹாராஜ் வந்தனம்புரிகின்றோம்.

(சு-ராஜன்-வம்.) கல்யாண்தூதர்காள்.

(தூத-வம்.)ப்ரபு வந்தனம்புரிகின்றோம்.

(மங்-வம்) கல்யாண்போய்வாருங்கள்.

(சு-ராஜன்-வம்.) ஹேப்ரதான் ¶ இந்தப்படம்யாருடையது பாரும்.

(மங்-வம்.) இந்தப்படம் (தர்மசந்தானமஹாராஜனுடையபடமென்றெழுதப் பட்டிருக்கின்றது ப்ரபு பாருங்கள் நாமனேகதேசத்தரசர்களுடையபடங்களெல்லாம் பார்த்திருக்கின்றோம் இந்தத்தர்மசந்தானமஹா ராஜாவுடைய ரூபலாவண்யத்திற்கீடானவர்களெங்குங்கிடையா மஹாராஜ் மன்மதனு மிணையாக மாட்டான்.

(சு-ராஜன்-வம்.) நல்லது பத்திரிகையிலென்ன எழுதப் பட்டிருக்கின்றது.

(மங்-வம்) மஹாராஜபாருங்கள் தமதுபுத்ரியாகிய(மனோரஞ்சிதத்தைத்தனக்கு விவாகஞ்செய்து வைக்கும்படி (தர்மசந்தானமஹாராஜ)னெழுதியிருக்கின்றான் ப்ரபு

===[*]===

(சு-ராஜன்-தரு.)

என்முகம் பார்த்தருளையா- நான்
ஏழை யுனக்கடிமை யென்பதும் பொய்யா
என்றகிதாயிர்தசாரத்தின் வர்ணமெட்டு
இராகம்-மோகனகல்யாணி-தாளம்-சாபு.

பல்லவி.

பயமில்லாதெழுதியதேது அந்தப்
பயல்நமக்கரசிறைப் பணங்கட்டும்போது (பய)

அநுபல்லவி.

புயப்பலமிகுதீர பூபருந்தொண்டு
புரியுமெனதுபெரும் புகழுதுங்கண்டு (பய)

==0==

(சு-ராஜன்-வம்.) ஆஆ ஷபாஸ்ஸப்பேர்க்கொத்த புயபலபராக்ரமவீராதிவீரபூபரும் பணிந்துபோற்றும்படியானநம்மிடம்கேவலம் நமக்காசிறைப்பணங்கட்டக் கூடியதர்மசந்தானனென்னுந்துஷ்டன் பெண்கேட்கவந்தானு ஆஆ அவனுக்கவ்வளவு யோக்யதையுண்டாயிருக்கின்றனவர் நல்லதவன் கெர்வத்தை யதிசீக்கிரமடக்குகிறேனிந்த பஹதர்

(மந்-வம்.) மஹாராஜ்பாருங்கள் ஒருவன்றுலாவண்யமுடையவனுகியும் நற்குணமுடையவனுகியு மிருக்கும்பக்ஷத்தி லவனுக்கு நாமேன்பெண்கொடுக்கக்கூடாது ப்ரபு.

(சு-ராஜன்-வம்.) ஹேப்ரதான்பாரும் நமது கௌரவமென்ன யோக்யதையென்ன அப்படியிருக்கக் கேவலமாகிய துஷ்டன் பெண்வேணுமென்று நம்மிடஞ்சரியாய்ப் பத்திரிகையனுப்பினனல்லவா நல்லது அவனுடைய வீரதத்துவத்தைப் பார்க்கின்றேனிப்போது

(மந்-வம்.) மஹாராஜ பாருங்கள், விவாகமில்லாதபெண்களிருக்கும்வீடானது தாசிகள்வீட்டிற்குச் சமானமென்று பழமொழி யேற்பட்டிருக்கின்றது. அப்படியிருப்பதால் நமக்குமேலானவர்களும் பெண்கேழ்க்கவருவார்கள், கீழானவர்களும் வருவார்கள். அதைப்பற்றி ஆயாசப்படத்தகாது ப்ரபு. இன்னும்பாருங்கள் (அறத்திடுபிச்சை கூவியிரப்போர் அரசோடிருந்தா சாளினுமாளுவர்) என்று நீதிநெறிகள் முறையிடுகின்றன. அதாவது வீதிகடோறு மிரந்துண்ணுந் தாரித்ரர்களோர்சமயத்தில் ராஜாங்கத்திலிருந் தரசுசெலுத்தினாலுஞ் செலுத்தக்கூடுமாம். அதுபோல கேவலமாயிருப்பதைப்பற்றி யுந்தேசித்தல்கூடாது ப்ரபு நமதுசெல்வந்தானென்னபெரிதா, பாருங்கள் (சிறப்புஞ் செல்வமும் பெருமையுமுடையோர் - அறக்கூழ்ச்சாலை யடையினு மடைவர்) என்றுசொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது உயர்வையுஞ்செல்வத்தையும் மேன்மையையுமுடையவர் ஒருசமயமவை



களையிழந்து தம்முதாரித்ரங்களினால் தர்மசத்திரங்களிற் சேர்ந்தாலுஞ் சேர்வார்களாம். அப்படியிருக்க நமக்குத்தானிந்தச்செல்வமென்ன சதமா ப்ரபு. பாருங்களிந்தத் தர்மசந்தானமகாராஜாவானவன் நமதுபுத்ரிக்குத் தகுந்தநாயகனாயிருக்கின்றான், அன்றியும் (தேடியமருந்து காலிலகப்பட்டது) என்பதுபோல நல்லசமயத்திற் பத்திரிகை வந்திருக்கின்றது, இது ஏனெனில் நமது புதல்விக்குகந்தநாயகன் கிடைப்பதரிதாயிருக்குமாகையால் சீக்கிரம் விவாகத்திற் காரம்பஞ்செய்யுங்கள், ஒன்றுக்கும்யோசிக்கவேண்டாம் ப்ரபு.

(சு-ராஜன்-வம்.) ஹேப்ரதான் அப்படியேயுமதிஷ்டம்போற் செய்வோமெனினும் நமதுபுத்ரியினெண்ணத்தைத் தெரிந்துகொண்டல்லவா மற்றகார்யங்களுக்காரம்பித்தல்வேண்டிவதாயிருக்கின்றது ப்ரதான்.

(மந்-வம்.) மஹாராஜ்பாருங்கள், நமதுபுத்ரியந்தத்தர்மசந்தானமஹாராஜனைப் பார்த்தவுடன் விவாகஞ்செய்து கொள்ளத்தடையிராது ப்ரபு.

(சு-ராஜன்-வம்.) ஆனாலப்படியே செய்துவிடுவோமல்லவா

(மந்-வம்.) தடையாதிருக்கின்றது நல்லசமயம் ப்ரபு

(சு-ராஜன்-வம்.) நல்லதப்படியேசெய்வோம்யானிச்சிம்ஹாசனத்திற்குவந்து காலகாணமாகி விட்டமையா லந்தப்புரஞ்சென்று வருகின்றேன்.

(மந்-வம்.) அப்படியே போய்வாருங்கள் ப்ரபு.

—=[o]=—

{ மதனசுந்தர மஹாராஜன்
முதலாவது சபை. }

விருத்தம்.

திங்கண்மும்மாரிபெய்யத் திருமகணடனஞ்செய்ய
மங்களநகரையாளு மதனசுந்தரராஜேந்த்ரன்
பங்கயமுகந்துலங்கப் பகைவர்கண்மனங்கலங்கத்
துங்கநற்கொலுவை நாடிச்சுகமுடன் வருகின்றானே

மகுடேஸ்வரனென வளர்சத்யவரிச்சந்த்ர
மஹாராஜன்கொலுவில்வந்தான்
என்றஅரிச்சந்த்ரநாடகத் தருவின்வர்னமெட்டு
இராகம்-பியாகடை-தாளம்-சாபு.

பல்லவி.

நவரத்னமுடிதிகழ்-மதனசுந்தரமஹா
ராஜன் கொலுவில்வந்தானே

அநுபல்லவி.

புவனமெண்டிசையோர் புகழ்ந்துமகிழ்கொண்டாடப்
போதமிருந்தமனு நீதகுணவிசேட (நவ)

சரணம்.

தெய்வரம்பையர்போல தெரிவையர்கள்நடிக்கச்
சேவகரிருபுறஞ் சித்ரக்குடைபிடிக்க
வையமிசைசெந்தமிழ் வாணர்புகழ்படிக்க
மருவலர்திகில்கொள மணிமுரசமடிக்க (நவ)

——[-]——

(ம-ராஜன்-கடவுளைப் போற்றல்)

விருத்தம்.

மாலயன்முனிவர்தேவர் வழுத்துமெய்ப்பொருளேபோற்றி
காலனைவிழவுதைத்த கமலபொற்பாதாபோற்றி
ஆலமுதுண்டதில்லை யம்பலத்தரசேபோற்றி
பாலகனென்னைவந்தாளும் பரமனேபோற்றிபோற்றி

(ம-ராஜன்-வம்) கோன்ரே சேவக்?
(சேவகன்-வம்) ஜீ மஹராஜ்.
(ம-ராஜன்-வம்) ப்ரதான்கா?
(சேவ-வம்) அம்கு மாலுமகை மஹராஜ்.
(ம-ராஜன்-வம்) ஜல்திபுலா லேக்ராவ்.
(சேவ-வம்) அச்சா மஹராஜ்.
(மந்திரி-வம்) மஹராஜ் வந்தநம்புரிகின்றேன்.
(ம-ராஜன்-வம்) கல்யாண்ப்ரதான, ஹேது ஹேவா? யானெப்பொழுது மிச்சிம்ஹாசனத்திற்கு வருதற்குமுன்னமே தாம்வந்



தெனக்காக வெதிர்பார்த்துக்கொண்டிருக்கக்கூடியவ ரின்று காலதாமதமாகிவந்த காரணம்யாது?

(மந்-வம்) மஹராஜ் பாருங்கள் யான் நேற்றிராத்திரி நகர்சோதனைக்குச் சென்றிருந்தமையால் இன்றுசூர்யோதய மட்டும் நித்திரையுற்றிருந்துவிட்டேன், அதனைமன்னித்தல்வேண்டும் பிரபு.

(ம-ராஜன்தேசவிசாரணைசெய்தல்)

விருத்தம்.

(ராஜன்.) தேசத்திலுள நான்குவர்னாச்ரமத்தார்கள்
செயலாய்நடக்கிறாரா?
(மந்திரி.) செம்மலேயவர்களுக்குரிய வறுதொழிலையுஞ்
சிராய்நடத்துகின்றார்.
(ராஜன்.) மாசங்கடோறுமெங்குஞ் செழித்தோங்கவும்
மாரிவருஷிக்கின்றதா?
(மந்திரி.) மன்னவாகடவுள் செயலால்மாதமும்மாரி
வருஷித்துவருகின்றதே.
(ராஜன்) கூரிவேபாசர்க ளளித்திடுங்கப்பங்கள்
கொண்டுவருகின்றார்களா?
(மந்திரி) குரிசிலேபயபக்தி யுடனவர்கள்கப்பங்
கொடுத்துவருகின்றார்களே.
(ராஜன்) பூசனைகள்தவறாது தெய்வாலயங்களிற்
புகழாய்நடந்துவருதா?
(மந்திரி) புரவலாஷட்காலபூஜையு முறைப்படிப்
பூசுரர்நடத்துறாரே?
ம-ராஜன்-வம். ஆ ஆ அத்யந்தசந்தோஷமடைந்தேன்ப்ரதான்.

——]*[——

(குடிகள்-தரு.)

தேமதிவ்யமதே-சாஸ்வதி.
என்றதருத்தியின்வர்னமெட்டு,
இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஒட்டமாயோடிவாருங்க-ளண்ணமார்களே
ஒட்டமாயோடிவாருங்கள்.

அநுபல்லவி.

காட்டினிற்புலிபன்றி கதிரையழிக்குதென்று
கூட்டிவருவோம்ராஜனை யண்ணமார்களே (ஓட்)
தினமுமிப்படிவந்து சேதங்கள்செய்கிறதே
யினியென்னசெய்யப்போகிறோ மண்ணமார்களே (ஓட்)

(குடிகள்-வசனம்.) ஒகோ அண்ணமார்களேநமதுகாடுகளி ல்விளைந்திருக்கும் பயிர்களை - புலி-கரடி-பன்றி-யானைமுதலியமி ருகஜாதிகள்வந்து தினமுமழித்துப் போகின்றதல்லவாஆகையா ல நமதிறைவனிடத்திற்போய் முறையிட்டுக்கூட்டிக்கொண்டுவந் து காண்பிவிப்போமண்ணமார்களே.

(மற்றகுடிகள் வ-ம்.) அப்படியே போய்வருவோ மண்ண மார்களே.

விருத்தம்.

வாட்டமாய்க்குடிகளெல்லா மதனசுந்தரராஜேந்த்ரன்
ருஷ்டிகக்கோலுவை நாடிச்சஞ்சலத்துடனேதோட்டங்
காட்டினில்விளைந்திருக்குங் கதிர்களைப்பன்றியானை
கூட்டமாய்வந்தனைத்துங் கொள்ளைசெய்கிறதென்பாரே

(குடி-வம்.) யாரையாசேவகர்?

(சேவ-வம்.) ஏனழைக்கின்றீர்கள்?

(குடி-வம்.) இறைவனென்னசெய்கின்றார்?

(சேவ-வம்.) சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்றார்.

(குடி-வம்.) நகரத்துக்குடிகள் வந்திருப்பதாகத் தெரிவித்த ல்வேண்டும்.

(சேவ-வம்) நல்லது அப்படியேசெய்கின்றேன் * நகரத்து க்குடிகள் வந்திருக்கின்றார்கள் மஹாராஜ்.

(ம-ராஜன்-வம்.) ஆஞல்விட்டுவிடுவாயாக.

(சேவ-வம்) வரும்படியுத்திரவாகி யிருக்கின்றதுபோய்வா ருங்கள்.

(குடி-வம்) மஹாராஜ் வந்தனம்புரிகின்றோம்

(ம-ராஜன்-வம்) கல்யாண்குடிகாள் ஹேகுடிகாள்உங்கள்மு கம் வாட்டமுற்றிருக்குங் காரணம்யாது இங்குவந்தவிசேஷமெ ன்ன சீக்கிரஞ்சொல்வீர்களாக.



(குடிகள்-தரு)

யோசனு-கமலா-லோசனு

என்றத்யாகராஜக் கீர்த்தியின் வர்ணமெட்டு.

இராகம்-தர்பார்-தாளம்-ஆதி.

பல்லவி.

போச்சுதே பயிர்கள் போச்சுதே யினியென்செய்வோம்
போச்சுதே-பயிர்கள்-போச்சுதே.

அநுபல்லவி.

பாய்ச்சலுடனேபுலி பன்றிகளழிக்குது
ஓச்சமுடியவில்லை யுள்ளந்தத்தளிக்குது (போச்)

(குடி-வம்.) மஹாராஜ் பாருங்கள் காட்டில் விளைந்திருக்கும் பயிர்களை (புலி-கரடி-பன்றி-யானை)முதலியமிருகஜாதிகளனுதின மும் வந்தழித்துவிட்டுப் போகின்றதே ப்ரபு இப்படிச்செய்தால் யாங்களெவ்விதங் காலக்ஷேபஞ்செய்கின்றது, தங்களுக்கெவ்வி தம் வரிச்செலுத்துகின்றது மஹாராஜ்.

(ம-ராஜன்-வம்.) ஹேகுடிகாள் மிருகஜாதிகள்வந்து பயிர்க ளையழிக்கின்றனவா நல்லதுநீங்க ளதைப்பற்றிக் கவலைப்படவே ண்டாம் உங்களுக்கேற்படுத்தியிருக்கும் வரியைநிருத்திவிடுகின் றேன் நீங்கள்க்ஷேமமாய்வாழும்போது வரிச்செலுத்துவீர்கள் நீ ங்களுங்களிருப்பிடஞ்செல்லுங்கள், யாங்கள்வேட்டைக்குச்செ ன்று மிருகஜாதிகளனைத்தையுஞ் சம்ஹரித்துவருகின்றோம்.

(குடி-வம்.) மஹாராஜ் அப்படியேயாகட்டும்.

(ம-ராஜன்-வம்.) ஹேப்ரதான்குடிகளுக்குவேண்டிய வெகு மதிசெய்தனுப்புவீராக.

(மந்-வம்.) அப்படியேசெய்கின்றேன் மஹாராஜ் * அடசேவ காநமது பொக்கிஷஸ்தானுதிபதியிடஞ் சொல்லிக் குடிகளுக்கு வேண்டிய வெகுமதிகொடுத் தனுப்பும்படிசெய்துவிட் டுசீக்கி ரம் வருவாயாக.

(சேவ வ-ம்.) அப்படியே செய்கின்றேன் ப்ரபு.

(குடி வ-ம்.) மஹாராஜ் வந்தனம்புரிகின்றோம்.

(ம ராஜன் வ-ம்.) கல்யாண்குடிகாள்.

(குடி-வ-ம்) ப்ரபு வந்தனம்புரிகின்றோம்.

(மந் வ-ம்.) கல்யாண் குடிகாள்.

(ம ராஜன் வ-ம்) ஹேப்ரதான் யான்வேட்டைக்குப் போக வேண்டியதாயிருப்பதால் நமது நகரத்திலுள்ள வேட்டைக்காரர்களை யதிசீக்கிரமழைத்துவரும்படி செய்வீராக.

(மந்-வம்) அப்படியே செய்கின்றேன் மஹாராஜ்.யாரடா சேவகன்.

(சேவ-வம்) இதோவந்துவிட்டேன் ப்ரபு.

(மந்-வம்.) அடாசேவகா நமதுமஹாராஜா வேட்டைக்குச் செல்லப்போகின்றமையால் நமதுநகரத்திலுள்ள வேட்டைக்காரர்களனைவரையு மதிசீக்கிரமழைத்துவருவாயாக

(சேவ-வம்) அப்படியே செய்கின்றேன் ப்ரபு

———[*]———

(வேட்டைக்காரர்கள் வருந்தரு.)

சன்னதிகண்டுகொண்டேன்-கண்டவுடனே

சௌபாக்யம்பெற்றுக்கொண்டேன்

என்றகவிக்குஞ்சரமையர் கீர்த்தனையின்வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-சாபு.

பல்லவி.

வேட்டைக்காரர்கள் வந்தாரே-ஒய்யாரமாக
வேட்டைக்காரர்கள் வந்தாரே.

அநுபல்லவி.

சேஷ்டைகள்செயும்புலி கூட்டங்களினைக்கண்டா
லோட்டமுடனேசென்று ஈட்டியினாலேகுத்தும் (வே)

———(-)———

(வேட்டைக்காரர்கள் - வசனம்.) மஹாராஜ் வந்தனம்புரிகின்றோம்.

(ம-ராஜன்-வம்.) கல்யாண் வேட்டைக்காரர்காள் ஹேவீரர்காள் பாருங்கள் காட்டிலிவிளைந்திருக்கும் பயிர்களைமிருகஜாதிகளு தினமும்வந்தழித்துப்போவதாய் நமதுகுடிகளெல்லாம்வந்து முறையிட்டுப் போனார்களா தலால்இப்பொழுது காட்டிற்குச் சென்றுவேட்டையாடி மிருகஜாதிகளைக் கருவறுத்து வரவேண்டியதிருப்பதால் நீங்களுமென்னுடன் கூடவரவேண்டும்.



(வேட்-வம்.) அப்படியே வருகின்றோமஹாராஜ்.

(ம-ராஜன வ-ம்.) ஹேப்ரதான்யான் போய்வரும்வரை யராசாக்ஷியைச் சுதானமாகப் பார்த்துக்கொள்ளல்வேண்டும்.

(மந்-வம்.) அப்படியேசெய்கின்றேன் மஹாராஜ்.

விருத்தம்

மதனசுந்தரராஜேந்த்ரன் மாகனவீரரோடு
அதிகவ்ருக்ஷங்களொன்று யடர்ந்தகானகத்துட்சென்று
புதரினிலொளிந்திருந்தபுலி கரிபன்றிமற்ற
மிதமிலாமிருகஜாதி வேட்டைகளாடினானே.

—[()]—

(ம-ராஜன்-வேட்டைத்தரு)

இன்னந்தயவில்லையோ இதுவுனக்குமல்லவோ

என்றகீதாமிர்தசாரத்தின் வர்ணமெட்டு.

இராகம்-பிலஹரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வேட்டையாடுவோம் வாரீர்-வீரமிகுசூரரே
மிருகப்படை யதிகப்பட
வருமித்தறு தரிதத்தினில்
வேட்டையாடுவோம் வாரீர்-வீரமிகுசூரரே

அநுபல்லவி.

காட்டைவளைத்துக்கொண்டோங் கருத்துடன்-வருதப்புலி யுயிரைக்ஷணை-மடியச்செய (வே)

சரணங்கள்.

சிங்கங்கரடிபன்றி சீறியிதோவருது
திடமாகிய மதயானையு
மதிவேகமாய் வருதோர்புறஞ்
சிங்கங்கரடிபன்றி சீறியிதோவருது
பங்கப்படவேசெய்தேன் பாரொரு - மானனது-பாலாவிடியால்மானது (வே)

——*——

(ம-ராஜன்-வம்) ஹேவேட்டைக்காரர்காள் பாருங்கள் இவ்வடர்ந்த கானகத்திலிருந்த மிருகஜாதிகளனைத்தையும் க்ஷணப்போதிற்றானே கொன்றுதும்ஸப்படுத்தி விட்டோம் இனிமேல் நமது குடிகளுக்கு மிருகத்தினிடஞ்சலொன்றுமில்லையல்லவா?

(வேட்-வம்) மஹாராஜ் இன்றோடு குடிகளுடைய கஷ்டங்களெல்லாம்நிவர்த்தியாகிப்போயிற்று இனிமேல் யாதொருகுறைவின்றிச்சாகுபடிசெய்துகாலக்ஷேபஞ்செய்துகொள்வார்கள்ப்ரபு.

(ம-ராஜன்-வம்.) ஹேவேட்டைக்காரர்காள் பாருங்கள்யான்மிகுந்தஸ்ரமத்தோடு வேட்டையாடியதினிமித்தமெனக்குக்களைப்புண்டாகித் தண்ணீர்தாகமெடுக்கின்றமையால் யானிக்கானகத்திற்குட்சென்றுநீருருந்தியதிசீக்கிரம்வருகின்றேன். நீங்களதுவரையிவிடற்றிற்றானே வீற்றிருப்பீர்களாக.

(வேட்-வம்.) அப்படியே யிருக்கின்றோம் போய்வாருங்கள் மஹாராஜ்.

---

(ம-ராஜன்-தரு.)

மானமுலேதா-தனவாடனியமி
என்றத்யாகராஜக்ருத்தியின் வர்னமெட்டு
இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னசிங்காரம்-இவ்வனமானது
என்னசிங்காரம்.

அநுபல்லவி.

அன்னங்குயில்மயில்க ளாடுதுபாடுது
கின்னரப்பமரக்கிளிகள் நாடுதுகூடுது (என்ன)

---

(ம-ராஜன்-வம்.) ஆஆ இவ்வனத்தில் (மா-பலா-சந்தன)முதலியவனேகவிதமான விருக்ஷஜாதிகளடர்ந்திருக்கின்றதே, ஆஆ இம்மாமரத்தில் நேர்த்தியான்கனிகள் பழுத்திருக்கின்றதே, ஆஆ இதோமயில்களானது தனதுதோகைகளைவிரித்துநடனமாடுகின்றது. அதோகோகிலங்களானதுசெவிக்கின்பமுறச் சந்தம்பாடுகின்றது. இம்மரத்தின்கண் கிளிகளானது எவ்வள வலங்காரத்துடன் கூடிவிளையாடுகின்றது. ஆஆஇவ்விபரீதங்களைப்பார்த்தாலே நமதுகொடியதாகமானது நீங்கிப்போய்விடும்போலிருக்கின்றது.





ஆஆ இதனாலல்லவோ ஆன்றோர்களில்லறத்தை நீக்கித்துறவறம்பூண்டு இவ்விதமான செழுமைபொருந்திய வனங்களிற்சஞ்சரித்துக்கந்தமூலபலாதிகளைப் போஜனமாயுபயோகித்துக்கொண்டு இப்பேர்க்கொத்த வேடிக்கை விநோதங்களைப் பார்த்துக் காலம்போக்கின்றார்கள். இல்லாவிடிலிக்கானகத்தில் வேறென்னமருத்துவமிருக்கின்றது. ஆஆ நாமும்துறவறம்பூண்டு வந்துவிட்டாலும் நலமாகத்தானிருக்கும் நல்லது நமதுதாகவிடாயை நிவர்த்தித்துக்கொண்டு அப்பாலயோசித்துக்கொள்வோம்.

——[*]——

(ம-ராஜன்-தரு.)

உன்னைநம்பினேனானே-யென்னையாள்முருகோனே
என்றகீர்த்தனையின் வர்னமெட்டு.
இராகம்-இந்துஸ்தானி-தோடி-தாளம்-சாபு.

பல்லவி.

இன்னந்தண்ணீரிருக்கு மிடமொன்றுமறியேனே

அநுபல்லவி.

என்னநான்செய்வே னெவ்விதமுய்வேன் (இன்)

சரணங்கள்.

நடந்திருகாதவழி கடந்துவந்தேனிங்கே
அடர்ந்தபூஞ்சோலை யானதினாலே (இன்)
வேகமுடனேவந்த த்ரேகசிரமத்தினால்
தாகமென்மேலே யாகிறதாலே (இன்)

——(*)——

(ம-ராஜன்-வம்.) ஆஆ இக்கானகத்தின் சிங்காரவேடிக்கைகளைப்பார்த்துக்கொண்டிருகாதவழிதூரம் நடந்தும் இன்னுமொருதடாகமாவது குட்டையாவது தென்படவில்லையே ஆஆ என்னாச்சர்யம் (அரசனில்லாத சிம்ஹாதன)மென்பதுபோல நீரில்லாதசோலைகளானது அழகாயிருந்தாலென்னப்ரயோசனம் ஆஆ இப்பேர்க்கொத்தகானகத்திற் பக்ஷிஜாதி-மிருகஜாதிமுதலிய ஜெந்துக்களெவ்வாறுய்துவருகின்றன ஆஆ ஜெகதீசா எனக்கு மிகுந்த தாகவிடாயாகின்றனவே இனியென்செய்வேன் நல்லது இன்னுங்கொஞ்சந்தூரம் போய்ப்பார்ப்போம்.

(ம-ராஜன்-தரு.)

இதுவுமந்தவர்னமெட்டு.

பல்லவி.

மலர்நிறைந்தநந்தன வனமொன்றுதெரியுதே

அநுபல்லவி.

ஜலமிருந்தாலும் நலவனுகூலம் (மலர்)

சரணம்.

மரங்கள்செறிந்துபெரும் வனமாகத்தோன்றுதே
துரிதமாய்ச்சென்று தெரிகுவோமின்று(மலர்)

(ம-ராஜன்-வம்) ஆஆ அதோ அவ்விடத்திலோர் நந்தவனந் தோன்றுகின்றது அதில் (அகத்தி-அசோகு-அத்தி-அரசு-அலிச்சை-ஆச்சா-ஆத்தி-ஆல்-இத்தி-இலந்தை-இலவம் - இலுப்பை-ஈந்து-உசில்-எட்டி-எலுமிச்சை-ஒமை- கடம்பு-கடவு-கடுக்காய்-கமுகு-கருக்கு-வாளி-கருங்காலி-கள்ளி - காயா - குங்குமம்-குருந்து-கூந்தற்பனை-கொன்றை-கோங்கு-சந்தனம்-சீவந்திசெண்பகம் செருந்தி-தணக்கு-தெங்கு - தேக்கு - நறுவிலி-நாரத்தை-நாவல்-நெல்லி-நொச்சி-பச்சிலை-பலா-பனை-பாதிரி -பாலை-பிராய்-புளி-புன்முருக்கு-புன்முருங்கை-புன்னை-பூவரசு-மகிழ்-மஞ்சாடி-மருதம்-மலைப்பச்சை-மலைமல்லிகை-மாதளை-மா-முருக்கு-முருங்கை-மூங்கில்-வன்னி-வாகை-வில்வம்-விளா-வெட்பாலை வேங்கை வேம்பு-வேல்முதலிய விருக்ஷங்களும் -மல்லிகை-முல்லை-இருவாக்ஷி சண்பகம்-பாரிஜாதமுதலிய புஷ்பஜாதிகளும் இன்னுமனேகவிதமான தாவரங்களும் மிகுந்தசெழுமையாகத் தோற்றப்படுகின்றன - அவிடத்தில்வஸ்யந் தண்ணீரிருக்கவேண்டும் இல்லாவிடில் அவ்வளவு குளிர்ச்சியாயிருப்பதற்குக் காரணமில்லை ஆகையாலவ்விடத்திற்குச் சீக்கிரஞ்சென்று தெரிகுவோமிப்போது மனமேபதறுதே.

(ம-ராஜன்-ஜாவளி )

தலச்சித்தாளகலேனே-ஓசெலியனே

என்றஜாவளியின்வர்னமெட்டு

இராகம்-கமாஸ-தாளம்-சாபு.

பல்லவி.

தெரியுதொருதடாகம் அடடாவிதோ
தெரியுதொருதடாகம்



அநுபல்லவி.

பொருபொருமனமேவீண் பொல்லாங்கேதுவென்மீது
அருகிலிருந்துஜல மருந்திடுவோமிப்போது (தெரி)
அந்தரத்தோர்கடைந்த வமுதுமிதற்கீடாமோ
சந்ததமுகாம்செய்த தர்மம்வீணாகப்போமோ(தெரி)

===(*)===

(ம-ராஜன்-வம்.) ஹேமனமேநீயென்மீது கோபித்துக்கொண்டனையே பார்த்தனையா இதோதெரியுந் தடாகத்தில் ஜலமருந்துவோம் ஆஆ இதுவென்னவிந்தையாயிருக்கின்றது முன்தேவர்கள் பாற்கடலைக்கடைந்தெடுத்த வமுதமுமிந்தஜலத்திற் கிணையாகுமா ஆஆ இவ்வளவுமதுரிதமான தடாகமிங்குற்பத்தியாகியிருக்கிறதற்குக் காரணம்யாது ஒருவேளை தேவர்களாலேற்படுத்திய நந்தவனமாயிருக்கக்கூடுமோ ஆஆ இதிலுற்றபுஷ்பஜாதிகளானது திவ்யபரிமளவாசனையைத் தருகின்றனவே நல்லது இந்தநந்தவனத்திற்குட்சென்று சற்றுநேரமங்குற்ற விநோதங்களைப் பார்த்துவிட்டப்பால் நமதுவேட்டைக் காரர்களிடம் போய்ச்சேர்வோம்.

===(-)===

(ம-ராஜன்-ஜாவளி.)

அலவானிடுலரம்மனே

என்றஜாவளியின் வர்னமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்ஆதி.

பல்லவி.

என்னபுதுமைமலர் இது
வென்னபுதுமைமலர்

அநுபல்லவி.

என்னையமயக்குதையோ விது (வென்ன)

சரணங்கள்.

பரிமளவாசமென் பக்கமாய்வீசுதே
யரியதவத்தோ ரமைத்ததோ-சொல்
லரியதவத்தோ ரமைத்தோவிப்போது
என்னையமயக்குதையோ விது (வென்ன)

தென்றலடிக்குதென் சிந்தைதள்ளாடுதே
யென்றுமறியேனே யிப்புஷ்பம்நா
னென்றுமறியேனே யிப்புஷ்பமிப்போது
என்னையமயக்குதையோ விது (வெண்ண)

=(-)=

(ம-ராஜன். வ-ம்.) ஆ ஆ நாமென்றுங் கண்டறியாத விந்தையான ஒருவித புஷ்பஜாதியதோ தோன்றுகின்றதே. ஆ ஆ ஒருவேளை முனிவர்கள்ளாற் பயிர்செய்து வைத்திருக்கக்கூடுமோ அல்லது தேவலோகத்துப் புஷ்பமாயிருக்கக்கூடுமோ ஆ ஆ அதனது திவ்யவாசனைக்கும் இங்கடிக்கின்ற தென்றற்காற்றுக்கும் தேகம்புளகாங்கிதமுண்டாகி மயிர்க்கூச்சலெடுக்கின்றது. ஆ ஆ இவ்விடத்தில் நின்றுக்கொண்டிருக்கும்பொழுதே நித்திரையுண்டாகின்றது நல்லது நாம் சற்றுநேர மிவ்விடத்தில் நித்திரைசெய்துவிட்டு ப்பாலிந்த வனத்திலிருக்குங் காவலாளிகளிடத்திலிந்தப் புஷ்பத்தின் விர்த்தாந்தங்களைத் தெரிந்துகொண்டு போவோம்.

{ மனோரஞ்சிதன் சொற்பனங்கண்டு சகியிடத்திற் சொல்லுந் தரு. }

மோரி. யசியாம்பரகனலாகிரே மோரி

என்ற இந்துஸ்தானி இந்த்ரசபாவின் வர்னமெட்டு

இராகம் பாஜு தாளம் ஆதி

பல்லவி.

சகியேகனவினிற் கண்டேனே யடி.
சகியேகனவினிற் கண்டேனே.

அநுபல்லவி.

மிகூட்டிலங்குமொரு மன்னவன்றனை யடி (சகி)

சரணம்.

மாதேயவர்போல் வையகத்தினிலே
நானறிகிலேனிந்த நாயகனையுமடி (சகி)

——(*)——

(மனோ வ-ம்.) ஹேசகிபார் யானிப்பொழுதிந்தச் சப்ரகூடமஞ்சத்திற் படுத்துறங்கும்போது மிகுந்த சுந்தரத்தினையுடை



யொருராஜனென்னிடத்திற்கு வந்துபோனதுபோல சொற்பனங்கண்டேனே ஆ ஆ அந்த நாயகனுக்குச் சமானமான ரூபலாவண்யமுடையவர்களை யிப்பூவுலகிற்காணப்போகின்றேனோவென்ன ஆ ஆ அப்பேர்க்கொத்தநாயகன் கிடைத்தாலல்லவோ வேனது காயங் கடைத்தேறும் ஹேசகி யிதுவென்னவிந்தையாயிருக்கின்றதே.

(சகி வ-ம்.) ஹேமாதாசி நல்லது அந்த நாயகனுன்னிடத்திற் கெதற்காக வந்தனர் இங்குவந்தென்ன செய்தாரம்மணி.

——(*)——

(மனோரஞ்சிதந் தரு.)

இன்னந்தயவில்லையோ இதவுனக்குமிலையோ

என்ற கிதோமிர்தசாரத்தின் வர்னமெட்டு

இராகம் பிலஹரி தாளம் ரூபகம்

பல்லவி.

மன்னனெனையணைந்த மகிழ்ச்சியென்னடிசொல்வேன்
மதனுகம முறையேபல
விதலீலையி லதிமோகமாய்
மன்னனெனையணைந்த மகிழ்ச்சியென்னடிசொல்வேன்

அநுபல்லவி.

அன்னமே சகிமாதே
டணைமீதினி லினிதாகிய
குணமாகவே யிருநாழிகை (மன்)

சரணம்.

மடியிலென்னையெடுத்து வைத்துமுத்தங்கொடுத்து
மதுராந்தரு மிதழுண்டதி
ருசியென்றொரு வமனஞ்சொலி
மடியிலென்னையெடுத்து வைத்துமுத்தங்கொடுத்துக்
குடமென்முலைபிடித்துக்
கோலாகல லீலாசுக
மேலாகவே மானேமுடி (மன்ன)

(மனோ வ-ம்) ஹேசகி பார் அந்த மன்னனவ ரிங்குவந்த அமளியின்மீது மதனநூற்படி யென்னைப் பற்பலவிதமான சரசலீலா விநோதங்கள்செய்ததாகக் கண்டெழுந்திருந்தேன்சகி.

(சகி வ-ம்.) ஹேமாதுசிரோன்மணி பார் நீகண்ட சொற்பனத்திற் குணக்கப்பேர்க்கொத்த நாயகரே வரய்ப்பர் நீயொன்றுக்கும் யோஜிக்கவேண்டாமம்மணி.

——[o]——

(காவற்காரர் வருதல்)

விருத்தம்.

சொற்பனங்கண்டுமாது துயரமர்யிருக்கும்போது
அற்புதமானநந்த வனத்தினிலலர்ந்திருக்கும்
புஷ்பங்களெல்லாங்கொள்ளை போவதைப்பார்த்துவந்து
செப்பிடக்காவற்காரர் சீக்கிரம்வருகின்றாரே.

==[*]==

மருபாரிதாளலேனுரா
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.
இராகம் கமாஸ் தாளம் ஆதி
பல்லவி.
காவற்காரரிதோ வந்தாரே
சரணம்.

கொஞ்சுபைங்கிளிமனோ ரஞ்சிதத்தின்சபையிற்
சஞ்சலத்துடனிரண்டு (காவற்)

——(*)——

(காவ வ-ம்.) யாரம்மா இவிடத்திற் சகிமாது.

(சகி வ-ம்.) யாரப்பா கேட்கின்றது.

(காவ வ-ம்.) ஹேமாதே இராஜபுத்ரி யென்செய்கின்றார்கள்.

(சகி வ-ம் ) அமளியில் வீற்றிருக்கின்றார்கள்.

(காவ வ-ம்.) நந்தவனத்துக் காவற்காரர்கள் வந்திருப்பதாகத் தெரிவிப்பாயாக.

(சகி வ-ம்.) நல்லது அப்படியே செய்கின்றேன் * செல்வி நந்தவனத்துக் காவற்காரர்கள் வந்திருக்கின்றார்கள்!

(மனோ வ-ம்.) அப்படியானால் விட்டுவிடுவாயாக.

(சகி வ-ம்.) ஹேகாவற் காரர்காள் வரும்படி யுத்திரவாகியிருக்கின்றது.



(காவ வ-ம்.) மாது ஸ்ரீ வந்தனம் புரிகின்றோம்.

(மனோ வ-ம்.) கல்யாண் காவற்காரர்காள். ஹேவீரர்காள் எங்குவந்தீர்க ளென்னவிசேஷம்.

(காவ வ ம்.) ஹேமாதுஸ்ரீ பாருங்கள் நமது நந்தவனத்திற் சிலநாளாகப் புஷ்பஜாதிகள் களவுபோய்க்கொண் டிருப்பதைப் பற்றி நமது மந்த்ரியவர்களிட மறிவித்துக்கொண்டதில் வருஞ் சோரர்களைக் கண்டுபிடிப்பதற்கு வேண்டிய முயற்சிகள்செய்து கொண்டு வருகின்றா ரப்படியிருந்தும் இனனுமிதமில்லாமற்களவுபோய்க்கொண்டிருக்கின்றதம்மா யாங்களென்னசெய்கின்றது.

(மனோ வ-ம்.) ஆ ஆ அப்படியா நல்லது இதோ யாங்கள் வருகின்றோம் நீங்கள் முந்திச்செல்வீர்களாக.

(காவ வ-ம்.) அப்படியே செல்கின்றோமம்மா.

——(*)——

விருத்தம்.

சந்ததமுநந்தவனத்திற்புஷ்ப
ஜாதிகளைத்திருடர்கொள்ளைசெய்துபோகும்
விந்தைதனைக்காவற்காரர்களெல்லோரும்
விரைவுடனேயோடிவந்துசெல்வியான
கந்தமுலைமாதுமனோரஞ்சிதத்தின்
கமலபதம்பணிந்துமுறையிட்டுப்போக
இந்தவிபரீதமதைப்பார்க்கவென்று
இணைபிரியாச்சேடிதனையழைக்கின்றாளே.

(மனோரஞ்சிதந் தரு.)
தேமபிதிவ்யமதே சரஸ்வதி
என்ற கருத்தியின் வர்ணமெட்டு
இராகம் ஆனந்தபைரவி தாளம் ஆதி
பல்லவி.
நந்தனவனம்போவோம் அடியேசகி
நந்தனவனம்போவோம்.
அநுபல்லவி.

கந்தமலர்கள்தினங் களவுபோகிறதென்று
வந்துசொன்னார்களேயின்று அடியேசகி (நந்த)

——[-]——

(மனோ வ-ம்.) ஹேசகி பார் நமது நந்தவனத்திற் புஷ்பஜாதிகள் களவுபோவதாகக் காவற்காரர்கள் வந்தறிவித்துப் போனார்களல்லவா நல்லது நாம்போய்ப் பார்த்துவிட்டப்படியே வழக்கப்படி சற்றுநேரம் வேடிக்கையாய் விளையாடிவருவோம் சகி.

——[*]——

(சகி தரு.)

போய்வாரேனென்கணவா நானும்மைவிட்டு

என்ற அரிச்சந்த்ரநாடகத்தருவின் வர்ணமெட்டு

இராகம் ஆனந்தபைரவி தாளம் ஆதி

பல்லவி.

போய்வருவோமம்மையே நந்தவனம்
போய்வருவோமம்மையே.

அநுபல்லவி.

தூய்மலரைக்கள்வர் துணிவுடனனுதினம்
தப்பிலாமறகவரு முண்மையையறிந்திடப்(போ)

——*——

(சகி வ-ம்.) அப்படியேபோய் மலர்கள்களவுபோகும்விதத்தைக் கண்டறிந்து வேண்டிய பக்குவங்கள்செய்துவிட்டுச் சற்றுநேரம் விளையாடி வருவோமம்மா.

(மனோ வ-ம்.) ஹேசகி பார்த்தனையா இதோ நந்தவனத்திற்கு வந்துவிட்டோமல்லவா பார் நமக்குமுன்வந்த காவற்காரர்களின்னுமிவிடத்திற்கு வரவில்லையே ஹேசகிகாவற்காரர்களிவ்வளவுஜாக்ரதையாயிருந்தாற் புஷ்பங்கள் களவு போகின்றதற்குத் தடையாயிருக்கின்றது.

(சகி வ-ம்.) ஆமம்மா காவற்காரர்களாலேயே இவ்விதசோரத்திற்கிடமுண்டாயிருக்கின்றதேயன்றி வேறில்லை மாதே.

(மனோ வ-ம்.) ஹேசகி நல்லது நீயந்தப்புறஞ்சுற்றிக் காவற்காரர்கள் வந்திருக்கின்றார்களாவென்று பார்த்துக்கொண்டு நமது சிங்காரமண்டபத்திற்கு வந்துசேர் யானிந்தப்புறம் பார்த்துக்கொண்டு வருகின்றேன்.

(சகி வ-ம்.) நல்லது அப்படியே பார்த்துக்கொண்டு வருகின்றேனம்மா.



(மனோ வ-ம்.) ஆ ஆ இம்மனோரஞ்சிதச்செடிகளுக்கடியில் யாதோவொரு ப்ரகாசந்தோன்றுகின்றனவே. ஆ ஆ அவையின்னதென்று தெரியவில்லையே நல்லது இன்னுங்கொஞ்சஞ் சமீபத்திற்போய்ப் பார்க்கலாம்.

==()==

(மனோரஞ்சிதம் ஜாவளி.)

சாமிகாநாதோமாட்லாடாதெந்துகுரா

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு

இராகம் கமாஸ் தாளம் ஆதி

பல்லவி.

அடடா இவனாரோ தெரியவில்லையே

சரணங்கள்.

வானுலகிந்திரனோ மாராமச்சந்திரனோ
ஞானவள்ளிநாயகனோ (அடடா)

தன்மாராஜர்க்கிளைய தம்பிபீமகோமானோ
மன்மதராஜதுரையோ (அடடா)

சந்திரனைப்போலநம் நந்தவனத்தினிற்
சுந்தரமாகவிலங்கும் (அடடா)

வாலிபன்றனைக்காண மாமயலெனக்குமென்
மேலுமுண்டாகுதென்செய்வேன் (அடடா)

==o==

(மனோ வ-ம்.) ஆ ஆ என்னாச்சர்யம் என்றுமில்லாத விபரீதமாயிருக்கின்றதே. ஆ ஆ பூர்ணசந்த்ரனைப்போன்ற ப்ரகாசத்துடன் யாரோவொரு சுந்தரபுருஷன் சயனித்திருக்கின்றானே. ஆ ஆ இவனாரென்றுந் தெரியவில்லையே ஒருவேளை இந்திரனாயிருக்கக்கூடுமோ அப்படியானாற் சகஸ்த்ர விலோசனங்களிருக்கவேண்டுமே அப்படிக்கொன்றுங்காணப்படவில்லையே. அல்லது ஸ்ரீராமச்சந்த்ர ப்ரபுவாயிருக்கக்கூடுமோ. அப்படியிருக்[illegible] ஹஸ்தத்தில் காத்திற் சங்குசக்ராயுதந் தரித்திருக்கவேண்டு[illegible] ப்படியுமில்லையே. அல்லது சிவசுப்ரம்ஹண்ய[illegible] க்கூடுமோ. அப்படியிருக்குமாகில் ஷண்முகமும் பன்[illegible] முமிருக்கவேண்டும் வெற்றிவேலுஞ் சேவற்கொடியுந் தரித்[illegible]

கவேண்டுமே அப்படியுங்காணப்படவில்லையே. அல்லது வீமராஜனாயிருக்கக்கூடுமோ அப்படியாகில் கோமளமேனியுங் காத்திற் கதாயுதமுமிருக்கவேண்டுமே அப்படியுங்கிடையாதே. நல்லது ஒருசமயம் மன்மதனாயிருக்கக்கூடுமோ அப்படியிருக்கும் பக்ஷத்தில் உருவந்தோற்றுவதற்கு ஞாயமில்லையே. ஆ ஆ என்ன சொல்லப்போகின்றேன். இவனைப் பார்க்கப்பார்க்க எனக்கு மிகுந்த மையலுண்டாகின்றனவே நல்லது இன்னுஞ்சற்று சமீபத்திற்போய்ப் பார்ப்போம்.

——(0)——

(மனோரஞ்சிதந் தரு.)

முங்கிமுழுகிற பெண்ணேயெனக்கொரு
முத்தந்தாராயோ-
என்ற பதசாகித்யத்தின் வர்னமெட்டு
இராகம் தன்யாசி தாளம் ஆதி

பல்லவி.

சந்திரன்போலிதோ வந்துநித்திரைசெய்யுஞ்
சாமியுமெவ்வூரோ.

அநுபல்லவி.

சுந்தரமானவித் துரைதனக்கிணையாருஞ்
சொல்லவிப்புவிதனி லில்லையேயொருபோதுஞ் (சந்)

சரணங்கள்.

மன்மதனைநிகர்த்த மன்னனைப்பார்த்திட
மையலுண்டாகிறதே-யெனை
மருவிச்சுகிக்கவரு வாரோவராரோவென்று
மனமதுநோகிறதே
பொனமுலைகளிரண்டும் விம்முதுமென்மேலும்
என்கனவினில்வந்த மன்போற்றெரிவதாலுஞ் (சந்)

தட்டியெழுப்பியெனைக் கட்டியணையுமெனிற்
றடைசொல்லிவிடுவாரோ முத்தந்
தாருமெனநமயல் தீருமென்றாலநம்மொழி
தனக்குவுட்படுவாரோ
தொட்டழைத்திடமன மட்டிதோமலைக்குது
பொட்டுப்பொட்டெனப்பல்லி கொட்டியேகுலைக்குது (சந்)





(மனோ வ-ம்.) ஆ ஆ இவரழகானது பூர்ணசந்த்ரனைப்போற் ப்ரகாசிக்கின்றதே. ஆ ஆ இவரெந்தவூரோ தெரியவில்லையே. ஆ ஆ இவரழகிற்கிணையான வரசர்களிந்தப் பூமண்டலத்திலொருவருமில்லையே. ஆ ஆ நமது சொற்பனத்தில்வந்து சுகித்த ராஜதுரையைப்போற் றோன்றுகின்றதாகையா லிவர்தானமக்கு நாயகனாவார்போற் காண்கின்றது நல்லது இவரைப்பார்க்கப்பார்க்க எனக்கு விரகதாபமிகுந்து கிண்ணம்போலொத்த வெனது ஸ்தனபாரங்களிரண்டும் பெரிய யானைமஸ்தகத்தினைப்போற் றடிக்கின்றதே. ஆ ஆ நாமிவரைத் தட்டியெழுப்பிக் கட்டியணையும்படி கேட்டுக்கொள்ளும் பக்ஷத்தில் நமதிஷ்டப்படி நடப்பரோ அல்லது நமது வார்த்தைக்கட்டி. யேதேனுஞ் சொல்வரோ தெரியவில்லையே. ஆ ஆ அதிரூபலாவண்யமுடைய புருஷனது நித்திரைக்கு விரோதமாய்த் தொட்டழைப்போமென்றாலுமிகுந்தபயங்கரமாயிருக்கின்றதே என்செய்வேன். ஆ ஆ என்னாச்சரியம் நாமெழுப்பலாமென்று யோஜித்துக்கொண்டிருக்குஞ்சமயத்தில் கௌளியும் பட்டுப்பட்டென்று கொட்டிக்குலைக்கின்றதே அதின்காரணந் தெரியவில்லையே. நல்லது இவர் பாதத்திற் கருகாண்மையிலிருந்தழைத்துப் பார்ப்போம்.

——(0)——

(மனோரஞ்சிதந் தரு)

பாரோ ஓ ரங்கா பாரோ
என்ற கன்னடக்ருத்தியின் வர்னமெட்டு
இராகம் செஞ்சுருட்டி தாளம் ரூபகம்

பல்லவி.

ஏனோ ஓ சாமி யேனோ

அநுபல்லவி.

ஏனோநீ ரின்னமும்நித்திரை
யெழுந்திருமெழுந் திருமேந்தலே சாமி (யேனோ)

சரணம்.

விரகதாபமிகுதியாகுதே வேள்விடுகணையென்மனம்நோகுதே
மருவுஞ்சமயந் தவறிப்போகுதே சாமி (யேனோ)

(மனோ வ-ம்.) ஓ அரைசயே இன்னும் நித்திரையாயிருக்குங் காரணம்யாது பாரும் யானோ மன்மதன்பாணப்ரயோகத்தி னடிபட்டு மிகுந்த விரகதாபத்தை யுடையவளாயிருக்கின்றேன் ஹே சாமி என்மனமானது பதைக்கின்றதே. ஓநாயகா நல்லசுகத்தை யடையுஞ்சமயந் தவறிப்போம்போலிருக்கின்றது சீக்கிரமெழுந் திரும். ஆஆநாம் சமீபத்தில் நின்றழைத்தும் பேசாதிருக்கின்றீரே என்செய்வேன் எனக்குமையலானது தாளமுடியவில்லையே.

(மனோரஞ்சிதந்-தில்லானா.)

தாஜ்ம் தீம் தீம் ததிரானா த்ரா த்ரா

என்ற தில்லானாவின் வர்ணமெட்டு

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி

பல்லவி.

பேசாதிருப்பதென்னனாயமா சாமி
பேசாதிருப்பதென்னனாயமா.

அநுபல்லவி

தானாதந்த்ரினா தானாதந்த்ரினா ஏனோவின்னம் (பே)

சரணங்கள்.

மதன்கணைதாவுதே மாங்குயில்கூவுதே
தானாதந்தரினா தானாதந்த்ரினா ஏனோவின்னம் (பே)
தனமதுதடிக்குதே மனமதுதுடிக்குதே
தானாதந்த்ரினா தானாதந்த்ரினா ஏனோவின்னம் (பே)
மையலுண்டாகுதே மெய்யதுநோகுதே
தானாதந்த்ரினா தானாதந்த்ரினா ஏனோவின்னம் (பே)
மாருதஞ்சாடுதே மதஜலமோடுதே
தானாதந்த்ரினா தானாதந்த்ரினா ஏனோவின்னம் (பே)
தியவதுவல்லையா சங்கதிசொல்லையா
தானாதந்த்ரினா தானாதந்த்ரினா ஏனோவின்னம் (பே)

(மனோ வ-ம்.) ஆ ஆ நாமெவ்வித முயற்சிசெய்துஞ் சற்றேனும் நித்திரை தெளியா திருக்கின்றனவே என்செய்வேன். ஆ ஆ ஈசனது நெற்றிக்கண்ணாலெரிந்த மன்மதனானவன் என்மீதுபுஷ்ப பாணமெய்கின்றானே யானதைத் தப்பித்துக்கொண் டெவ்விதம் போகப்போகின்றேன்.



——(*)——

(மனோரஞ்சிதஞ்-ஜாவளி.)

ஈவிரஹமெடுலோர்த்துனேசெலியா

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு

இராகம் - பியாகு - தாளம் - ரூபகம்

பல்லவி.

மாமதனே யெனை வாதைசெய்யாதே

அநுபல்லவி.

பூமலர்க்கணைதொடுத்தென்மேற் போடலாமோடா (மாமத)

சரணங்கள்.

எழியாள்மீதென்னகோப மிக்ஷணமேபோவாய்பெண்
பழிபாவம்விடாதுவுன்னைப் பற்றும்நீசாவாய் (மாம)
சந்த்ரஜடாதரசிவ சங்கரனும்நானோ வீண்
தொந்திரவுசெய்தாலின்னந் துயர்சகிப்பேனோ (மாம)

—0(*)0—

(மனோ வ-ம்) ஹேமன்மதா பார் முன்னம் நின்னுருவத்தை நெற்றிக்கண்ணாலெரித்த சாம்பமூர்த்தியிடம் போர்புரிந்தது போலென்னிடமுமா போர்க்குவந்து மஹாவுக்கிரத்தொடு கணை தொடுக்கின்றனை ஒருவேளை யென்னையைத்தான் சிவனென்று நினைத்துக்கொண்டு வந்தனையோ ஹேமாராபார் எனது சிரத்திலிருக்குங் கூந்தலைச் சடையென்று நினைத்தனையோ அல்லல்ல இது பின்னற்சடை என் கண்டங்கறுத்திருப்பதை விஷமென்று நினைத்தனையோ அல்லல்ல இது கஸ்தூரிப்பூச்சு எனது தேகத்தைப்பார்த்து வெண்ணீறென்று நினைத்தனையோ அல்லல்ல இது உடம்பின் வெண்மையாக்கும் யான் சிவனென்று யோஜியாதே ஹேசித்தசா பார் உன்னைப்போன்ற வீராதிவீரர்களிடத்தி லுன் கைகாட்டினாற் செல்லும் யானோ பேதைமையான பெண்பாலாயிருக்கின்றேன். ஹேஅனங்கா வீணாகவென்னையேன் தொந்தரிக்கின்றனை என்பாவ முன்னைச்சுற்றிபிடிக்குமாதலா லதிசீக்கிரமோடிப்போய் விடுவாயாக. ஆ ஆ, எனது குறைகளனைத்தையு

முனைமயிட்டு மன்மதன் கொஞ்சங்கூட நெஞ்சமிளகாது தொந்திரைசெய்கின்றனே. ஆ ஆ யானென்னபாவஞ் செய்தேனோ தெரியவில்லையே என்மனமானது தஹிக்கின்றதே இனியென் செய்கின்றதாலல்லது இன்னொருதரமாவது பக்கத்தில்நின்றழைப்போம்.

—[*]—

(மனோரஞ்சிதத்தின்-தரு.)

கருத்திலில் வளர்ந்தோங்கு மேகாம்பரியே

என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு

இராகம் பியாகு தாளம் ஆதி

பல்லவி.

உறக்கமின்னமுமேதுவோ கோ னுரையே

அநுபல்லவி.

பொறுக்கமுடியாது நான் [illegible]மொழியே [illegible]குண
பூமா முக சோமா துயர்போமா துரையே (உறக்க)

சரணங்கள்.

மங்களபோகனே மாமலர்வாகனே—என்முன்
மாரன்கணைசிறி யதில் மையல்தலைக்கேறி இதோ
வந்தேன் மனம் நொந்தேன் மதி தந்தேன் துரையே (உற)

திவ்யசொருபனே திடபுயமார்பனே [illegible]
செய்வதறியேனே யென்னசெய்வேனோ [illegible]
சித்த. [illegible] வைத்து வொரு முத்தம் தருவாய் (உற)

(மனோ வ-ம்.) ஆ ஆ எனதாசைக்குகந்த நாயகர் இரமிக்குதமாரனைப்பும் (அரவிந்தம், அசோகம், குவளை, சூதம், முல்லை) யென்னும் பஞ்சபுஷ்ப பாணத்தாலடிபட்டுத் தவிக்கின்றேனே ஆ ஆ நாதா இன்னும் நித்திரையாயிருந்தா லென்செய்வேன் ஒருக்கால் [illegible] பாரும் பேதமையான பெண்குறைகேட்டால் மலையுங் கரையுமென்று சொல்வார்களே தமதுமனமானது கொருசமேனு மிளகாத இரும்பு நெஞ்சமாயிருக்கின்றதே ஆ ஆ தெய்வமே இன்னுமெழுந்திருக்க வில்லையே.

---





(மனோரஞ்சிதன்-தரு)

தேமதிதிவ்யமதே சரஸ்வதி

என்ற க்ருத்தியின் வர்ணமெட்டு

இராகம் ஆனந்தபைரவி தாளம் ஆதி

பல்லவி.

பார்த்திருப்பதுஞாயமா ஜெகதீசனே
பார்த்திருப்பதுஞாயமா.

அநுபல்லவி.

வேர்த்தடிக்கடிசும்மா மீறுதுசோபஞ்
தீர்த்தருள்பரிதாபஞ் ஜெகதீசனே (பார்)
மன்னனிவ்வனந்தனில் மண்ணினிற்றூங்க
இன்னம்நானினைந்தேங்க ஜெகதீசனே (பார்)
காமனென்மீதுமலர்க் கணையதுபோட
சோமனின்கனல்சாட ஜெகதீசனே (பார்)

—(0)—

(மனோ வ-ம்.) ஹேஜெகதீசா பார் முன்னம் நினது நெற்றிக்கண்ணாலெரிந்த மன்மதனானவ னிப்பொழுதுயிர்த்தெழுந்து வந்தென்மீது பாணப்ரயோகஞ்செய்கின்றனே ஹேதேவா இப்பரிதாபத்தைப் பார்த்துக்கொண்டிருக்கின்றனையே இந்தநாயகன் தான் கெஞ்சிற்றேனு மனமிரங்காமலிருக்கின்றார். உனக்கு மனதிரங்காதிருக்கின்றதாவென்ன ஆ ஆ எனதாசைக்குகந்த நேசஅரைராஜன் கேவலமான மண்ணிற் புரண்டுருள்வதைப் பார்க்கப்பார்க்க மிருந்த துக்கமுண்டாகின்றனவே ஹேமஹாதேவா இவ்விதகஷ்டத்திற் காளாக்கிவைத்தனையே பரமேசா இனியானெவ்விதமுய்யப்போகின்றேன். ஆ ஆ ராஜன்தான் மனமிரக்கமில்லாமற்றுயில்கின்றாரென்று வருத்தப்படலாயிற்று நம்மைப்படைத்த கடவுளு மப்படியே யிருக்கின்றாரென்செய்கின்றது மனமே பதறாதே பொரு.

—(*)—

(மனோரஞ்சிதன்-தரு.)

காப்பாயே முருகாநீயே

என்ற தோமிர்தசாரத்தின் வர்ணமெட்டு

இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி

பல்லவி.

மனமே நீ மயங்காதே பொருபொரு

அநுபல்லவி.

சினமாய் மன்மதன் செங்கணை யெய்தாலும்(மன)

சரணங்கள்.

வருவதெல் லாம்வரும் வருந்தினு லென்தரும்(மன)

==()==

(மனோ வ-ம்.) ஹேமனமே பார் நீமயங்குவதி லென்னப்ரயோசனமிருக்கின்றது வருவதெல்லாம் வந்துதானே தீரும் ஆனைபாற் சற்றுபொறுத்துக்கொள் நாமிங்கிருந்தா லொன்றுமவிமோசனப்படாது. நல்லது நமதுசகிமாது இதுநேரத்திற்குள் நமது சிங்காரமண்டபத்திற்கு வந்திருப்பள் நாமங்குசென்று நமது சேடியிடத்திற்சொல்லி இந்த ராஜதுரையினது நித்திரைக்குப் பங்கம்வாராம லெடுத்துவரும்படி செய்து நமதிஷ்ட காம்யத்தை நிறைவேற்றிக் கொள்வோம் இதுவேநல்லயோசனை ஆ ஆ நாமப்புறஞ் செல்லும்பக்ஷத்தி லொருவேளையிவரெழுந் தெங்கேனுஞ் சென்றிடுவாரோ. அப்படிச்சென்றபோதினு மிவர்நாமதேயந் தெரிந்திருக்கும் பக்ஷத்தில் நமது தங்கைக்குப்போதித் தழைத்துவரும்படிசெய்து மாலைசூட்டிக் கொள்வோமெனினும் பெயர் தெரியவில்லையே. ஆ ஆ இவர் கரத்தின் கடைவிரலிற் பூண்டிருக்குங் கணையாழியானது என்னப்ரகாசத்தைத் தருகின்றது அதிலோர்சமயமிவர் நாமதேயம் வரைந்திருக்கக்கூடுமோ நல்லது பார்ப்போம் ஆ ஆ இதில் (மதனசுந்தர மஹாராஜ) னென்றெழுதப்பட்டிருக்கின்றது இவரழகிற்குத்தகுந்தநாமதேயந்தான் நல்லது இவரது நகரந்தெரியவில்லையே. ஆ ஆ என்செய்கின்றது நல்லது இக்கணையாழியை நாம் கழட்டிக்கொண்டு நமது கணையாழியை யிவர் விரலிற் பூட்டிவிட்டுப் போகும்பக்ஷத்தில் ஓர்சமயமிவர் விழித்தபோதினுங் கணையாழிமாறி யிருப்பதைப்பற்றி வ்யாகூலத்துடன் யோசித்துக்கொண்டிருப்பர் அதற்குள் நமது சேடியையனுப்பி விடுவோம் இதுதான் சரியானயோஜனை நல்லது இக்கணையாழியை மெதுவாய்க் கழட்டுவோமிப்போது.



விருத்தம்.

மாதுமனோரஞ்சிதமுமனமயங்கி
மன்னவன்கைக்கணையாழிதனைக்கழட்டும்
போதுவிழிப்புண்டாகியெழுந்துதன்செம்
பொற்பதத்திற்கருகிருக்கும்பெண்ணைப்பார்த்துச்
சோதிமுகமங்கையரேநீயாரெவ்வூர்
சொந்தமுடனென்விரலிலணிந்திருந்த
மோதிரத்தைக்கழட்டியதேன்சொல்வாயென்று
முடிவேந்தனகமகிழ்ந்துமொழிகின்றனே.

==(-)==

(ம-ராஜன் ஜாவளி.)

அலவாணிநிலரம்மனே

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு

இராகம் பியாகு தாளம் ஆதி

பல்லவி.

வந்தவள்நீயாரடி யிங்கு
வந்தவள்நீயாரடி

அநுபல்லவி.

அந்தரமடந்தையர்போ லிங்கு (வந்த)

சரணங்கள்.

மணமலர்மேவு மயிர்முடிமாதேயென்
கணையாழிதன்னைக் கவர்ந்தனைநீ
கணையாழிதன்னைக் கவர்ந்தனை யிப்போது
அந்தரமடந்தையர்போ லிங்கு (வந்த)
ஊரென்னபேரென்ன வுற்றதுசொல்லடி
வாரணிகொங்கை மடமானே பொன்
வாரணிகொங்கை மடமானேயிப்போது
அந்தரமடந்தையர்போ லிங்கு (வந்த)

—*—

(ம-ராஜன் வ-ம்.) மேகம்போன்ற கூந்தலினையும் [illegible] பிறைபோன்ற நெற்றியினையும், விற்போன்ற புருவங்களையும் வேலைபோன்ற விழிகளினையும், கத்தரிக்கோல்போன்ற [illegible]

ளினையும், குமிளம்பூப்போன்ற நாசிகளினையும், சாணைபோன்ற கன்னங்களினையும், அல்லிப்பூப்போன்ற வாயினையும், முத்தைப் போன்ற பறகளினையும், பவளம்போன்ற விதழ்களினையும், சங்கைப்போன்ற கழுத்தினையும், மூங்கில்போன்ற தோட்களினையும், மகரவீணைபோன்ற முன்கைகளினையும், களிற்றுமீன்போன்ற விரல்களினையும், கிளிமூக்குப்போன்ற நகங்களினையும், பிண்ணம்போன்ற ஸ்தனங்களினையும், ஆலிலைபோன்ற வயிற்றினையும், நீர்த்திரைபோன்ற வயற்றுமடிப்புகளினையும், நீர்ச்சுழிபோன்ற வுந்தியினையும், எறும்புக்கூட்டங்களபோன்ற ரோமக்கொடியினையும், மின்னல்போன்ற விடையினையும், நாகபடம்போன்ற வல்குலினையும், மான்குழம்புபோன்ற குறியினையும், வாழைபோன்ற துடைகளினையும், நண்டுபோன்ற முழந்தாள்களினையும், வரால்மீன்போன்ற கணைக்கால்களினையும், அமிர்தம்போன்றவசனங்களினையும், படைத்து தேவமாதர்களைப் போன்றுவிளங்குமாதே நீயார் உன்பெயரென்ன நீவாசஞ்செய்யும் நகரம்யாது நீயிங்கெதற்காகவந்தனை என் கணையாழியைக் கவர்ந்த காரணம் யாது அதிசீக்கிரஞ் சொல்வாயாக.

———(-)———

(மனோரஞ்சிதந்-தரு)

மன்னவுன்மனம்நொந்து வாடநான்சகிப்பேனோ

என்ற அரிச்சந்த்ர நாடகத்தருவின் வர்னமெட்டு

இராகம் சங்கராபரணம் தாளம் ரூபகம்

பல்லவி.

மன்னும்வென்பெயரது மனோரஞ்சிதமையா

அநுபல்லவி.

பொன்னாபரணந்திகழ் பூமாவ்தனசோமா (மன்)

சரணங்கள்.

செந்திருநடமிடுஞ் சுந்தராபுரியது
எந்தன்தந்தையினது சொந்தநகரமையா (மன்)

நந்தவனத்திற்கு வந்தவனும்மைக்கண்டு
சிந்தைதனிலகினைந்து நொந்துருகினேன்றுரை (மன்)

அணையவருவீரென்றே யழைத்தேன்பேசாதிருந்தீர்
கணையாழியைக்கழட்டக் கண்ணைவிழித்தீரையா (மன்)



(மனோ வ-ம்.) ப்ரபு பாருங்கள் யானிருப்பது (சுந்தராபுரி) எனதுபெயர் (மனோரஞ்சித)மென்று சொல்லப்படுவேன் யானெனது சொந்தமாகிய இந்த நந்தவனத்தைப் பார்க்கவந்தவனும்மைக்கண்டு மையல்கொண்டு கட்டியணையக்கருதிச் சிலநேரமாயழைத்துப்பார்த்தும் நீரெழாமலிருந்தமையாற் கணையாழியைக் கழட்டினால் ஓர்சமயம் விழிப்பீரென்றெண்ணிக் கழட்டியதிலெழுந்துவிட்டீர் ப்ரபு.

(ம ராஜன் வ-ம்.) ஹேபாவாய் உனதுநகரமெவ்வளவுதூரத்திலிருக்கின்றது.

(மனோ வ-ம்) ப்ரபுபாருங்கள் சுமார் ஒரு நாழிகைத்தூரமிருக்கும் மஹாராஜ்.

(ம ராஜன் வ-ம்.) ஹேபூவாய் உன்தந்தையின் பெயர்யாது

(மனோ வ-ம்.) ப்ரபு எனதுதந்தையின்பெயர் (சுந்தரபாண்டிய மஹாராஜா)வென்று சொல்லப்படுவர்.

(ம-ராஜன்-வ-ம்.) ஹேகோதாய்உனதுநாயகன்பெயரென்ன

(மனோ வ-ம்.) ப்ரபுபாருங்கள் எனதுநாயகன்பெயர் (மதனசுந்தரமஹாராஜா)வென்று சொல்லப்படுவர்.

———(*)———

(ம ராஜன்-தரு.)

அம்ஸகாதனைபா துபாலமு

என்ற இந்துஸ்தானியின் வர்னமெட்டு

இராகம் பூரிகல்யாணி தாளம் இந்துஸ்தானி ஆதி

பல்லவி.

எப்படியறிந்தாய்நீ யெனதுபெய-ரெப்

சரணம்.

கண்டவள்போலவே கழறவந்தாயே
தண்டையணிந்தமானே யெனதுபெய(ரெப்)

(ம-ராஜன்-வ-ம்.) ஹேபொற்றண்டையணிந்த பூவாய் எனது நாமதேய முனக்குத்தெரிந்த காரணம்யாது.

(மனோ-வ-ம்.) ப்ரபுபாருங்கள் தமதுகணையாழியில் வரைந்திருப்பதைக்கண்டு சொல்லலாயிற்று மஹாராஜ்.

(ம-ராஜன்-வ-ம்.) ஹே சந்தனிந்துகந்தாய் பார் யானுனது தந்தைக்குக் கப்பங்கட்டக்கூடிய அந்தஸ்தி லிருக்கும்போது நீ யென்னை நாயகனென்று சொல்லத்தகாதுமாதே. பார் நாமிருவருமிங் கேகாந்தமாய்ப் பேசிக்கொண்டிருக்குஞ் சங்கதி யுனது தந்தைக்குத் தெரியவருமேயாகில் என்னராஜ்யபதிதிற் கானிவந்து சேரும் ஹேகோதாய் பார் உனது தந்தையின்பெயரைக் கேட்டவுடனே யெனதுமனமானது மிகுந்தபயங்கரமுற் றிருக்கின்றதாகையால் யானெனது நகரத்திற்கேக விடையளிப்பாயாக.

—[*]—

(மனோரஞ்சிதன் தரு.)

ஞானிக்குமணிகேட்டீரோ ஐயாஜாவுரே

என்ற - இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-இந்துஸ்தானி-ஆதி

பல்லவி.

இந்தமொழி சொல்வதேனையா-துரைநாதா நீ,
இந்தமொழி சொல்வதேனையா

அநுபல்லவி.

சொந்தமாய்த்தானே வந்தவள்தானே துரைநாதா நீ (இந்த)

—[0]—

(மனோ-வ-ம்.) ஹேப்ராணநாதா பாருங்கள் யான்தம்மை விவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்று நினைத்திருக்க இப்போதிந்தவார்த்தைசொல்வது தகுதியாப்பு.

(ம-ராஜன்-வ-ம்.) கொப்பணிந்தகோதாய் பார் நீயென்னைவிவாகஞ்செய்துகொள்ளல் வேண்டுமென்று நினைத்தால் முடிந்துவிடுமோவென்ன. உனது தந்தையினபிப்பிராயமல்லவோ வேண்டும் வீணாகவென்னையேன் தொந்தரிக்கின்றனை சீக்கிரம்விடையளிப்பாயாக.

(மனோ-வ-ம்.) ஹேதுரையே பாருங்கள் என்தந்தையானவரெனது வார்த்தைக்குட்பட்டு நடப்பரேயன்றி மீறிநடப்பரென்று ஒருசிறிதேனும் பேதிக்கவேண்டியதில்லை யாகையாலிப்போதடியாளை மாலைசூடிக்கொள்வதா யுறுதியானவாக்குக் கொடுத்தல்வேண்டும் இல்லாவிடில் இதோ தமது பாதாரவிந்தத்திலேயே



யான் ப்ராணத்யாகஞ் செய்துகொள்ளச் சித்தமாயிருக்கின்றேன் ப்ரபு.

(ம-ராஜன்-வ-ம்.) ஹே வங்கியணிந்தவஞ்சி பார் அப்படியுனது தந்தைக்குச் சம்மதமிருக்கும்பக்ஷத்தில் உனதிஷ்டப்படி நடக்கச் சித்தமாயிருக்கின்றேன் பெண்ணே.

(மனோ-வ-ம்.) ஹேப்ரபு பாருங்கள் தமது திருவாக்குப்பிறக்கும்வரை யெனதுமனமானது பதைத்துக்கொண்டிருந்தது இப்போதுதான் மனங்குளிர்ந்தது அல்லது தாமிருக்கும் நகரம் யாது அகஸ்மாத்தா யிங்குவந்தகாரணம்யாது. அடியாளுக்குத் திருவுளம்பற்றி யருளல்வேண்டும்

—◆—

(ம-ராஜன் ஜாவளி.)

அருட்பாரிதா வலேனா

என்ற-ஜாவளியின் வர்ணமெட்டு

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி

பல்லவி.

குணமாதே சொல்லக்கேளடி.

சரணங்கள்.

மங்களகரமான வாழ்ந்திருப்பது பெண்ணே
பங்கயமாமலர்க்கண்ணே (குண)
காட்டினிலேமிருக வேட்டைகளாடிவிட்டின்
தோட்டமார்க்கமாய்வந்தேன் (குண)
தாகத்தினாலிந்தத் டாகத்திற்சலமுண்டு
சோகித்திளைப்பாறினேன் (குண)

—◆—

(ம-ராஜன்சொல்-வெண்பா.)

வாரிட்டிருமாந்து மத்தகத்தையொத்தடர்ந்து
பூரித்துவிம்மிப் புடைத்தெழுந்து—ஆரந்தோ
டற்புதமாரத்னவணி யாடக் கடைந்தெடுத்த
செப்பிணைநேர் பொற்குயமாதே!

(ம-ராஜன்-வ-ம்.) பார் யானிருப்பது மங்களநகரம் எனது நகரத்திலுள்ள குடிகளெல்லா மென்னிடத்திற்குவந்து தங்களுடைய தோட்டம்-வயல்-காடு-முதலிய நஞ்சை-புஞ்சைகளில் விளைந்திருக்கும் பயிர்களை புலி-கரடி-பன்றி-யானை-முதலிய மிருகஜாதிகளானது வந்தழித்துத் தும்ஸப்படுத்துவதாய் மிகுந்த வருத்தத்துடன் முறையிட்டுக்கொண்டார்களாதலால் யான் வேட்டைக்காரர்களோடு கானகத்திற்குவந்து வேட்டையாடியதி லெனக்கு மிகுந்த தண்ணீர்த்தாகமுண்டாகி யதனாலனேக வனங்களெல்லாஞ் சுற்றிப்பார்த்தும் எங்குஞ் ஜலங்கிடைக்காமல் வரும்போது இந்நந்தவனமானது மிகுந்தகுளிர்ச்சிபொருந்தியதாய்த் தோன்றிற்று. அதனாலொரு சமயஞ்சலமிருக்கக்கூடுமென்றெண்ணி யிங்குவந்து தேவாமிர்தம்போன்ற இத்தடாகத்தில் நீரருந்தி விட்டுச் சற்றுநேரமிந்தப் பூங்காவின் விநோதங்களைப்பார்த்துக் கொண்டிருக்கும்போது ஒருவித சுகமான தென்றலடித்ததினா லெனக்கு நித்திரையுண்டாகி யிங்கு சயனித்திருந்தேன்மாதே.

(மனோ-வ-ம்.) ப்ரபுநல்லது இவ்விருக்ஷத்தடியிலெதற்காக வீற்றிருக்கவேண்டும் இதோ தெரிகின்ற வெனது சிங்காரமண்டபத்திற்குப் போவோந்துரையே.

(ம-ராஜன்-வ-ம்.) ஹேமாதே நல்லது அப்படியேபோவோம் பார் இதோ மிகுந்த பரிமளத்தையுடைய வொருவிதமான புஷ்பந்தோன்றுகின்றனவே அதின்பெயர்யாது.

(மனோ-வ-ம்.) ப்ரபு பாருங்கள் அது (மனோரஞ்சித) மென்னும் புஷ்பந்துரையே.

(ம-ராஜன்-வ-ம்.) உன்பெயரையொத்த விப்புஷ்ப மெவ்விடத்திலுற்பத்தியாகின்றது மாதே.

(மனோ வ-ம்.) ப்ரபு இது(தேவேந்திர)னுடைய கற்பகச்சோலையென்னும் நந்தவனத்தி லுற்பத்தியாகின்றது கோவே.

(ம-ராஜன்-வ-ம்) அதுவனது நந்தவனத்திற்கு வந்தகாரணமியாது.

(மனோ-வ-ம்) ப்ரபுபாருங்கள் இதற்குச் சிலநாளைக்குமுன் (தேவேந்திரன்) பூஜைக்காகக் காந்தர்வர்கள் புஷ்பங்களெடுக்கப் பூலோகத்திற்குவந்து சுற்றியலைந்தும் எங்கும் புஷ்பங்களகப்படாமலிந்த நந்தவனத்திற்கு வந்ததி லவர்களிஷ்டம்போல வேண்





டிய அனேக புஷ்பஜாதிகள் புஷ்பித்திருந்ததைப்பற்றி மனமகிழ்ந்து தங்களுக்குப் போதுமான மட்டிலும் பறித்துக்கொண்டு போனவர்கள். இப்பேர்க்கொத்த கஷ்டப்பட்ட நமக்குஇஷ்டப்படி (மனோரஞ்சித)த்தினது நந்தவனத்திற்கிடைத்த புஷ்பங்களுக்குப்ரதிப்ரயோசனமாகஅவளது காயமழிந்துபோனபோதிலும் நாமதேயமழியாம லெப்போதும் பூலோகத்தில் வழங்கிக்கொண்டிருக்கும்படி நமது(தேவேந்திரமஹாராஜா)வினதுகற்பகச்சோலையிலுற்பத்தியா யிருக்கின்ற புஷ்பங்களில் மேன்மைபொருந்திய(மனோரஞ்சித)மென்னும்புஷ்பச்செடிகள்கொண்டுவந்தவளது நந்தவனத்திற் பயிர்செய்து வைக்கவேண்டுமென்று நினைத்து அந்தக் காந்தர்வர்கள் கொண்டுவந்திங்கு பயிர்செய்து வைத்த புஷ்பந்தானிது துரையே.

(ம-ராஜன்-வ-ம்.) அப்படியா அதுவிதற்குமுன் னிந்தப்புஷ்பம் பூலோகத்திற்கிடையாதோ.

(மனோ-வ-ம்.) கிடையாதுவேந்தே.

(ம-ராஜன் வ-ம்.) ஆ ஆ நீயிவ்விதசிங்காரமான நந்தவனமேற்படுத்தி யிருப்பதைப்பற்றி மிகுந்த சந்தோஷப் படுகின்றேன் கோதாய்.

(மனோ-வ-ம்) ப்ரபுநல்லது நமது சிங்காரமண்டபத்திற்குப் போவோம் வாருங்கள் துரையே.

(ம ராஜன்-வ-ம்) நல்லது அப்படியே போவோம்பூவாய்.

(மனோ-வ-ம்) பார்த்தீர்களா ப்ரபு எனது சிங்காரமண்டபமெவ்வளவு விசித்ரமாயிருக்கின்றது.

(ம-ராஜன் வ-ம்.) ஹேநங்காய் பார் உனது கீர்த்திப்ரதாபத்திற்கு மண்டபம் விசித்ரமாயிருக்கத்தடையாதிருக்கின்றது.

(மனோ-வ-ம்) நல்லது இவ்வமளியில்வீற்றிருங்கள்துரையே.

(ம-ராஜன்-வ-ம) அப்படியே வீற்றிருக்கின்றேன் மின்னே நீயேதற்காக நிற்கின்றனை சமீபத்தில்வீற்றிருப்பாயாக.

(மனோ-வ-ம்.) $ அப்படியே யிருக்கின்றேன் ப்ரபு.

(ம-ராஜன்-வ-ம்.) மல்லிகைமலரணிந்தமங்காய் நீயென் கரத்தைத் தீண்டுங்காரணமியாது.

(மனோரஞ்சிதன் தில்லானா.)

நாதர்திம்-தீம்தனா-தீம்தனன-சமகம-பாதநீ-சநிதபம

என்ற தில்லானாவின் வர்னமெட்டு

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி

பல்லவி.

வாருமே நாயகா நேயமுடன்
மருவிட வேநல சமயமிது வா.

அநுபல்லவி.

பாருமெனதுமயல் — தீரவிதுததிசீர் (வாரு)

சரணம்.

தாதைக்கிப்பொழுதேயென் — தாதியைவிட்டுப்
போதிக்கச்சொல்கிறேன் — பூபதியே
தாதாகிட திமிகிட — த்ரியானுசேர்தனனேம்
மகரிச — கரிசநி — ரிசநித — சநிதபம (வாரு)

(மனோ-வ-ம்.) ஹேப்ரபு பாருங்கள் யான் தம்மைவிவாகஞ் செய்துகொள்வதைப்பற்றி யெனதுசகிமாது இப்போதிங்குவருவாள் அவளையனுப்பி யெனது தந்தைக்குப் போதிக்கச்செய்கின்றேன் இப்போது யான் தம்மைப்பார்த்துப்பார்த்து மிகுந்தகாமவெறிகொண்டவளா யிருப்பதால் நாமிருவரு மிந்தமலரணையிற் படுத்துச் சரசலீலாவிநோதஞ்செய்து யான் கொண்டமையலைத் தீர்த்தருள நல்லசமயமாயிருப்பதால் இப்போது தயவுசெய்து உத்திரவுகொடுத்தல்வேண்டும் ப்ரபு.

——(0)——

(ம ராஜன் தரு.)

சிவசுப்ரமண்ய தேவேயென்கோவே
சித்தமிரங்கியருள் செய்யநிலாவே

என்ற கீதாமிர்தசாரத்தின் வர்னமெட்டு

இராகம்-சுருட்டி-தாளம்-சாபு

பல்லவி

மதியதுபோன்ற மாமுகமாதே
மருவத்ததிமிதல்ல வம்புசெய்யாதே



அநுபல்லவி.

காரிகைக்கெல்லாங் — கற்பல்லோவழகு
காணுதிருநதாலினிக் — கண்டுநீபழகு (மதிமு)
திருமணஞ்செய்து — சேர்வதுநீதி
தெரியாமலணுகுவ — தேமருகஜாதி (மதிமு)

(ம-ராஜன்-வ-ம்.) ஹேமதியினைநிகர்த்தவதனி பார் யானிப்போதுன்னை மருவுதற்குத் தருந்த ஞாயமன்று ஏனெனில்பார்)

வெண்பா.

பெண்ணிற்பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண்டாகப் பெறின்.

அதாவது ஒருவன்பெறும் பெயர்க்குட் கற்புடையமனைவியைத்தவிர வேறொன்றுமில்லையென்று சொல்லப்பட்டிருக்கின்றது அப்படியிருக்க யானிப்போதுன்னைக் கூடும்புகலத்திலுனது கற்புநிலைமை யழிந்துபோவதுமன்றிநீயென்னை நாயகனென்றும் யானுன்னைமனைவியென்றும் பின்கூறச்சொல்லுதற்கு ஞாயமில்லை ஹேமின்னே அப்படி ஞாயமில்லாமற் கலவி செய்வோர்களெலலாம் மிருகஜாதிக்குச் சமானமேயன்றி வேறில்லை யாகையால் நாமிருவரும் விவாகஞ்செய்துகொண்டபின் இஷ்டப்படி நடக்கத்தடையில்லையல்லவா. நீயெனதறகுள் ளாத்ரப்படுகின்றனைபெரியோர்கள் (பேதைமையென்பதுமாதரக்கணிகல) மென்பதுசாரியாயல்லவோ விருக்கின்றது ஹேசாரி பார் அப்படி யிருந்தபோதிலும் உன்னைப்போலொத்த மாதர்களைக் கண்டாலது பழகிக்கொள்வாயாக.

(மனோ-வ-ம்.) மஹாராஜ பாருங்க ளிப்போதெனது தேகமானது புண்ணாயிருப்பதற்கிசைவாக இந்தமலரணையுங் கொதிப்பதனா லெனக்கு விரகஞ் சகிக்கமுடியவில்லை ப்ரபு.

(ம-ராஜன்-வ-ம்.) காதல்கொண்டகாந்தாய் பார்.

விருத்தம்.

மன்றல்மிகுமலர்வாடல் நற்குயிற்கூவுதல
வளைகடலுமுழ் நழுவுதல
மதிகளபமுங் கொதித்தல்விருள்வருத்துதல்

மயங்குதற்றுயில்சோருதல்
அன்றிலிசைபாடுதற் பூவணைவெதும்புதல்
அன்னமறுசுவைகசத்தல்
அல்குல்தனம்விம்முதற்றேகமும் நடுக்குதல்
அணிவீணைநாதமிடுதல்
என்றுறங்காதிருத்தற்கடலிடித்திடல்
இதழூறல்வெறிமீறுதல்
இனியபன்னீர்வெதும்பற்றேமிற்படருதல்
இலகுபெருமூச்சுவிடுதல்
தென்றலவீசற்றுவல்கண்ணீர் வரல்விரக
தெரிவையர்க்குப்பகையிதாம்

———*———

அதாவது வாசனைபொருந்திய மலர்களான் துவாடுதல் குயிலானது கூவுதல் கரத்திலணிந்திருக்குங்கடகமுதலானபணிகளானது நழுவல்-சந்திரனும் (பீதம்-கலவை-வட்டிகை-புலி) யென்றகளபங்கள் கொதித்தல் இருளானது வருத்தல்மயக்கமுண்டாதல் இடையிலணிந்திருக்குமாடையவிழ்த்தல் அன்றிலானது செவிக்கின்பமுறப்பாடல் மலரணையானது வெதும்பல்அன்னமும்(கைப்பு-தித்திப்பு-புளிப்பு-உவர்ப்பு-துவர்ப்பு-கார்ப்பு) முதலானவறுசுவைப்பதார்த்தங்களானது ங்கசத்தல் அல்குல்தடித்தல் கொங்கையானது பருத்தல் சதாகாலமும் நித்திரைகொள்ளாதிருத்தல் கடலானது முழங்கல்இதழானதூறல் வெறியானதுமிகுத்தலபரிமளமிகுந்தபன்னீரானது வெதும்பல் ஸ்தனங்களிற்றேமற்படரல் அடிக்கடிபெருமூச்சுவிடல் தென்றலானதுசாடல் கண்ணீர்வடியல் முதலானகுறிகளானது விரகதாபங்கொண்டமின்னார்களுக்கு விரோதமென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றதே ஹேமாதே நீகொண்டகாதலினாலுனக்கிந்த மலரணையானது கொதிக்கத்தான் செய்யும்அதற்காகப் பதிவிரதாதர்மத்திற்குப் பங்கஞ்செய்யப்படுமாவென்ன

===[*]===

(மனோரஞ்சிதன்தரு)
கரவடியா-லேனதேரே
என்ற-இந்துஸ்தானியின்-வர்ணமெட்டு





இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சகிவருவாள் போகச்சொல்வோமெனது
சகிவருவாள் போகச்சொல்வோம

அநுபல்லவி.

சுகுணகெம்பீரதிட — துரையையெனது (சகி)

சரணம்.

சுந்தரரூபா — சந்தனமார்பா
தந்தைமனந்தெரிந்து — வந்துசொல்லவே (சகி)

===(*)===

(மனோ-வம்.) ஹேப்ரபுதாம் சொல்வது ஞாயமாகத்தானிருக்கின்றது நல்லதுஎனது சகியானவளிவ்விடத்திலுள்ளகாவற்காரர்கள் வந்திருக்கின்றார்களாவென்று பார்த்துவரப் போயிருக்கின்றாள் இப்போதுவந்துவிடுவாள் அவளையெனதுதந்தையிடத்திற்கனுப்பி என்தந்தையி னபிப்பிராயந்தெரிந்து வரும்படிசெய்கின்றேன் தாம்சற்றுசயனித்திருங்கள் ப்ரபு.

———(*)———

(ம-ராஜன்சொல்-தரு.)
மானச்சஞ்சலரே-ப்ரமண்ய-மானசசஞ்சலரே
என்ற-இந்துஸ்தானியின்வர்ணமெட்டு
இராகம்-நவ்ரோஜ்-தாளம்-ஆதி.

பல்லவி.

எப்படிநம்புவேநான் பெண்ணே
யெப்படிநம்புவேநான்

அநுபல்லவி.

அப்பனுன்மொழிதனை — பொப்புவரென்று
செப்பியவசனங்கள் — தப்பிதமாச்சோ (எப்ப)

===o===

(ம-ராஜன்-வம்.) ஹேமாதேபார் உன்தந்தையானவர் உனதுவார்த்தைக்கட்டி சொல்லமாட்டாரென்றுநீயென்னிடஞ்சொன்னதை யனுருதியாகநம்பி யுனக்குச் சம்மதங்கொடுத்திருக்க இப்போது சகிவாட்டுந் தந்தையினபிப்ராயந்தெரிந்து வரும்படி

செய்கின்றேனென்று என்னிடஞ் சொல்லவந்தனையே ஹேவஞ்சி இந்தான் போக்யனைத பார் உனது தந்தையபிப்ராயங்கொட்டாவிடி னது வார்த்தைபொய்த்துப்போய்விட்டதல்லவோ ஹேநாரிஇ னிமேலுனது வார்த்தையை நம்புவதெப்படியார்.

விருத்தம்.

ஆலகாலவிஷத்தையுநம்பலாம்
ஆற்றையும்பெருங்காற்றையு நம்பலாங்
கோலமாமதயானையை நம்பலாங்
கொல்லும்வேங்கைப் புலியையுநம்பலாங்
காலனார்விடுதூதரை நம்பலாங்
கள்ளர்வேடர்மறவரை நம்பலாஞ்
சேலைகட்டியமாதரைநம்பினாற்
தெருவில்நின்று தியங்கித்தவிப்பரே.

———(*)———

என்னும் நீதிநூல்களிற் சொல்லியது சரியாகவேமுடிந்தது (சமுத்திரத்தினாழமறிந்தபோதினுந் தையலருடைய மனத்தினை றந்) தெரிவது அரிதென்பதற்கையமில்லை. க்ஷணப்போதேனு மெனக்கிங்கிருக்கப் பிரியமில்லையாதலா லதிசீக்கிரமெனது நகரத்திற்கேக விடையளிப்பாயாக.

(மனோ வ-ம்) ப்ரபு யான் பொய்சொல்வேனென்று கிஞ்சிற்றேனும் நினைக்கவேண்டாம் இது சத்யமானவாக்யம் அதிசீக்கிரம் நம்மைவந்து அழைத்துக்கொண்டு போகும்படி செய்கின்றேன் சும்மாசயலிருங்கள் மஹாராஜ.

(ம-ராஜன்-வ-ம்) அப்படியானால நல்லது உனதிஷ்டம் போற சபனித்திருக்கின்றேன் மாதாய.

———(*)———

ஆதிமூலமேயென்னையாள்வாயோ வினை
கப்படவேர்தேடியென்குறைகேளாயோ
என்றவிர்த்தன்னியின்னாண்டுமட்டு
இராகம்-எதுக்குலகாம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னசெய்குவேன்—மண்ணமார்களே நம்
இறைவனின்னும்வரக் காணேமே



அநுபல்லவி.

பன்னகங்கடித்தங்கே யிறந்தாரோ நித்ரை
பண்ணுவதினால்நம்மை மறந்தாரோ இனி (என்)
புலிகரடிசட்டினை யானாரோ வேறு
பூவைபரைக்கண்டுபின் போனாரோ இனி (என்)
மங்களநகரிற்குச் செல்வோமே யெல்லாம்
மந்திரியிடத்தினிற் சொல்வோமே இனி (என்)

———[-]———

(வேட-வம்.) ஹே அண்ணமார்களே பாருங்கள் நமதிறைவன் தண்ணீர் சாப்பிட்டுவருவதாகச் சொல்லிப்போனவர்வெகுநேரபர்யந்தம் வராதிருப்பதென்னகாரணம் ஆஆ ஒர்சமயஞ்சர்ப்பந்தீண்டியிறந்தாரோ அல்லது மிருகஜாதிகளுக்கிரையாகிவிட்டாரோ வேறேதாவதுபெண்கள் மாய்கையிற் சிக்கிக்கொண்டாரோ அல்லது வேறேதாவது வேட்டையாடிய களைபினாலெங்கேனும் படுத்துநித்திரைசெய்கின்றாரோ ஆஆ ஒன்றுந் தெரியவில்லையே நல்லதுநாம்நமது மங்களநகரத்திற்குச்சென்று மந்திரியிடத்திலிது விபரத்தையறிக்கைசெய்வோ மண்ணமார்களே.

(மற்றவேட் வம்.) அப்படியேபோவோம் வாருங்களண்ணமார்களே.

———]*[———

{ தர்மாநந்தானமஹாராஜன் இரண்டாவதுசபை. }

(த-ராஜன்-வ-ம்.) கோன்ரேசேவக.

(சேவ-வ-ம்.) ஜீமஹாராஜ.

(த-ராஜன்-வ-ம்.) ப்ரதான்கா.

(சேவ-வ-ம்) அம்குமாலும்னைமஹாராஜ.

(த-ராஜன்-வ-ம்.) ஜல்திபுலாலேக்ராவ.

(சேவ-வ-ம்.) அச்சாமஹாராஜ.

(மந்-வ-ம்.) மஹாராஜ வந்தனம்புரிகின்றேன்.

(த-ராஜன்-வ-ம்.) கல்யாணப்ரதான் ஸ்ரேஷ்டா.

(மந்-வ-ம்.) என்னைச்சீக்கிரமழைத்துவரும்படி யாக்ஞாபித்தருளிய காரணம்யாது ப்ரபு.

===(-)===

(த-ராஜன்-ஜாவளி.)

சாரசாக்ஷவாலபெட்டு வோ

என்றஜாவளியின் வர்ணமெட்டு

இராகம்-பியாகு-தாளம்-ஆதி

பல்லவி.

சேதியொன்றுமறியேனே
தெரிந்துவருவேனே

அநுபல்லவி.

பேதமில்லாமலேயிச்சிம் மாதனத்தினிலிருந்து
மேதினியோர்களபுகழ நீதியரசாள்வீர்மந்த்ரி(சேதி)

சுந்தரபாண்டியராஜன் சிந்தையிலிருக்குமெண்ணம்
எந்தவிதமென்றறிந்து வந்திடுவேனெனதன்மந்த்ரி(சேதி)

——=[o]=——

(த-ராஜன்-வ-ம.) ஹேப்ரதான் பாரும் நாம் சுந்தரபாண்டியமஹாராஜாவுக்குப் படமும் பத்ரிகையுமனுப்பியிருந்ததில்நாளதுவரை யாதொருசங்கதியுந் தெரியவில்லையே ஆகையால்யானிப்பொழுது சுந்தராபுரிக்கிச்சென்று ராஜனைக்கண்டு சங்கதிதெரிந்துவருகின்றேன், யான்வருமவரை தாமிந்தவரசாக்ஷிக்கிடையூறின்றிப் பாதுகாத்துவரவேண்டும் ப்ரதான்.

(மந்-வ-ம.) நல்லது அப்படியே பார்த்துக் கொள்கின்றேன் போய்வாருங்கள் மஹாராஜ.

{ சுந்தரபாண்டிய மஹாராஜன்
நான்காவது சபை. }

(சு-ராஜன்-வ-ம.) யாரடா இவிடத்திற் சேவகன்.

(சேவ-வ-ம.) ப்ரபு வந்தனம் புரிகின்றேன்.

(சு-ராஜன்-வ-ம.) ப்ரதானேனின்னும் வரவில்லை.

(சேவ-வ-ம.) என்னகாரணமோ தெரியவில்லைமஹாராஜ.

(சு-ராஜன்-வ-ம.) சீக்கிரமழைத்துக்கொண்டு வருவாயாக,

(சேவ்-வ-ம.) அப்படியேயழைத்துவருகின்றேன் மஹாராஜ.

(மந்-வ-ம.) மஹாராஜவந்தனம் புரிகின்றேன்.



(சு-ராஜன்-வ-ம.) கல்யாண்ப்ரதான் ஹேப்ரதான் (தர்மசந்தானமஹாராஜனை விவாகஞ் செய்துகொள்ள நமது குமாரத்திக்கிப் பிரியமிருக்கின்றதாவென்று படத்தைக்காட்டி யபிப்பிராயந் தெரியவேண்டுமே வீண்காலகாரணமென் செய்யவேண்டும்.

(மந்-வ-ம.) இப்பொழுதே (மனோரஞ்சித)த்தை யழைத்து வரும்படி செய்து கேட்டுத்தெரிகுவோம் மஹாராஜ.

——(*)——

(சு-ராஜன்-ஜாவளி)

ஏலராசாபை சாதுராமோஹமு

என்ற ஜாவளியின் வர்ன மெட்டு

இராகம்-இந்துஸ்தானி-காபி-இந்துஸ்தானி-ஆதிதாளம்

பல்லவி.

வந்தாளோவல்லையோ மகள்மனோரஞ்சிதம்

அநுபல்லவி.

நந்தவனம்போன சுந்தரகண்மணியினள்(வந்)

சரணம்.

அமுதருந்திடுதோ மாசகைப்பியப்போது
சுமழ்மலர்ச்சோரந்தனைக் காணவேகியமாது(வந்)

(சு-ராஜன்-வ-ம.) ஹேப்ரதான் பாரும் நந்தவனத்திற் புஷ்பங்கள்களைப்போனதைப்பார்த்து வரச்சென்ற வெனதுகண்மணியான மனோரஞ்சிதம் இன்னும் வந்ததும் வராததும் தெரியவில்லையே போஜனஞ் செய்யப்போகுஞ் சமயமாயிற்றே என்செய்கின்றது ப்ரதான்.

(மந்-வ-ம.) சேவகனையனுப்பித் தெரிந்துவரச் சொல்வோம் மஹாராஜ.

(சு-ராஜன்-வ-ம.) நல்லது அப்படியே சீக்கிரம்போய்ப்பார்த்துவரச் செய்வீராக.

{ தர்மசந்தான மஹாராஜன் சுந்தரபாண்டிய
மஹாராஜனைக் காணுதல். }

(த-ராஜன்-வ-ம. யாரடா இவிடத்திற் சேவகன்.

(சேவ-வ-ம.) ப்ரபு வந்தனம்புரிகின்றேன்.

(த-ராஜன்-வ-ம்.) கல்யாணசேவகா அடாசேவகா இதற்கு முன்(மனோரஞ்சித)த்தைவிவாகஞ் செய்துகொள்ளும் பொருட்டுத் (தர்மசந்தானமஹாராஜ)னிடமிருந்து படம்வந்திருந்ததா மல்லவா அதற்கிறைவனென்ன யோஜனை செய்திருக்கின்றார்.

(சேவ-வ-ம்.) ப்ரபு அந்தராஜனுக்குத்தான் கொடுக்கவேண்டுமென்று பேசிக்கொள்கிறார்கள் ப்ரபு.

(சு-ராஜன்-வ-ம்) ஷபாஷ் நல்லது இப்போ திறைவனென்னடாசெய்கின்றார்.

(சேவ-வ-ம்) ப்ரபுசிம்ஹாசனத்தில் வீற்றிருக்கின்றார்.

(த-ராஜன்-வ-ம்) நல்லது சந்தமாபுரிக்கிறைவனாகிய(தர்மசந்தானமஹாராஜன்) வந்திருப்பதாகத் தெரிவிப்பாயாக.

(சேவ-வ-ம்.) ஆஆ தாங்கள்தானா நல்லது இதோ தெரிவிக்கின்றேன்மஹாராஜ * ப்ரபு (தர்மசந்தானமஹாராஜா) வந்திருக்கின்றார் ப்ரபு.

(சு-ராஜன்-வ-ம்) அப்படியானால் விட்டுவிடுவாயாக.

(சேவ-வ-ம்.) ப்ரபு வரும்படி யுத்திரவாகி யிருக்கின்றது போய்வாருங்கள்.

(த-ராஜன்-வ-ம்.) ப்ரபு வந்தனம்புரிகின்றேன்.

(சு-ராஜன்-வ-ம்.) கல்யாண்கோவே இதோவிச் சிம்ஹாசனத்தில் வீற்றிருப்பீராக.

(த-ராஜன்-வ-ம்.) அப்படியேயிருக்கின்றேன்,

(மந்-வ-ம்.) மஹாராஜ வந்தனம் புரிகின்றேன்.

(த-ராஜன்-வ-ம்.) கல்யாண்ப்ரதான்

(சு-ராஜன்-வ-ம்.)ஹேகோவே நீரிவிடத்திற்கு ப்ராப்தமான காரணம்யாது

(த-ராஜன்-வ-ம்) ப்ரபு பாருங்கள் யான் பெண்வேண்டுமென்று தமக்குப் படத்துடன் பத்திரிகையனுப்பி யிருந்ததில்நாளதுவரை யாதொரு ஜவாப்புங் கிடைக்காததினால் அதைத்தெரிந்து போவதற்காக வரலாயிற்று ப்ரபு

(சு-ராஜன்-வம்.) ஹேஅரசே பாரும்எனது புத்திரியை யுமக்குத்தான் கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றோம் அனாலனது குமாரத்தியி னபிப்பிராயந் தெரிந்துகொண்டு உம



க்குப் பதிலெழுதலாமென்று யோஜித்துக்கொண்டிருக்குந் தருணத்தில் நீரும் வந்துவிட்டீர் நல்லது எனதுசெல்வி நந்தவனத்திற்குப் போயிருக்கின்றமையால் வந்தவுடன் கேட்டுத்தெரிந்துகொண்டு உமக்குத்திரவுகொடுக்கின்றோம் வேந்தே.

(த-ராஜன்-வ-ம்.) ப்ரபு அப்படியே செய்யுங்கள் யானதற்குள்ளாக இந்நகரத்தைச்சுற்றிவேடிக்கைபார்த்துவருகின்றேன்

(சு-ராஜன்-வ-ம்.) அப்படியே போய்வாருங் கோவே.

(மந்-வ-ம்.) அடாசேவகா நமது (மனோரஞ்சிதம்)நந்தவனத்திற்குப் போயிருந்தவள் அந்தப்புரத்திற்கு வந்துவிட்டனளா அல்லது இன்னும்வரவில்லையாவென்று பார்த்துவருவாயாக.

(சேவ-வ-ம்.) அப்படியே பார்த்துவருகின்றேன் ப்ரபு.

——[*]——

(தர்மசந்தானமஹாராஜன் துரியெண்ணம்.)

(த-ராஜன்-வ-ம்.) ஆஆ நமது கோரிக்கை யிப்பொழுதுதானீடேறிற்று நல்லது நாமந்த(மனோரஞ்சித) மிருக்கும் நந்தவனத்திற்குச்சென்று அவளைக்கண்டுபேசி முன்னாடியேயோதித்து வருவோமிப்போது.

——*——

(சகி-வ-ம்.) மாது ஸ்ரீவந்தனம் புரிகின்றேன்.

(மனோ-வ-ம்.) கல்யாண்சகி யேன் துணைவி காவற்காரர்கள்வந்திருக்கின்றார்களாமென்ன.

(சகி-வ-ம்.) ஒருவரையுங் காணோமம்மணி.

(மனோ-வ-ம்.) புஷ்பங்கள் களவுபோயிருப்பது வாஸ்தவந்தானா சகி.

(சகி-வ-ம்.) ஆமம்மணி.

(மனோ-வ-ம்.) நல்லது காவற்காரர்களுக்குச் சொல்கின்றேன்வழி அவர்களாலேதான் களவுநடக்கின்றது நல்லதிருக்கட்டும் பேசிக்கொள்வோம்.

——(-)——

(சகியர் ஜாவளி.)

இகம்யாலனே வாவிபொந்து இந்முகி சாலுனே

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

இவராரம்மா கூறம்மா எங்கிருந்துவந்தா
ரிவராரம்மா கூறம்மா

அநுபல்லவி.

இந்திரனோ சந்திரனோ எது மறி கிலேனே (இவ)
மன்மதனோ சண்முகனோ மல ரணை யிதி னி (இவ)

(சகி-வ-ம்.) ஹேமாது ஸ்ரீபார் இம்மலாணையின்மீது சந்த்ரனைப்போற் பாசாளித்துக்கொண்டு நித்திரைசெய்யுஞ் சுந்தரபுருஷன்யாவர். இவரெங்கிருந்துவந்தார் யாதொன்றுந் தெரியவில்லையே ஹேஅழ்மணி சீக்கிரஞ்சொல்லல்வேண்டும்.

(மனோ-வ-ம்.) ஹேசகிபார் இவரிருப்பது (மங்களநகரம்) பெயர் (மதனசுந்தரமஹாராஜா) இவர்வேட்டையாடவந்தவர் நமது தடாகத்திற் ஜலமருந்திவிட்டு நமது (மனோரஞ்சிதச்சோலை)யோரத் சயனித்திருந்தவரை யான்கண்டு இங்கு அழைத்துவந்தேன் சகி.

(சகி-வ-ம்) ஹேநாரி பார் இவருடைய ரூபலாவண்யத்திற் குத்தகுந்த நாமதேயதானம்மா.

(மனோ-வ-ம்) ஹேசகி பார் யான் சொற்பனத்திற் கண்ட புருஷனிவர்தான்சகி

(சகி-வ-ம்.) அப்படியா ஆகு இப்பேர்க்கொத்த தேஜசுடையவர்களைச் சொற்பனத்திற் கூடிவிளையாட நீயென்னதவஞ் செய்தனையோமாதே.

(மனோ-வ-ம்) ஹேசகி யானிவரை விவாகஞ்செய்துகொள்ளக்கருதினவளா யிருக்கின்றேன உனதபிப்பிராயம் யாதுசீக்கிரஞ்சொல்வாயாக.

(சகி-வ-ம்.) அவருன்னை விவாகஞ் செய்துகொள்ளச் சமாதானமுடையவரா யிருக்கின்றாரா சொன்ன.

(மனோ-வ-ம்.) சம்மதமில்லாமல் நமதுசிங்கார மண்டபத்திற்கு வரக்கூடுமோசகி.

(சகி-வ-ம்.) ஹேமாதுஸ்ரீபார் பூர்வத்திற்செய்த புண்யமோ அல்லது முன்னோர்கள்செய்த மாதவமோ உனக்கிப்படி யழகு



டையநாயகன் கிடைத்தார் இவரைவிவாகஞ் செய்துகொள்வதற் கபிப்பிராயமுங் கேட்கவேண்டுமோசொன்ன.

(மனோரஞ்சிதந்-தரு.)

பதசா பதசா நதமுனி ஜனசுகம்பா
வனசரிதகரு ணாகரஸ்மர
சுந்தரங்கவி பாவரீசமனோக்ஞநுத பதசா பதசா
என்ற க்ருத்தியின் வர்ணமெட்டு
இராகம்-காம்போதி-தாளம்-சாபு

பல்லவி.

சகியே சகியே நீகவிரைவுடனேபோயி
தயவுடனெனது தந்தையிடமொரு
சங்கதிசொல வேணுமடி சகியே சகியே

அநுபல்லவி.

சுகமுடனேயொரு ராஜதுரைதன்னைக் கோவேயுன்
மகள்மணஞ்செய வாவழைத்தனள்
வந்தழைத்திடு வீரெனவே (சகி)

(மனோ-வ-ம்.) ஹேசகிபார் நீசீக்கிரமாயெனது தந்தையிடத்திற்குச்சென்று (மங்களநகர) த்திற்கிறைவனாகிய (மதனசுந்தரமஹாராஜா) வானவர் வேட்டையாடவந்தவரை நமது (மனோரஞ்சித)ங்கண்டு அவரைவிவாகஞ் செய்துகொள்ளவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு அந்தராஜனைச் சிங்காரமண்டபத்திற்கழைத்துவந்திருக்கின்றாள். நீங்கள் எதிர்சென் றழைத்துவந்து விவாகமுகூர்த்தம் நடப்பிவைக்கும்படி சொல்லியனுப்பினாளென்று சீக்கிரமறிக்கைசெய்து வருவாயாக.

(சகி-வ-ம்.) ஹேமாதுஸ்ரீ யான்போய்ச் சொல்வதைப்பார்க்கிலும் நீயுங்கூடவருவது மிகுந்தநன்மையா யிருக்கின்றது சோதாய்.

(மனோ-வ-ம்.) ஹேசகி நாமிருவரும் போகும்பக்ஷத்திலிவரெழுந்தெங்கேனும் நடந்துவிட்டா லென்செய்கின்றது.

(சகி-வ-ம்.) நித்திரை செய்துகொண்டிருக்கக் கூடியவரெங்கெழுந்துபோகப்போகின்றார்மாதே.

(மனோ-வ-ம்.) ஆனால்ப்படியே போய்வருவோஞ்சகி.

——>[*]——

(காவற்காரர்ஜாவளி.)

மருபாரிதாள்லேனுரர்

என்ற ஜாவளியின் வர்னமெட்டு

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி

பல்லவி.

வெகுநேரமாச்சுதே யண்ணே

சரணங்கள்.

பூக்கள் தனையிப்போது பார்க்கமனோரஞ்சிதஞ்
சீக்கிரம்வரச்சொன்னாளே (வெகு)
இந்தவேளையவட்கு முந்தியேநாமிருவர்
நந்தனவனம்போவோம் (வெகு)

——(o)——

(காவ-வ-ம்.) ஹே அண்ணேபார் நமதரசி புஷ்பங்கள் களவுபோனதைப் பார்க்கவேண்டுமென்று நம்மைச்சீக்கிரம் வரும்படி யாக்ஞாபித்திருந்தாளல்லவா அப்படியிருக்க வெகுநேரமாய் வீட்டிற்காலகரணஞ்செய்து விட்டோம இப்போதாவது நந்தவனத்திற்குப் போவோமண்ணே.

(மற்றகாவ-வ-ம்.) ஹேஅண்ணே இதுநேரத்திற்குள் நமதரசிவந்தாலும்வந்திருப்பள் அப்படியேசீக்கிரம்போவோமண்ணே.

——(*)——

(த-ராஜன்ஜாவளி.)

ரம்மனவே சாமினி

என்றஜாவளியின்வர்னமெட்டு

இராகம்-இந்துஸ்தானிகாபி-தாளம்-ஆதி

பல்லவி.

இந்தவனம் யாருதோ

அநுபல்லவி.

சுந்தரபரிமள கந்தமலர்கள்சூழ்(இந்த)

54



சரணம்.

மங்கைமனோரஞ்சிதந் அங்கநந்தனவனம்
எங்கையோதெரியிலே யிங்குசெல்வோமிப்போ(இந்த)

—o(*)o—

(த-ராஜன்-வ-ம்.) ஆஆ நாமிவ்வளவுதூரம் நடந்து வந்தும் இன்னும் மனோரஞ்சிதத்தினுடைய நந்தவனமானது இன்னவி டத்தி லிருக்கின்றதென்று தெரியவில்லை நல்லது இப்பேர்ஜிவி டத்தில் மிகுந்த வாசனையுடைய மலர்ச்செடிகள் சூழ்ந்த நந்தவ னமொன்று தெரிகின்றது அதற்குட்போய் வேடிக்கையாய்ப்பா ர்த்துவருவோமிப்போது. ஆஆ முன்னம்மிடம்வந்திருந்த சஞ்சி விமுனிவர்கொடுத்த புஷ்பங்களைப்போலிங்கு தோன்றுகின்றன வே நல்லது இன்னுஞ் சமீபத்திற்போய்ப்பார்ப்போம். ஆஆ இ து(மனோரஞ்சித) புஷ்பந்தானகையாலிது (மனோரஞ்சித)த்தினு டைய நந்தவனத்திற்குத் தடையில்லை ஆகினும் முனிவர் சிலவ டையாளங்கள் சொல்லியிருந்தாரே அவைகளிருக்கின்றதா வெ ன்றுபார்ப்போம். ஆஆ இதோ வொரு பெரியதடாகந் தோன்று கின்றது. அதோவொரு மண்டபந்தெரிகின்றது. ஆஆ இது (ம னோரஞ்சித)த்தினுடைய நந்தவனத்திற்குச் சந்தேகமில்லை நல்ல து நாமிந்த(மனோரஞ்சித)ச்செடியிற் கொஞ்சம் புஷ்பங்கள் பறி த்துக்கொண்டு அப்பாலந்த (மனோரஞ்சித) மிருக்குமிடத்தைத் தேடிச்செல்வோம். ஆஆ இந்த மலர்களென்ன வாசனையைத்த ருகின்றது நல்லது நாம் ராஜரீகமானவுடுப்போடு அந்த (மனோர ஞ்சித) மிருக்குமிடத்திற்குச் செல்லும்பக்ஷத்தில் அவள் நம்மை க்கண்டமாத்திரத்தில் யாரோ வொருராஜன் வருகின்றானென்று வெட்கப்பட்டொளிந்துகொண்டால் நாம்கண்டு பேசமுடியாது. ஆகையாலிப்போது நாம் தரித்திருக்கும் ஆபரணம் உடுப்புகள் வகையாவைக் கழட்டி மூட்டைகட்டி இவ்விருக்ஷத்தின் மீது வைத்துவிட்டு ஒரு பழங்கந்தைவேஷ்டி தரித்துக்கொண் டவளி டம்போகும்பக்ஷத்தில் அவள் நம்மிடம் நாணமில்லாமற் பேசு வள் அப்பாலவள் மனக்குறிப் பறிந்துகொள்ளக் கூடுமாகை யால் இப்போதப்படியே வேஷமாறிப்போவோம்.

(காவற்காரர்-தரு)

உன்னைநம்பினேனானே யென்னையாள் முருகோனே
என்றகீர்த்தனையின் வர்ணமெட்டு
இராகம்-இந்துஸ்தானிதோடி-தாளம்-சாபு.

பல்லவி.

நந்தனவனம்வந்து நாமளுஞ்சேர்ந்தோமே

அநுபல்லவி.

சுந்தரமின்னாள் வந்திடச்சொன்னாள் (நந்த)

——(*)——

(காவ-வ-ம்) ஹேஅண்ணே பார் நமதரசியினுத்திரவுப்படி நந்தவனத்திற்குவந்து சேர்ந்துவிட்டோம் ராஜபுத்ரி யின்னும் வரவில்லைபோ லிருக்கின்றது கல்லது நாமிருவரும் புஷ்பச்செடிகளைச் சுற்றிப்பார்த்துவருவோம்.

(மற்றகாவ-வ-ம்.) அப்படியே போய்ப்பார்ப்போமண்ணே.

(காவ-வ-ம்) ஹேஅண்ணேபார் (மனோரஞ்சித)ச்செடியோரமாக யாரோவொருமனுஷன் பழங்கந்தைத்துணிதரித்துகொண்டுகள்வனைப்போல்விழிக்கின்றானவனையாரென்றுபார்ப்போம்.

(மற்றகாவ-வ-ம்) அப்படியே செய்வோமண்ணே.

—[0]—

(காவற்காரன்-ஜாவளி.)

செய்யாடலகுதகிநிரா சாமி
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு
இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னுமலிங்குவந்ததேனடா வுனைப்
பண்ணுதிமிசைசெய்வேனடா

அநுபல்லவி

அண்ணுவிதோபா — நற்புதமலர்களை
யாவனுடனேபறித் — தானையா இள
னுவனுடனேபறித் — தானையா ராஜ
பூவையிடங்கொண்டுபோ — வேனையா அடா (என்)



(காவ-வ-ம்) அடாநீ கொஞ்சமேனும் நெஞ்சமஞ்சாமலிங்குவந்து புஷ்பங்களைக் கவர்ந்தனையா துஷ்டா பார் தினசரிகாலமும் நீதான் திருடிப்போவாய்போலிருக்கின்றது. அடா கள்வாபார் இதோவெனது கரத்திலிருக்குங் கட்கத்தாலுனதுசிரத்தைக்கண்டித்து விட்டாலென்னமூர்க்கா * ஹேஅண்ணே பாரிந்தக்கள்வன் நமது(மனோரஞ்சித)ப்புஷ்பங்களைப்பறித்து மடியிலொளித்துவைத்திருக்கின்றான் இவனை நமதரசியிடங் கொண்டுபோயொப்பித்து அவளுத்திரவின்படி செய்வோமண்ணே.

(மற்றகாவ-வ-ம்.) அவனைக்கட்டிப் பிடித்துக்கொண்டுவா நமதரசியிடம்போவோம்.

(காவ-வ-ம்) அப்படியே செய்கின்றேன் * நடந்துவாடா துஷ்டா.

(சு-ராஜன்-வ-ம்.) ஆஆ தெய்வமே என்னையிந்தக் கஷ்டத்திற்காளாக்கி வைத்தனையா. ஆஆ (சஞ்சீவிமுனிவர்வாக்குப்பஞ்சாய்ப்பறக்கலாச்சு) கரும்பு கட்டோடிருந்தா லெறும்புதானாய்வரு)மென்பதைவிட்டுவிட்டு(ஆத்திரக்காரனுக்குப்புத்திமத்திப)மென்பதுபோல இங்குவந்தது பிசகானகாரிய மாகிவிட்டது (ஊம்பக்கனவுகண்டா லொருவரிடமுஞ்சொல்லாதே) யென்பதுபோல் இதையாரிடத்திற் சொல்லுகின்றது. அப்படியேவருகின்றேனப்பா.

(மனோரஞ்சிதந்தந்தையைக்காணுதல்.)

(மனோ-வம்.) பிதாவந்தனம்புரிகின்றேன்.

(சு-ராஜன்-வம்) கல்யாணபுத்ரி

(சகி-வ-ம்) மஹாராஜவந்தனம் புரிகின்றேன்.

===*===

(மனோரஞ்சிதன்-தரு)

அச்சாப்பாணியாப் ரனமனஜா யோரே
என்றஇந்துஸ்தானியின்வர்ணமெட்டு
இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி

பல்லவி.

கூட்டிவரச்சொன்ன தென்னையா வென்னை
கூட்டிவரச்சொன்ன தென்னையா

அருபல்லவி.

தாஷ்டீகமிகுமொந்தன் தந்தையேகீரிப்பக(கூட்)

---

(மனோ-வ-ம்.) என்னையழைத்துவரும்படி யாக்ஞாபித்தருளியகாரணம்யாது பிதா?

(சு-ராஜன்-வ-ம்.) ஹேகண்மணியார் நீசுந்தரநாயகன்வேண்டுமென்று கேட்டுக்கொண்ட பிரகாரம் யானனேக தேசங்களிற் றூப்புவைத்து விசாரித்ததில் (சந்தம்புரி)க்கிறைவனாகிய(தர்மசந்தானமஹாராஜ)னைத்தவிர வேறேசுந்தராகாரங்களிந்தப்பூலோகத்திலெங்குங் கிடையாதென்று வெளியானதின்பேரில் அந்தராஜனுடைய படத்தைத் தருவித்திருக்கின்றேன். அதைப்பார்த்துனதபிப்பிராயத்தைத் தெரிவிப்பாயாக.

(மனோ-வ-ம்.) ஆனாலப்படத்தை யெடுங்கள்பார்ப்போம்.

(சு-ராஜன்-வ-ம்.) ¶ இதோபார் சுதாய்.

(மனோ-வ-ம்.) ஹேபிதா பாருங்கள் தாங்கள்தானே வென்னைப்பரிகாசஞ்செய்யவேண்டும் பாருங்கள் நமதும்மைடைப்பள்ளியிற் பரிஜாரகஞ்செய்யும் (பேக்கலவாடு)க்குக்கூடச் சமானமில்லையே அப்படியிருக்க என்னைவிவாகஞ்செய்துகொள்ளச் சொல்வது ஞாயமாபிதா.

(சு-ராஜன்-வ-ம்.) ஹேபுத்ரியார் உன்னிட மெவ்வளவு ரூபலாவண்யமுடைய படங்களைக்காட்டினபோதினும் நீயேளனஞ்செய்கின்றனையேயன்றி ஒப்புக்கொள்கின்றதே யில்லை. இனியென் செய்கின்றது.

(மனோ-வ-ம்.) ஆனாலிதைவிட ரூபலாவண்யமுடைய நாயகனைக்கண்டுபிடிக்க வுங்களால் முடியாதாவென்ன.

(சு-ராஜன்-வ-ம்.) எங்களாலொருபோது முடியாதம்மா.

(மனோ-வ-ம்.) ஹேபிதா யான்கொண்டுவருகின்றேன் பார்க்கின்றீர்களா.

(சு-ராஜன்-வ-ம்.) அப்படிக்கொண்டுவரும் பக்ஷத்திலுனதிஷ்டப்படி விவாகஞ் செய்துவைக்கச் சித்தமாயிருக்கின்றேன் புத்ரி.

(மனோ-வ-ம்.) ஹேபிதா பாருங்கள்(மங்களநகர)த்திற்கிறைவனாகிய (மதனசுந்தரமஹாராஜா)வானவர் நமது நந்தவனத்திலி



ருக்குஞ் சிங்காரமண்டபத்தில் வந்திருக்கின்றார் அவரையான் விவாகஞ்செய்துகொள்ள ப்ரீதியுடையவளாயிருப்பதால் அதிசீக்கிரம் நமது மந்த்ரிப்ரதானிகளை விடுத்து அழைத்துவரும்படி செய்து விவாகமுகூர்த்தம் நடப்பிவையுங்கள் பிதா.

(சு-ராஜன்-வ-ம்.) ஹேகண்மணி அந்தவேந்தன் நமது சிங்காரமண்டபத்திற்கு வந்தகாரணம்யாது.

(மனோ-வ-ம்.) பிதாபாருங்கள் அந்தராஜன் வேட்டையாடிவிட்டுத் தாகந்தீர்ப்பதற்காக நமது நந்தவனத்திலிருக்குந் தடாகத்திற்கு வந்தவரை யான்கண்டுபேசித் தீர்மானஞ்செய்துவந்திருக்கின்றேன் பிதா.

(சு-ராஜன்-வ-ம்.) ஆஆ அப்படியா மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று நல்லதப்படியே செய்கின்றேன்.

(மனோ-வ-ம்.) ஆனாலியானந்தப்புரஞ் செல்கின்றேன்.

(சு-ராஜன்-வ-ம்.) அப்படியேபோய்வா நந்தனி * ஹேபிரதான் இப்போதுவந்திருக்குமரசன் நல்ல ரூபலாவண்யமுடையவனாகத்தானிருப்பான்போ லிருக்கின்றது நல்லது நீர் நமதுசிப்பந்திகளோடு நந்தவனத்திற்குச்சென்று அந்த மன்னனைச் சீக்கிரமழைத்துக்கொண்டு வருவீராக.

(மந்-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் மஹாராஜ.

—[*]—

{ காவற்காரர்கள் மனோரஞ்சிதத்தை காணுதல். }

(காவ-வ-ம்.) மாதுஸ்ரீ வந்தனம்புரிகின்றோம்.

(மனோ-வ-ம்.) கல்யாண காவற்காரர்காள் ஹேகாவற்காரர்காள் யானுங்களை நந்தவனத்திற்குவரும்படி சொல்லியிருந்தேனே யேன்வரவில்லை.

(காவ-வ-ம்.) ஹேஅரசி பாருங்கள் யாங்கள்போஜனஞ்செய்துவிட்டிங்குவருதற்குக் கிஞ்சிற்று காலகாணமாகிவிட்டது. அப்பால்வந்து பார்த்ததிற் றங்களைக்காணோமம்மணி.

(மனோ-வ-ம்.) நல்லது நீங்களிப்போதெங்குவந்தீர்கள் சமீபத்திற் கட்டுப்பட்டுநிற்கும் மனுஷன்யாவன்.

(காவ-வ-ம்.) மாதரசிபாருங்கள் நமது நந்தவனத்திற் றின சரிகாலமும் புஷ்பங்களைக் கவர்ந்துபோகுங்கள்வனாகிய இவனின்று நமது(மனோரஞ்சித)ப்புஷ்பங்களைப் பறித்துக்கொண்டிருக்கும்போது கண்டுபிடித்து வந்தோமம்மா.

(மனோ-வ-ம்.) ஆஆ இவன்தானோ நல்லது இந்தத்துஷ்டனை நமது சிறைச்சாலையி லடைத்துவிடுங்கள்.

(காவ-வ-ம்.) அப்படியே செய்கின்றோமம்மணி * நடந்து வாடாகள்வா.

(த-ராஜன் வ-ம்.) ஆஆ இவ்வளவு ரூபலாவண்யமுள்ளடைய பெண்ணைக் கட்டியணையாமல் விட்டுவிட்டுச் சிறைச்சாலையிலடைபடும்படியான விதியா நமக்குக்கிடைத்தது.

===[*]===

(த-ராஜன் புலம்பற்றரு.)

கௌசிகன் கோபத்தைக் கண்டாயோசந்த்ர மதியே
என்ற அரிச்சந்த்ரநாடகத்தருவின் வர்னமெட்டு
இராகம்-பிலஹரி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

எதுக்குவீணாக வென்னைப்படைத்தனை தெய்வமே-இந்த
மாதுக்குள்ளகப்பட்டு வருந்திடவைத்தனை தெய்வமே
மாலையிடவேயெண்ணி வந்தவிடத்திலே தெய்வமே-அவ
கோலம்வருமென்றோர் குறியேனுங்காணேனே தெய்வமே
என்னசெய்வேனினி யெவ்விதமுய்குவேன் தெய்வமே-அயன்
சென்னியிலெழுதிய திருவெழுத்திதுதானோ தெய்வமே.

---

(த-ராஜன்-வ-ம.) ஆஆ தெய்வமே இதற்காவென்னைப்படைத்தனை * நல்லதப்பா அப்படியே நடந்துவருகின்றேன்.

——*——

விருத்தம்

மதனசுந்தரராஜேந்தரன் மகிழ்வொடுதுயின்றயின்று
வதிவிரைவினி லெழுந்து வரினவமைக்காணாதாலே
பதிதனக்கேகினளோ பாவியும்நம்மையிந்தச்
சதிசெயலாமோவென்று சஞ்சலப்படுகின்றானே.

——(o)——



(ம ராஜன் தரு.)

மரியாதகாதுரா
என்ற த்யாகராஜக்ருத்தியின் வர்னமெட்டு
இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி

பல்லவி.

மரியா தை தானிதோ

அநுபல்லவி.

பிரியே னெனப் பேசிய காரிகை
தெரியா மலே சென்றனள்

ப ம ப காம ரிகம காரி ஸநிஸ தானி ஸரிக தநி ஸரிக ஸாரிகம பதநிஸரிகம் காமகரி ஸநிஸதாநி பாப்பமகரி சநிச ரிகாம (மரியா)

---

(ம-ராஜன்-வ-ம்.) ஆஆ என்னாச்சர்யம் நம்மைவிவாகஞ்செய்துகொள்வதாகச்சொல்லி அன்போடழைத்துக்கொண்டுவந்து இம்மண்டபத்தில் நித்ரைசெய்யும்படி மொழிந்து சமீபத்தில் வீற்றிருந்தமங்கை யெங்குபோய்விட்டாளோ தெரியவில்லையே ஆஆ ஒர்சமயந் தனது நகரத்திற்குச் சென்றிருப்பளோ அப்படியிருக்கும்பக்ஷத்தில் நம்மிடஞ் சொல்லிக்கொண்டல்லவோபோகவேண்டும். ஆஆ மஹாபாதகி, நம்மையிப்படிச் சதிசெய்து போகலாமா. ஆஆ நம்மையிவ்வனத்தி லொண்டியாக விட்டுப்போனது அவளுக்குமரியாதையா. ஆஆ அவளுடைய ரூபலாவண்யத்தை நினைக்கநினைக்க மனமானது பதருகின்றதே ஆஆ இங்கவளைக்காணேமே. நல்லது அவளுடைய நகரத்திற்குச்சென்றாவது விசாரிப்போமிப்போது. ஆ ஆ இதோ வுன்னதமான கோபுரங்கள் தெரிகின்றனவே யவைதான் (சுந்தராபுரி)போற்றோன்றுகின்றது. நல்லது இன்னுஞ் சமீபத்திற் போய்ப்பார்ப்போம். ஆஆ இதோ பெரியவரமனை தெரிகின்றது ஆஆ சிலர்களங்கிருந்து மேளவாத்யத்துடன் கும்பலாக வருகின்றார்களே அதென்னகாரணமோ தெரியவில்லையே நல்லது இன்னுங்கொஞ்சம் சமீபத்திற்போய் விசாரிப்போம்.

==(*)==

{சுந்தரபாண்டியமஹாராஜாவுடைய மந்திரி தனதுசிப் பந்திகளோடுசென்றுமதனசுந்தரமஹாராஜனைக்காணல்.}

==(-)==

(மந்-வ-ம்.) ஹேசிப்பந்திகாள் பாருங்கள் அதோவருகின்றவரைப்பார்க்கில் ஓரரசனைப்போற் காணப்படுகின்றதே இவர்தான் (மதனசுந்தரமஹாராஜ)னாயிருப்பரோ.

(சிப்பந்திகள்-வ-ம்.) யாவரோ தெரியவில்லை ப்ரபு.

(மந்-வ-ம்.) ஆஆ இவர்முகத்தைப்பார்த்தாற் சூர்யனைப்போற் ப்ரகாசிக்கின்றதே ஆகையாலிவராகத்தா னிருக்கவேண்டும் நல்லது விசாரிப்போம்.

(சிப்-வ-ம்.) அப்படியே செய்வோம் ப்ரபு.

---

{மந்த்ரி மதன்சுந்தர மஹாராஜாவிடஞ் சம்பாஷித்தல்.}

---

(மந்-வ-ம்.) மஹாராஜ வந்தனம்புரிகின்றேன்.

(ம-ராஜன்-வ-ம்.) கல்யாண தாம்யாவர்.

(மந்-வ-ம்.) யான் (சுந்தரபாண்டியமஹாராஜா)வுடைய மந்திரிப்ரபு தமதுநாமதேயம்யாது.

(ம-ராஜன்-வ-ம்.) ஹேப்ரதான் பாரும் எனது நாமதேயம் (மதனசுந்தரமஹாராஜ)னென்று சொல்லப்படுவேன் நல்லதுநீங்கள் மேளவாத்யத்துடன் விமரிசையாக வந்தகாரணம்யாது இப்போதெங்குபோகின்றீர்கள்.

(மந்-வ-ம்.) மஹாராஜ தம்மையழைத்துப் போவதற்காகத்தான் வந்தோம்ப்ரபு.

(ம-ராஜன்-வ-ம்.) என்னவிசேஷம் ப்ரதான்.

(மந்-வ-ம்.) மஹாராஜ பாருங்கள் எங்களிறைவன் புத்ரியாகிய (மனோரஞ்சித)த்தைத் தாம்விவாகஞ் செய்துகொள்வதாகச் சொன்னீர்களாம் அதற்காகத் தம்மையழைத்து வரும்படியாக எங்களிறைவனனுப்பினார் ப்ரபு.

(ம-ராஜன்-வ-ம்.) மஹாசந்தோஷம் அப்படியே போவோம்வாருங்கள்.



(மந்-வ-ம்.) மஹாராஜ் இதுதான் கொலுமண்டபம் உள்ளே செல்லுங்கள் ப்ரபு.

(ம-ராஜன்-வ-ம்.) அப்படியேயாகட்டும்.

(மந்-வ-ம்) ப்ரபு வந்தனம்புரிகின்றேன்.

(சு-ராஜன்-வ-ம்.) கல்யாணப்ரதான் ஹேப்ரதான் இவர்யாவர்.

(மந்-வ-ம்) மஹாராஜ் இவர் தான் (மதனசுந்தரமஹாராஜா)

(சு-ராஜன்-வ-ம்.) அப்படியா மஹாசந்தோஷம்.

(ம-ராஜன்-வ-ம்.) ப்ரபு வந்தனம்புரிகின்றேன்.

(சு-ராஜன்-வ-ம்.) கல்யாணகோவே இதோவிந்தச்சிம்ஹாதனத்தில் வீற்றிருப்பீராக.

(ம-ராஜன்-வ-ம்.) அப்படியே யிருக்கின்றேன் ப்ரபு.

(சு-ராஜன்-வ-ம்.) ஹேப்ரதான் நமது புத்ரியினது புத்திசாலித்தனத்தைப் பார்த்நீரா.

(மந்-வ-ம்.) ப்ரபு பாருங்கள் புலிக்குப்பிறந்து நகமில்லாமற் போய்விடுமாவென்ன.

(சு-ராஜன்-வ-ம்) ஹேப்ரதான் நமது சேவகனை விடுத்துச் சீக்கிரம் பௌரோஹிதரை யழைத்துவரும்படி செய்யும்.

(மந்-வ-ம்) மஹாராஜ் அப்படியே செய்கின்றேன் * அடா சேவகா நமது பௌரோஹிதராகிய (கிஷ்ணசாஸ்திரி)யாரை அதிசீக்கிரமழைத்துவருவாயாக.

(சேவ வ-ம்) அப்படியேயழைத்துவருகின்றேன் ப்ரபு.

---

(பௌரோஹிதர்வருந்-தரு.)

சாமிகாநாதோ மாட்லாடாதெந்துரா

என்ற ஜாவளியின் வர்னமெட்டு

இராகம் கமாஸ் தாளம் ஆதி

பல்லவி.

கிஷ்ணசாஸ்திரிவந்தா ரிறைவன்சபைக்கி

சரணங்கள்.

பட்டிடையிற்றரித்துப் பஞ்சாங்கத்தைவிரித்துத்
திட்டமுடனேசிரித்துக் (கிஷ்)

சொன்னப்பூணநூல்மின்னத் தூயவேதியரென்ன
மன்னவனழைக்கச்சொன்ன (கிஷ்)

(பௌரோஹிதர் வ-ம்.) ஹேகோவே யென்னையழைத்துவரும்படியாக்ஞாபித்த காரணம்யாது.

(சு ராஜன் வ-ம்.) ப்ரபு.வந்தனம் புரிகின்றேன்.

(பௌ வ-ம்.) கல்யாண்கோவே.

(சு-ராஜன் வ-ம்.) ப்ரபுபாருங்கள் எனது குமாரத்திக்கிவிவாகமஹோற்சவம் நடக்கவேண்டியிருப்பதாற் பொருத்தம்பார்த்துச் சொல்லுங்கள் ப்ரபு.

(பௌ வ-ம்.) அப்படியா மெத்தசந்தோஷம் நல்லது புத்ரியின்பெயர்யாது மாப்பிள்ளையின் பெயர்யாதுகோவே.

(சு ராஜன் வ-ம்.)ப்ரபு புத்ரியின் பெயர்(மனோரஞ்சிதம்)மாப்பிள்ளையின்பெயர்(மதனசுந்தரமஹாராஜா ப்ரபு.

(பௌ வ-ம்) */* ஷபரீஸ் இரண்டுபேர்களுடைய பெயரும் பொருந்தியிருக்கிறதே பொருத்தமுஞ்சரியாகத்தானிருக்கும் நல்லது இதோ பஞ்சாங்கம் பார்த்துச்சொல்கின்றேன்ஆஆ ஹேகோவே பொருத்தங்களிருபேருக்குஞ் சரியாயிருக்கின்றது.

(சு-ராஜன்-வ-ம்) ஆனால் முகூர்த்தத்திற்கு நாட்பார்த்துச் சொல்லுங்கள் ப்ரபு.

(பௌ-வ-ம்.) ஹேவேந்தேபாரும் இன்று சோமவாரமும் ஸ்வாதிநக்ஷத்ரமுங் கூடியசுபதினமாகையால இரா ஏழுமணிக்குமேல் பத்துமணிக்குள்ளாக வருகின்ற சிம்ஹலக்னத்தில் திருக்கல்யாணமஹோற்சவம்நடப்பிவைப்பதுநலமாயிருக்கின்றது

(சு-ராஜன்-வ-ம்)ஆனால்தற்கென்னென்னவேண்டியதுப்ரபு

(பௌ-வ-ம்.) கோவேபாரும் பச்சையரிசி தேங்காய் வாழைப்பழம், நெய், வெல்லம்,கதலியிலை, தாம்பூலம்,குடம், சாம்ராணி, கோடிவஸ்த்ரம், மாவிலை, தர்ப்பை, சமத்துகள் முதலிய சாமான்கள்வேண்டும்.

(சு-ராஜன்-வ-ம்.) ஹேசேவகா பௌரோஹிதர் கேட்டவைகள் முழுதுந்தடையின்றிக் கொடுப்பாயாக.

(சேவ-வ-ம்.) ‡‡ அப்படியே கொடுக்கின்றேன்மஹாராஜ்.

(பௌ-வ-ம்.) பெண் மாப்பிள்ளையை ஸ்நானஞ் செய்யச்சொல்லிச் சிங்காரித் தழைத்துக்கொண்டுவந்து இந்த மணவறையில் வீற்றிருக்கும்படி செய்யுங்கோவே.



(சு-ராஜன்-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் * ஹேபாதன்பெண்மாப்பிள்ளையைச்சிங்காரித்தழைத்துக்கொண்டுவாரும்.

(மங்-வ-ம்.) அப்படியே யிதோ அழைத்துவருகின்றேன்.

(பௌ-வ-ம்.) ஹே பூபா இந்த மங்கையின் கரத்தைப்பிடித்துக்கொள்ளும்.

(ம-ராஜன்-வ-ம்.) அப்படியே பிடித்துக்கொண்டேன்ப்ரபு

(பௌ-வ-ம்.) ஹேமஹாராஜ் இவர்களைச் சுகமாய்வாழும்படி ஆகாசவாணி பூமாதேவி பரியத்தாரைவாருங்கோவே.

(சு-ராஜன்-வ-ம்.) நீங்களிருவருஞ் சுகஜீவிகளாய்வாழ்வீர்களாக

(பௌ-வ-ம்.) ஹேமாது ஸ்ரீ இவ்வம்மியின்மீதுன் பாதத்தைத்தூக்கிவைத்து அதோதெரிகின்ற அருந்ததிநக்ஷத்ரத்தைப்பாரம்மா § ஹேகோவே இந்தத் திருமாங்கல்யத்தை யெடுத்து இந்த மாதுசிரோமணி கழுத்திற் சூடுவீராக. ()

(கல்யாணமந்த்ரம்.)

ருதகும்ஸத்யம்பரப்ரம்ஹம் புருஷம்க்ருஷ்ணபிங்களம் ஊர்த்வரேதம்விருபாக்ஷம் விஸ்வரூபாய்வைநமோநமஃ ஓம் சாந்தி சாந்தி சாந்திஃ

——(*)——

(விவாகமஹோற்சவத்-தரு)

ஆதரித்தென்னையினி யாண்டருள்வாயே
அசட்டைசெய்வதுநீதி யலநீயே
என்றகீதாமிர்தசாரத்தின் வர்ணமெட்டு
இராகம்—பில்-தாளம்-ஆதி

பல்லவி.

மதனசுந்தரராஜன் மணம்புரிந்தானே
மனோரஞ்சிதமெனு மடமானை.

அநுபல்லவி.

அதிகசௌபாக்ய ரதியெனும்போக்ய
அரிவையர்காதல்கொள் ளங்கசன்போல்
மதிமுகமுமிலங்க மணிமுடியுந்துலங்க
மங்களசுபகர வாஞ்சையினால்(மத)

மாதர்களாட — வேதியர்பாட
வாணுலிகோர்கள்சா — மறைபோட
நீதபுகழ்வழங்கக் — கீதவொலிமுழங்க
கேசமந்திரிபிரதா — னியர்கூட(மத)

——(*)——

(பௌ-வ-ம்.) ஹேவேந்தே தமது புத்ரிக்கி மாங்கல்யதாரணமாகிவிட்டதாகையால் நமக்குரிய சோமன், படியரிசி, தாம்பூலம், தக்ஷிணை முதலானதுங் கொடுத்தல்வேண்டும்.

(சு-ராஜன்-வ-ம்.) ப்ரபு அப்படியேதருகின்றேன் * ஹேப்ரதான் நமது பௌரோஹிதரை யழைத்துக்கொண்டுபோய் அவருக்கு வேண்டிய வெகுமதி கொடுத்தனுப்புவீராக.

(மந்-வ-ம்.) மஹாராஜ் அப்படியே கொடுத்தனுப்புகின்றேன்.

விருத்தம்.

வேலினைப்பழித்தகண்ணாள் மின்மனோரஞ்சிதத்தை
மாலைசூடியபின்னந்த மதனசுந்தரராஜேந்திரன்
சீலமாய்ப்பள்ளிக்கேகித் தேவியுந்தானுமாகக்
கோலகொக்கோகலீலை குணமுடனடத்தினாரே.

——(-)——

(லீலாவிநோதத்-தரு)

மானேயங்கேபோன வகைபென்னடி பொல்லா
வம்பனிருக்கிற செம்பொன்மலைக்குள்ளே

என்றகவிக்குஞ்சரமையர்பதத்தின் வர்னமெட்டு

இராகம்-அடாணா-தாளம்-ரூபகம்

பல்லவி.

மானுள் தன்னைக்கூடி யணைந்தனனே சிலை
மன்மதனாலினிற் சொன்னபிரகாரம்(மா)

அநுபல்லவி.

தேனார்கமழ்மலர் — சேருந்திடவாகன்
செம்மல்மதனசுந் — தரதுரையேழுகன்,மானு)

சரணம்.

சித்திரமாகிய — மெத்தையெடுத்துவிரித்தாள்-நீரென்
சிந்தைக்கிசைந்திடு — சுந்தரனென்றுபசரித்தாள்
பத்தினிகன்னத்தில் — முத்தமதுதந்து
பாசக்கடலெனு — மாசையினல்முந்த(மா)

——*——



(ம-ராஜன்-வ-ம்.) ஹேப்ராணநாயகி பார் நாமிருவரும் அதிகசரசலீலா விநோதங்களெல்லாஞ்செய்து மகிழ்ச்சியடைந்தோமல்லவா நல்லது நீயிங்கிரு யானுனது தந்தையிருக்குமிடத்திற்குச் சென்றுவருகின்றேன்.

(மனோ-வ-ம்.) ப்ராணநாதபாருங்கள் யான்தம்மைப் பாராமலரைக்கணமேனுந் தனித்திருக்கமாட்டேனாகையாற் போய்ச் சீக்கிரம் வாருங்கள் ப்ரபு.

(ம-ராஜன்-வ-ம்.) ஹேப்ராணநாயகி அப்படியே போய்வருகின்றேன்.

——[*]——

{ மதனசுந்தரமஹாராஜன் மாமனாரைக்காணுதல். }

(ம-ராஜன்-வ-ம்.) மாமா வந்தனம்புரிகின்றேன்.

(சு-ராஜன்-வ-ம்.) கல்யாணமருகா ஹே மருகா பாரும் நீடித்தகாலமாயெனக்குச் சந்ததியில்லாமலிருந்து கடவுளுடைய க்ருபாகடாக்ஷவீக்ஷண்யத்தாலொரு புத்ரியைப்பெற்று இப்போதுமக்கு விவாகஞ்செய்து கொடுத்துவிட்டேன் யான் விர்த்தாப்யனாயிருப்பதா லினிமேலெல்லாஞ்சித ராஜ்யபரிபாலனஞ் செய்யச் சாத்யப்படமாட்டாதாகையால் இனிமேலெனக்குப் பதிலாக நீரேயிந்தச் சிம்ஹாதனத்திலிருந் தென்னைப்போல நீதிதவறாமல் மேன்மையாய்ச் செங்கோற்செலுத்திச் சுகஜீவியாய் வாழ்ந்துவருவீராக.

(ம-ராஜன்-வ-ம்) அப்படியே நடந்துவருகின்றேன் மாமா.

(சு-ராஜன்-வ-ம்) ஆனால் யானந்தப்புரஞ்சென்று வருகின்றேன்.

(ம-ராஜன்-வ-ம்.) அப்படியே போய்வாருங்கள் மாமா * கோன்ரேசேவக்.

(சேவ-வ-ம்.) ஜீமஹாராஜ்.

(ம-ராஜன்-வ-ம்.) நமது ப்ரதானேனின்னும் வரவில்லை.

(சேவ-வ-ம்.) என்னகாரணமோ தெரியவில்லை மஹாராஜ்.

(ம-ராஜன்-வ-ம்.) நல்லது யானந்தப்புரஞ்சென்று வருகின்றேன் நீயிந்தச் சிம்ஹாதனத்தைப் பார்த்துக்கொள்வாயாக.

(சேவ-வ-ம்) அப்படியேபார்த்துக்கொள்கின்றேன் மஹாராஜ்

## மங்களம்.

இராகம்-சுருட்டி-தாளம்-சாபு

பல்லவி.

மங்களமங்களம் ஜெயசுப
மங்களமங்களம்

அநுபல்லவி.

மங்களமங்களம் மதனசுந்தரத்திற்கும்
மதிமுகவசிகர மனோரஞ்சிதத்திற்கும் (மங்)

சுந்தரபாண்டியனுக்குந் தூயமனுநீதிக்கும்
மந்திரிபிரதானி மற்றுமுள்ளோருக்கும் (மங்)

---

வாழிவிருத்தம்.

கன்னிகைவுன்திரிமாதுக் காதலன் முருகன்வாழி
மன்னவுதிரலனாம்போற்று மதனசுந்தரவேளவாழி
மின்புமனோரஞ்சிதத்தின் மேன்மைநாடகமும்வாழி
இன்னிந்தனனிலுள்ள வெவ்வர்களும்வாழிதானே.

மனோரஞ்சிதநாடகம்.

முற்றிற்று.

11/7/34